ISSN 2424-6654



தமிழ்த் தூது

# தாயக ஒலி

THAYAKA OLI

41

இரு திங்கள் ஏடு



















வைகாசி - ஆனி 2019

விலை ரூபா 100/=




# AA Accounting & Business Solutions Associates

265 Haydons Road / London SW19 8TY

**Accountants and Management Consultants**

***for Efficient and Quality Professional Accounting Services***

**WE SPECIALIST IN**

- Year End Accounts Preparation
- Self Assessment Tax Returns
- Vat and TAX Investigations
- Management Consultancy
- Business Plans and Cash Flow Forecasts
- Book Keeping
- Solicitors Accounts
- Payroll Preparation
- Business Startup Advice
- Management Accounts

***Also through our contacts we are able to raise Finance for New Business***

Contact : UTHAYANAN or SASI
Mob: 0774 7794 358 / 07786 966 207 Tel: 020 8545 0205
www.aa-accounts.co.uk


LAE
Little ASIA
Wellawatte | Pettah
Festive Touch
317, 317A, Galle Road,
Wellawatte, Colombo 06.
T: +94 11 250 4470, 250 0098
F: +94 11 2508934
E: info@littleasia.lk | www.littleasia.lk
skype: asia.emporium
Follow us on
73, 75A, Main Street,
\Colombo 11.
T: +94 11 2391592, 2391593
F: +94 11 2391745
E: info@littleasia.lk | www.littleasia.lk
Skype: little.asia.silk

# சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்



# Rasiah & Co
## Solicitors

- Conveyancing
- Residential & Commercial
- Matrimonial
- Immigration
- Landlord & Tenants

**Tel : 020 8543 4040 Fax : 020 8543 2400**

180A, Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX : 300004 Wimbledon South
rasiahsolicitors@btconnect.com

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே”

# தாயக ஒலி

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி - ஆனி - 2019 வில் - 07 ஒலி - 41

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்.

## தாயக ஒலி

**பிரதம ஆசிரியர்**
த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)
தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**
தாயகன் (இலண்டன்), சி.பவன் (இலங்கை)

**மதியுரைக் குழு**
பேராசிரியர் சபா ஜெயராசா
பேராசிரியர் வ.மகேஸ்வரன்
வவுனியூர் இரா. உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
கதிரவேலு மகாதேவா
மாதுமை
சி.அருந்தவன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :**
கனடா : முருகேசு கிருபாகரன்
அ.பற்குணன்
இலண்டன் : சி.அருந்தவநாதன்
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்
பிரான்ஸ் : ச. சச்சிதானந்தம்

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை.
தொ.பேசி. : 0094(0)112364124
Email : editorthayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்.

- ஆசிரியர்

**உள்ளே ஒலிப்பவை**

பேனா முனையிலிருந்து.... 02

**கட்டுரை**
- யாழ்மாவட்ட பேண்தகு திட்டம் 04
- இலக்கியமும் கோட்பாடும் 09
- தமிழுக்குத் தொண்டு செய்தோன் 12
- எமது கலைகளை வளர்ப்போம் 22
- தமிழ் மணம் காப்போம் 40
- கவியரசர் கண்ணதாசனின் திரையிசைப்.... 45

**சிறுகதை**
- பிள்ளை கொடுத்த கொடை 06
- சிறகொடிந்த கிள்ளை 28

**கவிதை**
- தேடிப்பெற்ற கவிதைகள் 11
- விபுலானந்தர் 23
- அண்ணா நீ வாழ்க 24
- வேற்றுமையில் ஒற்றுமை 27
- யான் பெற்ற இன்பம் பெறுக 34
- துலங்குமின்; துலக்குமின் 39

**நூல் அறிமுகம்**
- தொடுதூரத்தில் விடிவானம் 21
- உணர்வுகள் கொன்றுவிடு 35
- தமிழ்த் தென்றலின் பவளவிழா மலர் 42

**தரிசனம்**
- வரலாறு படைத்த பெருவிழா 14

**கேட்டதைத் சொல்லவந்தோம்**
- பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் 19
- தமிழோடிசைபாடல் 37
- இளைஞர்களை எச்சரிக்கிறது 47

**சிந்தனைக் கருவூலம்**
- மாணவ சமூகமே வாசிப்பை.... 17
- தமிழ் அடையாள அரசியலின் 47

**செய்திகள்**
- பயங்கரவாத தாக்குதல்களை வன்மையாக..... 31
- இலங்கையில் கடும் வறட்சி 31

**நகைச்சுவைக் கதை**
- இலங்கையன் லேசுபட்டவனில்லை 33

**விருதுகள்**
- விருது விழா 25
- காசினியின் உலகசாதனை 26
- க.பாலேந்திராவுக்கு வாழ்நாள் விருது 33

**உங்கள் விருந்து** 44

**ஏனையவை**
- இரா.உதயணன் விருது - 2019 03
- சாதனையாளர் - வைசாலி யோகராஜன் 10
- சீரடி சாயி துதி 16
- இலட்சியம் காத்த இலட்சிய நடிகர் 20
- அந்தனிஜீவா வாழ்த்து 27
- நாய்கள் சரணாலயம் 32
- மேதினம் 32
- தாயக ஒலியின் அஞ்சலி 36
- பரிசுபெற்ற கவிதை 43

**பேனா முனையிலிருந்து....**



# படைப்புழுக்களின் தாக்கத்திலிருந்து விவசாயிகளுக்குக் கிடைத்தது என்ன?

போதைவஸ்துப் பாவனையை ஒழித்தல், டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழித்தல், நாடு முழுவதிலும் சவாலுக்குட்பட்டுள்ள குப்பைப் பிரச்சினைக்கான நிரந்தர முடிவைக் காணல் போன்ற பெரும் சவால்களை எதிர்கொண்டிருக்கும் எமது நாடு, மிகப்பெரிய பாரதூரமான விளைவை எதிர்கொண்டு தீர்வுக்காகப் போராடி வந்திருக்கிறது. விவசாயிகள் செய்வதறியாது பயிர்கள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் அங்கலாய்த்து சோகத்தின் மத்தியில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மொனராகலை மாவட்டம், அம்பாறை மாவட்டம், பொலநறுவை மாவட்டம் உட்பட வேறு மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப் பரப்பில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டிருந்தன. விரைவாகப் பெருகிவரும் படைப் புழுக்களின் தாக்கத்தால் சோளப் பயிர்ச் செய்கை முற்றுமுழுதான அழிவை எதிர்கொண்டது. மேலும் நுவரெலியா, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் இப்புழுக்களின் தாக்கம் கண்டறியப்பட்டது.

சோளப் பயிற்செய்கையை மட்டுமல்ல கரும்பு, மரக்கறிவகைகள், வாழை மற்றும் விளைபொருட்கள் என்பவற்றையும் படைப்புழுக்கள் தாக்கியுள்ள செய்திகளும் கிடைத்துள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரம் பெரும் பாதிப்பைக் கண்டுள்ளது. ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினை காரணமாக, அவர்களின் நிலையைப் பரிதாபத்திற்குரியதாக நோக்கவேண்டியுள்ளது. வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி பசி, பட்டினி அவர்களை விரட்டியது.

விவசாய அமைச்சர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். விவசாயக் காப்புறுதி பெற்றவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்று விவசாயக் காப்புறுதி நிறுவனம் அறிவித்திருந்தது. எப்படியிருந்த போதிலும் விவசாயத்தின் மூலம் எதிர்பார்த்த பலனைப் பெற்று பெற்ற கடனைத் தீர்க்க முடியும் என எதிர்பார்த்திருந்த மக்கள் உளரீதியான பாதிப்புக்களையும் எதிர்கொண்டுள்ளனர். ஏழை விவசாயிகளின் பொருளாதாரப் பிரச்சினை, குடும்ப வாழ்வின் முன்னேற்றத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது. அதே வேளை பட்ட கடனை எப்படி அடைப்பது, அதற்கான வழிகள் என்ன என்றும் அங்கலாய்த்து நிற்கின்றனர். விடிவுகாண முடியாத நிலைக்கு ஏழை விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

வெள்ளப்பெருக்கு, கடும் வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களால் சொல்லணாத் துன்பங்களைச் சந்தித்த மக்களுக்கு படைப்புழுக்களின் தாக்கம் பேரிடியைக் கொடுத்திருந்தது. இவ்விடயத்தில் அரசாங்கம் அக்கறை கொண்டிருப்பதும் அவதானத்துக்குரியது. பாராளுமன்றத்திலும் இந்த பிரச்சினை பரவலாகப் பேசப்பட்டுள்ளது.

எப்படியிருந்த போதிலும் தொடர்ந்தும் இந்த ஆபத்தான படைப்புழுக்களை அழித்தொழித்து இல்லாமல் செய்வதற்கான வழிமுறைகளை பொறுப்பானவர்கள் மிகத் துரிதமாகச் செயற்பட்டு ஏழை விவசாயிகளின் மீட்சியையும், நாட்டின் பெருளாதாரத்தையும் ஏற்றம் காண வைக்க வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

படைப்புழுக்களின் தாக்கம் நெற்பயிரையும் பாதித்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. படைப் புழுக்களின் தாக்கம் பற்றிய ஆய்வை பத்தமுல்ல நெல் ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் யானைகளால் ஏற்படுத்தப்படும் பயிர் அழிப்புக்களும் உயிர்ச் சேதங்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதினால் அதற்கான தீர்வைக்காண அங்கலாய்த்து நிற்கும் விவசாயிகளுக்கு படைப்புழுக்களின் தாக்கம் பெரும் வேதனையைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதற்கான முடிவுதான் என்ன? துன்ப துயரங்களும், பொருளாதார மீட்சியின்மையும் தொடர்கதைதானா? ஆம். கடும் வறட்சியினால் குளங்கள் வற்றிவிட்டன. நீர் இன்றி விவசாயிகள் பெரும் பாதிப்பைக் கண்டுள்ளனர். கால்நடைகளும் நீர் இன்றி அழிந்து கொண்டிருக்கின்றன. குடிநீர் இன்றி மக்கள் சொல்லணாத் துன்பங்களை அனுபவித்த வண்ணம் உள்ளார்கள். விவசாயிகளும், தொழிலாளர்களும் எமது நாட்டின் முதுகெலும்புகள் அவர்களின் இன்னல்களைப் போக்க முழு மூச்சுடன் செயற்பட வேண்டும் எப்போ தணியும் இந்த ஏழைகளின் துயரம்?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்......!

- ஆசிரியர்

அறிவிப்பு

**இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும்**
**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும்**
**இணைந்து வழங்கும்**

# இரா. உதயணன் இலக்கிய விருது – 2019

## பரிசு ரூபா 100,000/= (ஒரு லட்சம்)

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து இலங்கை மற்றும் அயலக படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் இரா. உதயணன் இலக்கிய விருது வழங்கிக் கௌரவிக்கவிருக்கின்றது.

இவ்வாண்டு நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், தமிழ் வளர்ச்சி இலக்கியம், அயலகப் படைப்பாளிகளின் நூல்கள் என விருதுக்காகப் பத்து (10) நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இரா. உதயணன் இலக்கிய விருதுடன் தலா ரூபா 10,000/= வீதம் ரூபா 100,000/= பணப் பரிசும் வழங்கப்படவிருக்கின்றன.

**இவ்வாண்டுக்கான விருதுத் தேர்வுக்காகப் படைப்பாளிகள் நூல்களை அனுப்பி வைக்கலாம்.**

* அனைத்துப் படைப்புகளும் முதல் பதிப்பாக இருத்தல் வேண்டும்.
* அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் தவிர்ந்த ஏனைய துறைசார் நூல்கள் அனைத்தும் இலங்கையில் வாழும் எழுத்தாளர்களினால் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
* நூல்கள் இலங்கையில் பதிப்பித்திருக்க வேண்டும்.
* ISBN இலக்கம் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

**அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள்**


* உலகின் எந்தப் பகுதியில் வாழும் எழுத்தாளர்களினாலும் எழுதப்பட்டிருக்கலாம்.
* உலகின் எந்தப் பாகத்திலும் பதிப்பித்திருக்கலாம்.
* சிறுகதை, நாவல் ஆகிய இரு துறைசார் நூல்களை மட்டும் அனுப்ப வேண்டும்.

**தேர்வுக்கான நூல்கள்**

* **அனைத்து நூல்களும் 2018 தை முதலாம் திகதி தொடக்கம் 2018 மார்கழி 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதிப்பித்திருக்க வேண்டும்.**
* **தேர்விற்காக மூன்று பிரதிகள் (நூல்கள்) அனுப்பப்பட வேண்டும்.**
* **நூல்கள் யாவும் 2019.06.30 ஆந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**
* **நூல்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

இரா. உதயணன் இலக்கிய விருது - 2019
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்,
இல. 9,2/1, நெல்சன் இடம்,
கொழும்பு-06, இலங்கை.

No.9,2/1 Nelson place,
Colombo 06, Sri Lanka



# யாழ்மாவட்ட பேண்தகு அபிவிருத்தித் திட்டம்

நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்

யாழ் மாவட்டத்தின் பேண் தகு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான ஐந்து வருடங் களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் முன்மொழிவு செய்யப்பட்டு வெளியிட்டு வைக்கப்படுகின்ற இச் சந்தர்ப்பத்தில் உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன். திட்டவரைவுகள் என்னிடம் சில நாட்களுக்கு முன்னர் அனுப்பப்பட்டதாயி னும் அவற்றைப் படித்து முழுமையான அறிவைப் பெறக்கூடிய நேரமோ, அவகாசமோ, சந்தர்ப்பமோ கிடைக்கவில்லை. எனினும் நேரம் வரும்போது அவற்றை முறையாகப் படித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு முயற்சிப்போம்.

வடமாகாணத்தின் நீர், நில அமைப்புக்கள் மற்றும் இங்கே மேற்கொள்ளப்படக்கூடிய அபி விருத்திகள் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டு ஐக்கிய நாடுகளின் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான நிதியத்தின் ஆதரவுடன் இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டு இன்று வெளியிட்டு வைக்கப்படுகின்றது. இந்த மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒன்றோடு ஒன்று தொடர்புப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களை அதன் பங்குதாரர்களை வைத்துக் கொண்டு தயாரிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட முன்னெடுப்புக்கள் மிக உதவியாகவும் ஏற்புடையதாகவும் காணப்பட்டுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட பல திட்டங்களை உள்ளடக்கிய இத்திட்ட முன்மொழிவுகளை தயாரிக்கும் பணிதிட்டமிடல் கிளை அதிகாரி களுக்கும் அதன் பங்குதாரர்களுக்கும் ஒரு புதிய அனுபவம் என்று நம்புகின்றேன். எம்மிடமுள்ள வளங்களையும் உதவிகளையும் ஒருங்கி ணைத்துக் கொண்டு அவற்றின் உதவியுடன் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக பயணம் செய்து இப்பகுதிகளை அபிவிருத்தி செய்யும் இப்பணி அவ்வளவு எளிதானதொன்றன்று. அவ்வாறான நேரங்களில் எல்லாம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் ஆதரவு தொடர்ச்சியாக எமக்கு கிட்டும் என்பது ஆறுதலைத் தருகின்றது.

போருக்குப் பிந்திய சூழலில் வடமாகாணத் தில் காணப்படும் அபிவிருத்தி உட்கட்டமைப்பு கள், மனித வளமேம்பாடு போன்ற இன்னோரன்ன விடயங்களைக் கண்டறிந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை இனம் காண்பதற் கும் அவற்றின் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை கண்டறிவதற்கும் புதிதாக தேவை மதிப்பீடு ஒன்றை செய்ய வேண்டு மென்று நான் தொடர்ந்தும் 2014ம் ஆண்டில் இருந்து வலியுறுயுத்தி வந்தேன். தற்போதும் கௌரவ பிரதம மந்திரியின் தலைமைத்துவத்தின் கீழ் மேற்படி தேவை மதிப்பீட்டிற்கான நட வடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அதன் போது பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு இச் செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன என்று நம்புகின்றேன்.

தேவைகளையும் வளங்களையும் இணைத்து, தேவையான நிதிமூலங்களைக் கண்டறிந்து எதிர் வரும் ஐந்து வருடங்களுக்கு யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற செயற்பாடுகள் சம் பந்தமான இந்த அறிக்கை எமது மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பேருதவியாக அமையும் என நம்பு வோமாக.

யாழ் மாவட்டத்திற்கான அபிவிருத்தித் திட் டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது அவை நிலைபேறாக நீடித்து நின்று செயற்படக் கூடிய வகையில் அத்திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். தந்திரோபாய நகர அபிவிருத்தித் திட்டம் பாதியில் தாமதமாகியது போல் தாமதம் ஏதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எமது கடப்பாடாகும் என்று கூறிவைக்கின்றேன்.

இத் திட்டங்களின் நோக்கு மற்றும் குறிக்கோள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு திட்ட முன்னெடுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இன்றிருக்கும் இரட்டை நிர்வாக செயற்பாடு மாகாண நிர்வாக வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதாக அமைந்தாலும் எங்கள் மாவட்ட வளர்ச்சி என்று வரும்போது நாம் ஒன்றிணைந்தே இயங்க வேண்டும். ஆனால் எமது நோக்குகள் சரியாக அமைந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அதாவது மாவட்ட, மாகாண ரீதியான பார்வை யும் வேண்டுகைகளும் தேவைகளும் சில சமயங்களில் தேசிய நோக்குடன் உடன்பட்டு வரமாட்டா. அந்தந்தச் சந்தர்ப்பங்களில் மாவட்ட, மாகாண நோக்குகளுக்கும் நெறிமுறைகளுக்கும் ஏற்ப நாம் நடந்து கொள்ளப் பின்னிற்கலாகாது. இன்று மத்தியைக் கோபம் ஊட்டிவிடுமோ என்ற எண்ணத்தில் மாகாண, மாவட்டத் தேவைகளை, நோக்குகளை அரங்கங்களில் முன்வைக்கப் பின் நிற்கின்றோம். மொழி இயலாமையும் அதற்கான ஒரு காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எது எவ்வாறிருப்பினும் எமது கொள்கைகளும் நோக்கும் பார்வையும் மாகாண, மாவட்டத் தின் தனித்துவத்திற்கு ஏற்றாற் போல் ஒத்துப் போகும் வண்ணம் அமைய வேண்டும் என்று கூறிவைக்கின்றேன். பணம் தரப்படுவது வெளிநாடுகளால். நடைமுறைப்படுத்தப் போவது மாகாணம் அல்லது மாவட்டம் ஆகிய நாங்கள் இதற்குள் மத்தி தனது அரசியல் ரீதியான அல்லது வேறு காரணங்களைக் கொண்டு திசைமாற்ற முனைவதை நாம் இடமளிக்க முடியாது. இதை நான் இவ்விடத்தில் தனித்துவமாகக் கூறவில்லை. பொதுவாக எமது நோக்கும், சிந்தனையும் இம்மாவட்ட, மாகாண நலவுரித்துக்களை நாடியே நகர வேண்டும் என்று கூறி வைக்கின்றேன். எவரையும் குறிப்பிட்டு இதைக் கூறவில்லை.

இத் திட்டங்களைத் தயாரித்து வெளியிட்டு வைப்பதுடன் எமது கடமைகள் முடிந்து விட்டது என வாளாதிருக்காது இத்திட்டங்கள் முறையாக நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா எனக் கூர்ந்து கண்காணித்து அதற்கான முழுமையான செயலுருவம் கொடுக்கப்படுகின்ற போதே இத் திட்டங்கள் முழுமைபெறும். எமது மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல தசாப்தங்களாக யுத்த சூழலில் அகப்பட்டு, பேரினவாத அரசுகளால் பாரபட்சமாக நடத்தப்பட்டு மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதனை நாம் எல்லோரும் அறிவோம். உரிய வேலைவாய்ப்புக்களின்றி இளைஞர்கள் விரக்தி மனப்பான்மையில் வாழ் கின்றார்கள். கல்வியில் முதலிடத்தில் இருந்த எமது மாவட்டம் இப்பொழுது கடை நிலைக்கு வந்துள்ளது. உயரிய குடும்ப விழுமியங்களையும் சமூக விழுமியங்களையும் கொண்டிருந்த எமது சமூகம் சீரழிந்து கொலை, கொள்ளை, போதைவஸ்துப் பாவனை, பாலியல் வல்லுறவு ஆகிய இழிநிலை நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டுகின்ற சமூகமாக மாறிவருகிறது.

எனவே இந்நிலைமைகளைச் சீர்செய்வதற் கான பூட்கைகளையும் உத்திகளையும் இனங் கண்டு எமது திட்டங்களில் உள்வாங்கிக் கொள் ளல் வேண்டும். வெறுமனே தொட்டுணரக் கூடிய அபிவிருத்தி என்று இல்லாது சமூக சமய இன வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான வளர்ச்சியை கல்வி, கலாசாரம், சமூக மேம்பாடு, வேலைவாய்ப்பு ஆகிய துறைகளை மேம்படுத்துவதன் மூலம் உறுதிப்படுத்தலாம்.

இங்கு விலாவாரியாக ஆராயப்பட்டு அறிக் கைகள் தயாரிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் நான் அவை பற்றி அதிகம் உரையாற்ற வேண்டிய அவசியமில்லை. உங்கள் முன்னெடுப்புக்கள் எமக்கு அனுசரணை அளிக்கும் வகையில் சிறப்பாக நிறைவேற இறையருள் வேண்டி இவ் அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு உதவிய அனைத்துத் தர உத்தியோகத்தர்கள், மேலதி காரிகள், திணைக் களங்கள், ஐக்கியநாடுகளின் பிரதிநிதிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறுகதை

# பிள்ளை கொடுத்த கொடை

காா.சிவநேசன் - உடுவில்



நல்லதம்பி அந்த ஊரில் தான் உண்டு தன் வேலையுண்டு என்று அமைதியாக வாழ்ந்து வந்தார். ஒரு சோலி சுரட்டுக்கும் போகமாட்டார். அதனால் அந்த ஊர் மக்கள் அவரில் நல்ல மதிப்பு வைத்திருந்தனர். மனைவி சீதனமாகக்கொண்டவந்த நான்கு பரப்புக் காணியுடனான ஒரு சிறிய கல்வீடுதான் அவர்களின் சொத்து. ஒரு பெண் குழந்தையை பெற்று, ஏதோ இருப்பதைக் கொண்டுதான் குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

நல்லதம்பி ஒரு கடையில் கணக்குப் பிள்ளையாகக் கடமையாற்றி வந்தார். முதலாளி அவரை வைத்து எல்லா வேலைகளையும் செய்விப்பார். சம்பளம் கறார்தான். ஏதோ தன்ர குடும்ப சீவியத்துக்கு அதாவது கிடைக்கின்றதே என்று திருப்திப்பட்டுக் கொள்வார். முதலாளியை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டார்.

ஒருநாள் மேசை லாச்சிக்குள் பத்தாயிரம் ரூபாயை வைத்துவிட்டு முதலாளி அவசரமாக வெளியில் சென்றுவிட்டார். அந்த விடயம் நல்லதம்பிக்குத் தெரியாது. நல்லதம்பிதான் கடையில் தனியே இருந்தார். சற்று நேரத்தில் முதலாளியின் மகன் கடைக்கு வந்து சிறிது நேரம் இருந்துவிட்டு, வீட்டுக்கு சில சாமான்கள் தேவை என்று எடுத்துச் சென்றுவிட்டான்.

முதலாளி கடைக்கு வந்ததும் மேசை லாச்சியை இழுத்துப் பார்த்தார். தான் வைத்த இடத்தில் பணத்தைக் காணவில்லை. ஆத்திரம் அடைந்த முதலாளி " இதற்குள் பத்தாயிரம் ரூபா காசு வைச்சுவிட்டுப் போனன் காணவில்லை. ஏன் உனக்கிந்த கள்ளவேலை. உன் மேல் வைச்ச நம்பிக்கைக்கு இப்படி துரோகம் செய்து விட்டியே சண்டாளா" என்று திட்டினார்.

ஒன்றுமறியாத அப்பாவியான நல்லதம்பி "என்னை நம்புங்கோ முதலாளி. இப்படிக் கள்ளவேலையை நான் செய்யமாட்டன். எனக்கு காசு இருந்ததே தெரியாது".

"நீ இல்லாமல் வேறு யார் இங்கு வந்திருப்பினம்; சொல்லு".

மகன் கடைக்கு வந்து போனவர்தான். ஆனால் அவர் காசு எடுத்ததைக் காணாதபோது எப்படி ஒரு பொய்யான தகவலைக் கொடுத்து அதைத் திசை திருப்புவது தவறு என்று எண்ணியவர் மௌனமாக முதலாளியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

சற்று நேரத்தில் பொலிஸ்சை வரவழைத்து அவர்களிடம் நல்லதம்பியை முதலாளி ஒப்படைத்தார்.

ஒன்றுமறியாத அப்பாவியை பொலிஸார் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு போனபோது ஊரே ஒன்றுகூடி வேடிக்கைப் பார்த்தது. "இந்தாள் இப்படிச்செய்யும்எண்டுநாங்கள்நம்பவேயில்லை" என்று பொதுசனம் தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள். ஒருவரும் நல்லதம்பிக்காகப் பரிந்துப்பேச முன்வரவில்லை என்பதுதான் வேடிக்கையான விடயம்.

"கந்தையர் கடையில் காசு களவெடுத்து, பொலிஸ் உன்ர புருசனைப் பிடித்துக் கொண்டு போறாங்கள்" என்று விடுப்புப் பார்த்துக் கொண்டு நின்ற பக்கத்துவீட்டு பறுவதம் வந்து சொன்னதும் ஏக்கத்தில் மாரடைப்பு வந்து நல்லதம்பியின் மனைவி விழுந்துவிட்டார். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவரைத் தூக்கிக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். அவர் இறந்துவிட்டதாக அங்கு அறிவித்து பிரேத அறையில் அவரின் உடம்பு வைக்கப்பட்டது.

இதற்கிடையில் பொலிஸார் நல்லதம்பியை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். நீதவான் சரீரப்பிணையில் அவருக்குப் பிணைவழங்கி, வழக்கை ஒருமாத காலத்திற்கு ஒத்திவைத்தார்.

மனைவி இறந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த நல்லதம்பி ஆஸ்பத்திரிக்கு

ஓடுகிறார். மனைவியின் பிரேதத்தை எடுத்துவந்து இறுதிக் கிரியைகளை நடத்தி முடித்தார்.

வீட்டில் தனிமை, ஆறு வயதுப் பெண் குழந்தையை மடியில் இருத்தி வைத்தபடி யோசிக்கலானார். மனைவியை இழந்த நிலையும் அத்தோடு கள்ளன் என்ற பழிச்சொல்லும் அவரை வாட்ட கத்தி அழவேண்டும் போலிருந்தது. அந்த வேளையில் அவருடைய பால்ய நண்பன் சேனாதிராசா துக்கம் விசாரிக்க வந்திருந்தார். நடந்தவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சேனாதிராசா, "நல்லதம்பி நீ ஒண்டுக்கும் யோசிக்காதை பிள்ளையின் எதிர்காலத்தை எண்ணியாவது கவலைகளைக் கொஞ்சம் கொஞ்சமாவது மறந்து வாழப்பழகிக்கொள், ஏதாவது உதவி தேவையானால் என்னிடம் சொல்லு" என்று ஆறுதல் வார்த்தைகள் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

நல்லதம்பி தனது மனைவியின் நகைகளை விற்று அதில் பத்தாயிரம் ரூபாவை எடுத்துக் கொண்டு கந்தையா முதலாளி வீட்டுக்குச் சென்று "இந்தப் பத்தாயிரம் ரூபாவால்தான் நான் கள்ளன் என்ற பட்டம் பெற்றேன். என் மனைவியைப் பறிகொடுத்தேன். இந்தாங்கோ களவுபோன உங்கள் பணம்" என்று சொல்லி தான் எடுத்து வந்த பணத்தை முதலாளியிடம் கொடுத்தார்.

கந்தையா முதலாளிக்கு நல்லதம்பி பணம் எடுக்கவில்லை என்பதும் தன்ர மகன்தான் எடுத்தான் என்பதும் நன்கு தெரியும். இருந்தும் தன் கௌரவத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதற்காகவும், வாற லட்சுமியை ஏன் விடுவான் என்ற நோக்கத்துடனும் நல்லதம்பியிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

அடுத்த தவணையில் வழக்கை கந்தையர் வாபஸ் பெற்றுக் கொண்டமையால் நல்லதம்பி விடுதலையானார்.

"வந்த துன்பம் எதுவானாலும் வாடிநின்றால் ஓடுவதில்லை. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற நிலைக்கு அமைவாக, பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் தமது மகளின் எதிர்காலத்திற்காக வாழலானார்.

"நல்லதம்பி தனிய இருந்து பொம்பிளை பிள்ளையை எப்படி வளர்க்கப் போறாய். துணைக்கு ஒரு கல்யாணத்தைக் கட்டிக் கொண்டால் நல்லதுதானே" என்று பலரும் அவருக்குப் புத்திமதி கூறி வந்தார்கள். யார் எது சொன்னாலும் கேட்டுக்கொண்டு மௌனமாக இருப்பார்.

நான் இன்னொருத்தியைத் திருமணம் செய்தால் வாறவள் என் பிள்ளையை தன் பிள்ளைபோல் வைத்துப் பார்ப்பாளோ தெரியாது. சிலவேளைகளில் சித்திக் கொடுமையால் என் பிள்ளை துன்பப்படக் கூடாது. எனவே திருமணம் செய்து கொள்வதில்லை என்ற உறுதியான மனத்துடன் பிள்ளைக்காகத் தனது ஆசாபாசங்களை எல்லாம் துறந்து வாழலானார்.

காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. மகள் வதனியும் வளர்ந்து திருமண வயதை எட்டிவிட்டாள். அவளுக்கு ஒரு வரனைத் தேடுவதில் பெரும் சிரத்தை கொண்டார். என் பிள்ளை திருமணம் செய்து கஷ்டப்படக் கூடாது என்பதற்காக குடிகூத்தி கெட்டபழக்கங்கள் இல்லாத ஒருவனைத் தேடலானார். தன்னுடைய மகளின் சிறப்பான வாழ்வே அவரின் முக்கிய குறிக்கோளாக இருந்துவந்தது.

தமது பால்ய நண்பர் சேனாதிராசாவின் ஒரேயொரு மகன் சுந்தரை மகளுக்குத் திருமணம் செய்து வைத்தார். தாங்கள் வாழ்ந்து வந்த வீடு வளவை மகளுக்குச் சீதனமாகக் கொடுத்து அவர்களுக்கு உதவியாக வாழ்ந்து வந்தார். காலாகாலத்தில் மகளும் இரண்டு பெண்பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள்.

வயது முதுமை, வருமானம் இன்மை என்ற காரணங்களால் மகள், மருமகனின் தயவில் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். வீட்டு அறைக்குள் கட்டிலில் படுத்துறங்கி வந்த மனிதன் வீட்டு மூலையில் பாயில் படுத்துறங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். விருப்பு வெறுப்புக்களைக் காட்டிக் கொள்ளாத நிலையில், அவர் மகள் கொடுக்கும் உணவை மட்டும் உண்டு காலங்கடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் மனவேதனையுடன் இருந்து வந்தார்.

காலக்போக்கில் ஒரு வேண்டாத மனிதராகத் தன்னை மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் பார்க்கிறார்கள் என்று உணர்ந்து கொண்டார்.

தான் அவர்களுக்குப் பாரமாக இருக்கிறேனோ என்ற நிலையை, நாளுக்கு நாள் நடக்கும் சம்பவங்களிலிருந்து தெரிந்து கொண்டார்.

"இஞ்சாரும் வதனி நான் எடுக்கிற சம்பளத்தில குடும்பச் செலவுகளைப் பார்த்து பிள்ளைகளையும் படிப்பிக்க வேண்டும். இந்த லட்சணத்தில் கொப்பாவையும் வைச்சுப் பார்க்கிறதென்பது இயலாத காரியம்".

"ஓமப்பா இந்தக் கிழடாலை எங்களுக்குப் பெரிய கஷ்டம். எங்கையும் போயிருக்கச் சொல் லலாம் எண்டால் அதுக்கும் வசதிவேணுமே".

"வதனி நீ என்ன செய்யிறியோ எனக்குத் தெரியாது. பிள்ளைகள் வீட்டுக்குள்ள ஓடி ஆடி விளையாட முடியாமல் கொப்பாவுக்குப் பயந்து நிக்குதுகள்".

"ஓமப்பா நானும் கவனிச்சனான். அவரை வேளைக்கு எங்கையாவது அனுப்பி வைப்பம். அப்பதான் நாங்களும் நிம்மதியாக வாழலாம். பிள்ளைகளும் பயமில்லாமல் ஓடிவிளையாடுங் கள்."

மகள் மருமகனின் சம்பாசணையைச் செவி மடுத்த நல்லதம்பி தன்நிலையை உணர்ந்து வேதனைப்பட்டு அழுதே விட்டார். மகளை எப்படி யெல்லாம் கஷ்டப்பட்டு வளர்த்தன். அவளும் என்னை வெறுக்கிறாள். பெரிய பாரமாக நினைக் கிறாள்.

'தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு' என்று முன்னோர் சொன்னது எவ்வளவு உண்மை. கட்டினவனைக் கண்டதும் பெற்றோரை வெறுத்தொதுக்குகிற ஒரு கலாசாரம் வளர்ந்து வருகின்றது. அதற்கு நான் என்ன விதிவிலக்கா? என்று பலவாறு தனிமையில் இருந்து சிந்தித்து வேதனைப் பட்டார். வீட்டில் அவரை ஒரு அவமானச் சின்னமாகவே எல்லோரும் கருதுவது அவருக்குப் பெரும் வேதனையைக் கொடுத்து வந்தது. இப்படி அவமானப்பட்டு இருப்பதிலும் பார்க்க இறந்து விட்டால் மேல் என்று எண்ணினாலும் அதனால் மகள் குடும்பத்தை ஊரார் வடு சொல்லிவிடுவார்களே என்ற நோக்கத்திற்காகத் தனது முடிவை மாற்றிக் கொண்டு, எதையும் தாங்கும் இதயத்துடன் இருக்கத் தலைப்பட்டார்.

மருமகனின் தந்தையார் சேனாதிராசா காலமானதன் பின் தாயாரை வைத்துப் பார்க்கும் பொறுப்பு சுந்தர் - வதனி தம்பதியினரைச் சார்ந்ததும்....

வதனி தன் தந்தையிடம் வந்து "நீ எனியும் இங்கு இருக்கக்கூடாது. மாமி இங்கு வந்து இருக்கப் போறா. அவவை வயதுபோன காலத்தில் நல்லாய் வைச்சுப் பார்க்க வேண்டும் என்று அவர் சொல்லுகிறார்".

"நீ எங்கயாவது போய் தொலையன். இஞ்ச எங்களுக்கு ஏன் பாரமாய் இருக்கிறாய்".

"எங்கையம்மா போறது"

"கோயில் குளம், அனாதை இல்லங்கள் எண்டு உங்களுக்காகத்தானே வைச்சிருக்கின்றாங்கள் தெரியாதே!"

மகளே இப்படிச் சொல்லிய பின்பும் தொடர்ந்து அங்கு இருப்பது வேதனையிலும் வேதனை. இரவு இருந்து தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை நினைந்து நினைந்து அழுது புலம்பிக் கொண்டிருந்தார்.

அதிகாலை ஒருவருக்குமே சொல்லாமல் நாற்பது ஆண்டுகள் தான் வாழ்ந்த வீட்டை விட்டு கால்போன போக்கில் நடக்கலானார் நல்லதம்பி.

இறுதியாகச் செல்வச் சன்னதி மடத்தில் தஞ்சம் அடைந்தார். இது கடவுள் விட்ட வழியா? அல்லது பெற்று வளர்த்த பிள்ளை கடைசி காலத்தில் அவருக்குக் கொடுத்த கொடையா?



**தமிழர் சமுதாயத்திலே வயதுபோன பெற்றோர்களை மதிக்காத, அவர்களை வெறுத்து ஒதுக்குகிற ஒரு கேடுகெட்ட கலாசாரம் தோன்றிவருவது ஒரு சாபக்கேடு. அப்படி நடத்துபவர்களுக்கும் முதுமை வரும்போது, இப்படியான நிலை தோன்றும் என்பதை மறந்துவிட்டார்கள் போலும்.**

# இலக்கியமும் கோட்பாடும்

- க.பஞ்சாங்கம் - புதுவை -

வாழ்ந்த வாழ்க்கையை எழுதுவது; வாழ நினைத்த வாழ்க்கையை எழுதுவது; வாழ முயன்று வாழ முடியாமல் போன வாழ்க்கையை எழுதுவது; வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க் கையை எழுதுவது என எப்படிப் பார்த்தாலும் இலக்கியமென்பது மனித வாழ்க்கையை மனிதர்கள் எழுதிப் பார்த்துக் கொள்ளுகிற ஒரு பாவனைதான். இலக்கியம் மனித வாழ்க்கையிலிருந்து பிறக்கிறது என்பதே இன்றைக்குக் கேள்விக்குரிய ஒன்றாக மாறி இருக்கிறது. மொழி தோன்றிய தொடக்க காலத்தில் வேண்டுமென்றால் இந்தக் கருத்து ஓரளவு பொருந்திப் போகலாம். ஆனால் முழுக்க முழுக்க மொழியால் ஊடகத்தால் கட்டமைக்கப்படும் மனித வாழ்க்கை என்றாகி விட்ட இன்றைய மின்னணு யுகத்தில் இலக்கியம் வாழ்க்கையிலிருந்து பிறப்பெடுக்கிறது எனச் சொல்ல முடியுமா? இலக்கியம், ஏற்கனவே மனித மூளையில், மனித நனவிலி மனதில் எழுதப்பட்ட கணக்கிலடங்கா பழைய இலக்கியப் பிரதிகளின் இருப்பிலிருந்துதான் எழுதப்படுகிறது என்று சொன்னால் அது தவறாகுமா? இதன் பொருள், ஒரு இலக்கியப் பிரதி இன்னொரு இலக்கியப் பிரதியை எழுதிக் கொள்ளுகிறது என்பதுதான். அதாவது மனிதன் வாழ்க்கையே இலக்கியத்தால் கட்டமைக்கப்படுகிறது என்பது இதன் பொருள்.

எழுத்து வடிவமற்ற, இலக்கணமற்ற, பேச்சு வழக்கை மட்டுமே கொண்ட, நிலையற்ற பல்வேறு நாடோடி மக்களின் சிறுசிறு குழுக்களின் வாழ்க்கையிலிருந்து ஏன் செவ்வியல் இலக்கியங்கள் பிறக்கவில்லை என்று எண்ணிப் பார்த்தால் தெரியும். ஒரு புதிய இலக்கியம் பிறப்பதற்கு வாழ்க்கை மட்டும் போதாது. ஏற்கனவே பல்வேறு வடிவங்களும், இலக்கியம் குறித்த கோட்பாடுகளும் அந்த மொழியில் பிறந்திருக்க வேண்டும் என்பதே உண்மை. இலக்கியச் செயற்பாட்டில் கோட்பாடுகள் எப்படி முக்கியத்துவம் பெறுகின்றன. உண்மையில் விலங்கு நிலையலிருந்து மனிதவாழ்வு என ஒன்று உருவானதே, இயற்கை கொடுக்கும் நெருக்கடியால் மனிதர்களின் இயங்குமுறையில் இயல்பாகவே வந்து ஒட்டிக்கொள்ளும் எதையும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்குக்குள், கோட்பாட்டுக்குள் அடைத்துப் போடுகிற தன்மையினால்தான். எனவே, கோட்பாடு என்பது வேறொன்றுமில்லை; மனித வாழ்வை குறிப்பிட்ட வரையறைக்குள் கொண்டு வருவதன் மூலம் இயற்கைக்குச் சமமான ஓர் அதிகாரத் தளத்தை மனிதர்கள் கட்டமைக்கிற முயற்சிதான்; அதனால்தான் டெர்ரி, ஈகிள்டன் போன்ற மார்க்சிய அறிஞர்கள், கோட்பாடு இல்லாமல் மனித நடவடிக்கை எதுவும் இல்லை; எனவே கோட்பாடு செழுமை இல்லாவிட்டால் இலக்கியச் செழுமையும் இல்லை என்ற கருத்தை முன் வைக்கின்றனர். மேலும் வடிவம் சார்ந்ததோ, உள்ளடக்கம் சார்ந்ததோ ஒரு உரையாடலை நிகழ்த்த கோட்பாட்டுப் பார்வை அடிப்படைத் தேவையாகின்றது. இந்த அளவிற்கு இலக்கியக் கல்வியில் கோட்பாடு இன்றியமையாத ஒரு தளத்தில் இயங்குகின்றது.

இத்தகைய கோட்பாட்டுப் பார்வை தமிழில் எவ்வாறு இயங்கி வந்துள்ளது என ஒரு வரலாற்றுப் பார்வை பார்ப்பது மிகவும் ஆர்வம் தரத்தக்க செயலாகும். சங்க இலக்கியக் காலகட்டத்தில் அறத்திணைக் கோட்பாடு, புறத்திணைக் கோட்பாடு என்ற கோட்பாட்டுப் பார்வை சங்க இலக்கியத்தைச் செழுமைப்படுத்தியுள்ளது. சங்க இலக்கிய அறப்புறக் கோட்பாடுகள் திணை சார்ந்து நிலம் சார்ந்து உருவாக்கப்பட்டவைகளாகும். உண்மையில் சங்க இலக்கிய காலகட்டத்தில்தான் தமிழ் இலக்கிய மரபும், கோட்பாட்டு மரபும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து இயங்கி இலக்கிய ஆக்கத்தின் உச்சத்தைத் தொட் டுள்ளன. தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் போன்ற ஒரு சிலர்தான் தொல்காப்பியரின் அகப்புறக் கோட்பாட்டைத் தமிழர், உலகிற்கு வழங்கிய அழகியல் கோட்பாடாகக் கண்டெழுதியுள்ளனர். இன்றைக்கு அய்யப்பபணிக்கர், கே.செல்லப்பன், மருதநாயகம் போன்ற ஆங்கிலப் பேராசிரியர் களும், ஏ.கே.ராமானுஜம் உட்பட ஹார்ட் போன்ற மேலைநாட்டுச் சிந்தனையாளர்களும்

அகப்புறப் கோட்பாட்டை இலக்கியக் கோட்பாட்டுச் சிந்தனையின் உச்சமாகக் கண்டு தெளிந்துள்ளனர்.

தமிழவன் 'ஸ்டரக்சுரலிசம்' என்ற தனது நூல் மூலம் மேலைநாட்டுக் கோட்பாடுகளாக அறியப்படும் அமைப்பியல், பின் அமைப்பியல் ஆகிய தத்துவார்த்தமான நுட்பமான கோட்பாடுகளைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர். அவருக்குத்தான் நம்முடைய அகப்புறக் கோட்பாட்டின் அருமை பெருமை உள்ளந்தொடும் அளவுக்கு உறைத்திருக்கிறது. எனவே நம்முடைய நிலம் சார்ந்த கோட்பாட்டை உலக அளவில் முன்னெடுக்க உலக நாகரீகம் வழங்கிய அனைத்து இலக்கியக் கோட்பாடுகள் குறித்த அறிமுகம் அவசியம் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. நம்முடைய ஆதங்கம் எல்லாம் மேலைநாட்டுக் கோட்பாட்டு நூல்களை நல்ல மொழிபெயர்ப்புகள் மூலம் துல்லியமாகப் புரிந்துகொள்வதற்கு வழிசமைக்கவேண்டும். அத்துடன் உலக அழகியலுக்கு நாம் புதிய இலக்கியக் கோட்பாடுகளை உருவாக்கி வழங்க முடியும். அனைத்தும் உலகமயமாகிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் இது மிகவும் அவசரமாக எண்ணிப் பார்த்துச் செயற்பட வேண்டிய ஒரு தளமாகும். இல்லையென்றால், நம்மைப் பிடித்த காலனித்துவ நோய் என்றைக்கும் நம்மைவிட்டுப் போகப் போவதில்லை. இலக்கியமும் கோட்பாடும் என்பது எவ்வளவு பெரிய உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதை அறியாத இனத்திற்கு விடுதலை என்பது சாத்தியமில்லை; சுயவாழ்வு என்பதும் உறுதியில்லை.

(யுகமாயினி)

**சாதனையாளர்**

# சாதனைகள் பல பெற்ற இளம் இசைத் தாரகை வைசாலி யோகராஜன்




2014ன் சக்தி யூனியர் சுப்பர் ஸ்ரார் மகுடத்தை தனதாக்கிக் கொண்டவர் தான் வைஷாலி யோகராஜன். அன்று முதல் இலங்கை வாழ் மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்தவர். பாரம்பரியமான இசைக்குடும்பத்தில் பிறந்த வைஷாலி கர்நாடக இசையிலும் கைதேர்ந்த பாடகியாவர் அதற்கு எடுத்துக்கட்டாக இலங்கையின் சிறந்த கர்நாடக இசைப் பாடகிக்கான ஜனாதிபதி விருதினை இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பெற்றவர் அதுமட்டுமன்றி அகில இலங்கைத் தமிழ்தினப் போட்டிகளிலும் பல தடவைகள் முதலிடம் பெற்றவர்.

சிறந்த குரல்வளம், சங்கதிகளைச் சரளமாகக் கையாளல், பொருத்தமான இடங்களில் ப்ருக்காக்களைப் பிரயோகித்தல் போன்ற அம்சங்கள் வைஷாலியின் சங்கீத ஞான பலத்திற்கு உறுதுணையாக அமைந்து வெற்றியளிக்கின்றன. இலங்கையின் பிரபலமான சபாக்களான கம்பன் கழகம், ஆலாபனா, நல்லை ஆதினம், இலங்கை வானொலி, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் போன்ற வற்றில் சிறுவயதிலே கர்நாடக சங்கீதக் கச்சேரிகளை அளித்து பல இசை வித்வான்களிடம் பாராட்டைப் பெற்றிருக்கின்றார்.

2016ம் ஆண்டு அவுஸ்திரேலிய மருத்துவ நிதியத்தின் அழைப்பின் பெயரில் அவர்கள் நடத்திய முத்தமிழ் மாலை இசை நிகழ்விலும் பாடியுள்ளார். தொடர்ந்து சிட்னி முருகன் ஆலயத்திலும் வைஷாலி கர்நாடக இசைக்கச்சேரி செய்துபெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

இவரின் திறமைகளை அறிந்து கிளீவ்லாணட் V.V சுந்தரம் என்ற இசை ஆர்வலரும் புரவலரும் ஆன பெரியார் இந்திய சபாக்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார். அந்த வகையில் ஸ்ரீபார்த்த சாரதி கர்நாட்டிக் மியூசிக் வேல்ட் சபாவில் 23-12-2018 இலும், ஸ்ரீகுருவாயூர்துரை மியூசிக் சென்டரில் 26-12-2018 லும், ஸ்ரீபார்த்த சுவாமி கோவில் பேயாழ்வார் சந்நிதியில் 30-12-2018 லும் இசைக் கச்சேரிகளை நிகழ்த்தி பல இந்திய வித்வான்களின் பாராட்டையும் பெற்றிருக்கின்றார். அத்துடன் சஸ்ரெயினிங் சம்பிரதாய (sustraining sambradaya) இசைப் பயிற்சி வகுப்புக்களிலும் பயிற்சி பெறும் வாய்ப்பும் வைஷாலிக்குக் கிட்டியது.

அவ்வகையில் திரு A.S முரளி, சேர்தலை ரங்கநாதன், சுகுணா வரதாச்சாரி, பூசணி கல்யாண ராமன் நாகை முரளீதரன் என்பவர்களிடமும் பயிற்சி பெற்று, பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறார். பதினைந்து வயது நிரம்பிய வைஷாலி எதிர்காலத்தில் சிறந்த பாடகியாகி எமது இலங்கைத் திருநாட்டிற்குப் பெருமை சேர்ப்பார் என்பது பலரின் எதிர்பார்ப்பாகும். 'தாயகஒலி'யும் தனது சார்பாக நல்வாழ்த்துக்களைத் வைஷாலிக்குத் தெரிவித்து மகிழ்கிறது.


## அடையாளங் கண்டு



"ஒரு மழை நாளின்
இறுதித் துளியின்
மெல்லிய வடிதலில்
வண்ணங்களைத் துறந்து
அழுக்கு வீதியில்
அமர்ந்திருந்த பொழுது
சிறுநீர் பெய்துவிட்டு
என்னருகில் மிகப் பவ்வியமாய்க்
குழைந்து கொண்டிருந்தது
ஒரு தெரு நாய்
எப்படியோ எனதன்பை
அடையாளங் கண்டு கொண்டு"

**- ஏ. தேவராஜன் -**

## பஞ்சுமிட்டாய்



வேண்டும் வேண்டுமென்று
வெறிகொண்டு குதிக்கிறாள்
மண்ணில் படுத்து உருளுகிறாள்
அவ்வீட்டை விட்டு நகர மறுக்கிறான்
தள்ளு வண்டிக்காரன்
மணியை வேகமாக ஆட்டியபடி
அழுகையையும் ஆடும் மணியையும்
நிறுத்த முடியவில்லை யாராலும்
பரனேறிய சாமியின் பரவசத்தைக்
காண முடிந்தது
கிடைத்துவிட்ட பஞ்சுமிட்டாயை
தின்று கொண்டிருக்கும் சிறுமியிடம்



**- மு.பழனியப்பன் -**



## காலமழை



"காலமழை
பொழியத் தொடங்கிவிட்டது
பருவ மழை
எந்த வருஷமும் போல இந்த வருஷமும்
இடியுடன்
மின்னலுடன்
பெருமழையாக சிறுதூறலாக
பெய்கிறது தொடர்ந்தது"

**- விக்ரமாதித்யன் நம்பி -**



## சகுனம்

சாலையோரம்
குறுக்கே செல்ல
காத்திருந்த பூனையை
வேகமாய் கடந்து நடந்தேன்

கிறீச்சிட்ட சக்கர சப்தம்.....
பூனையின் அலறல்.....
திரும்பிப் பார்த்தேன்

வீதி கடக்க முயன்ற பூனை
வேக வாகனத்தில் பட்டு....

பாவம் பூனை
சகுனம் பார்க்கவில்லை
போலும்!

**- சுப்ரமண்ய செல்வா -**





## நீ நலமா!

"காசி அண்ணன் பாடலிலே
பனை மரத்தின் நினைவு வரும்
நாம் - கள்ளடித்த பனைமரத்தின்
நினைவும் கூட வரும்
கள்ளுத் தந்த பனைமரமே - நீ
காணாமல் போனாலும்
கனத்த நினைவுகள் சுமந்தபடி
நலம் கேட்கிறேன் நீ நலமா?"

**- ஆவூரான் -**



கட்டுரை

# தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை

- பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் -

முனைவர் மு. வரதராசன் மறைந்து 34 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பிறந்த மு.வ. 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார். தாம் வாழ்ந்த 62 வருடகாலத்தில் பள்ளி ஆசிரியராக, தமிழ் பேராசிரியராக, துணை வேந்தராக, எழுத்தாளராக, தமிழ் வளரச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டு மகத்தானது.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தமது தரமான, கலையம்சம் நிரம்பிய எழுத்துப் பணியினால் தமிழ்ச் சமுதாயத்தில் மிகுந்த செல்வாக்குடைய பேராசிரியராக விளங்கினார். கல்லூரி மாணவர்களும் மாணவிகளும் அவருடைய நாவல்களிலும் சிறுகதைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். அவருடைய ஆக்க இலக்கியம் சமுதாயத்தை நல்வழிப் படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. பல தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் ஆபாசத்தையும் குறுகிய வியாபாரப் போக்கையும் மூலதனமாகக் கொண்டு இலக்கியம் படைத்த காலத்தில் மு.வ. அவர்கள் சமுதாயத்தை திருத்த வேண்டும் என்னும் ஒரே ஆவலினால் நூல்களை எழுதினார். ஆக்க இலக்கியத்தை விட வாழ்க்கை வரலாறு, இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு, மொழியியல் முதலிய பல்வேறு துறைகளிலும் ஊக்கமான ஈடுபாட்டுடன் அரிய பல நூல்களை தமிழ்ச் சமுதாயத்திற்கு வழங்கியுள்ளார். ஒழுக்கம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, பெண்விடுதலை என்பவற்றிக்குத் தமது உழைப்பை அர்ப்பணம் செய்தார். அறிஞர் அண்ணா அவர்களுடைய பணியை மதிப்பீடு செய்து கூறிய வாசகம் மிகவும் பொருத்தமானது.

நாங்கள் கல்லூரியிலே படித்த காலத்தில் இந்த அளவிற்குத் தமிழ் ஆர்வம் இருந்ததில்லை. இந்த அளவிற்குத் தமிழ் ஆர்வம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் கூடத் தோன்றியதில்லை. ஆனால் மிக வேகமாகக் கடந்த இருபது



ஆண்டுகளில் இருநூறு ஆண்டுகள் பாடுபட்டால் மட்டுமே பெறக்கூடிய பெரிய வளர்ச்சியைத் தமிழ் ஆர்வத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் நாம் பெற்றிருக்கின்றோம். அதற்கு உறுதுணையாய் இருந்தவர்களில் மிக முன்னணியில் வைத்துப் போற்றப்படத்தக்கவர்கள் புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களும் டாக்டர் மு.வ.அவர்களும்.

மு.வ அவர்கள் எல்லாமாக 85 நூல்கள் எழுதியுள்ளார். அவற்றிலே நாவல் 13, சிறுகதை 2, சிந்தனைக்கதை 2, சிறுவர் இலக்கியம் 4, கடித இலக்கியம் 4, பயண இலக்கியம் 1, இலக்கியவரலாறு 1, மொழியியல் 6, வாழ்க்கை வரலாறு 4, ஆங்கில நூல் 2, சிறுவர் இலக்கணம் 3, மொழிபெயர்ப்பு 2.

இந்நூலில் 'அகல்விளக்கு' என்ற நாவல் இந்திய ஜனாதிபதியின் சாகித்திய அக்கடமியின் பரிசைப் பெற்றது.

கள்ளோ, காவியமோ?, அரசியல் அலைகள், மொழியியற் கட்டுரைகள் ஆகிய மூன்றும் சென்னை அரசாங்கத்தின் பரிசில்களைப் பெற்றன.

ஒருவன் தமிழறிஞனாக வரவேண்டுமென விரும்பினால் மு.வ நூல்களை படித்தால் போதும் என்ற கருத்து தமிழ்நாட்டு கல்லூரிகளில் நீண்ட காலமாக நிலவி வந்தது. MU VA is enough மு.வ தமது நூல்கள் மூலமாக நல்ல விதைகளை

தமிழ்நாட்டிலே விதைத்து வந்தார். அவற்றிலே சிலவற்றை இந்நாளில் மனதிலிருத்துவது பயனுள்ளது.

"கணவனோடு வாழும் ஒருத்திக்கு கணவனுடைய அன்பே முதன்மையானது.

மக்கள் இரண்டாம் நிலையினர். கணவன் பெற்றோரும் தன் பெற்றோரும் மூன்றாம் நிலையினர், நண்பரும் உறவினரும் நான்காம் நிலையினர், புகழும் மதிப்பும் ஐந்தாம் நிலையினர், கலையும் பொழுதுபோக்கும் ஆறாம் நிலையினர், தெருவாரும் ஊராரும் ஏழாம் நிலையினர். இப்படியே மற்றவரையும் மற்றவர்களையும் முறைமைப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். பெற்றோரைக் காப்பாற்றும் கடமை முன்னிற்கும் போது கலைப் பொழுதுபோக்கு முதலியவற்றை கைவிடத் துணிய வேண்டும். புகழ் மதிப்பு முதலியவற்றைப் பொருட்படுத்திக் கணவனுடைய வெறுப்பைத் தேடிக் கொள்ளக் கூடாது."

"இந்த உலக வாழ்க்கையிலும் தனி ஒருவர் எண்ணம் நிறைவேறி விடாது தொன்று தொட்டு இதுவரையில் வளர்ந்து வந்துள்ள கருத்துகளும் இன்று உள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளும் சேர்ந்தே சமுதாய வாழ்க்கையை உருப்படுத்துகின்றன. மாற்ற முயற்சி செய்யலாம். உடனே பயன் விளையாது. போதிய பயன் விளையாது. ஆகையால் நம் கடமைகளைச் செய்வோம். நடப்பது நடக்கட்டும் என்று இருப்போம். அதுவே அறிவுக்கு அழகு. கடைமையைச் செய்வதற்கே நமக்கு உரிமை உண்டு. பயனைப் பற்றிக் கவலைப்படுவது அறியாமை".

"உலகைத் திருத்த நம்பங்கு முயற்சி செய்வோம். பணவேட்டையும், புகழ்வேட்டையும் அவற்றால் ஆகிய பலவகை ஏக்கங்களும் கவலைகளும் இல்லாமல் சமுதாயம் சீராக அமைவதற்கு உரிய வகையில் அறிவை வளர்ப்போம். அறநெறியைப் பரப்புவோம். உடனே பயன் காணமுடியாமல் போகலாம். கவலை வேண்டாம் எதிர்கால நன்மையைக் கருதி கடமையைச் செய்வோம். ஆங்காங்கே நல்ல விதைகளைத் தூவிச் செல்வோம். அதுவும் இயலாத நிலையானால் இயன்றவரையில் நிலத்தைப் பண்படுத்தி விட்டுச் செல்வோம். அது நம் கடமை. நல்ல கடமையை உணர்ந்து செய்வதே நல்வாழ்க்கை".

"மனதையும் நல்ல வழியில் காப்பாற்றி உடம்பையும் நோய் இல்லாமல் காப்பாற்றினால் அந்த வாழ்க்கைதான் வெற்றி மிகுந்த வாழ்க்கை. உடம்பு நோய்வாய்ப்பட்டால் அதற்குப் பிறகு வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லை".

"எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் உடல் உணர்ச்சியுள்ள வரையில் கணவன் மனைவி அல்லாத ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகாமல் இருப்பது நல்லது".

"பணம் என்றால் அதற்கு தனிமதிப்பு. உலகத்தில் உள்ள வரையில் அதைச் சும்மா விடக்கூடாது.விட்டால் புத்தர், இயேசு, திருநாவுக்கரசர், காந்தி போல அடியோடு விட்டுத் தொலைக்க வேண்டும். இல்லையானால் பணத்திற்கு நாம் அடிமையாகாமல் நமக்கு அதை அடிமை ஆக்கிக் கொண்டு ஆட்டிப்படைக்க வேண்டும்."

"வாழ்க்கையில் மனிதர்களின் தொடர்பு கசக்கும் நாள் வரும். ஆனால் உயர்ந்த புத்தகங்களின் கருத்துகள் என்றுமே கசப்பதில்லை."

"பறவைகள் அன்பாக வாழ்கின்றன. அவைகளுக்கு வாய் இல்லை, பேச்சு இல்லை, பிணக்கு இல்லை, மக்கள் வாழ்க்கையில் வாய்தான் வம்பும் தும்பும் செய்கின்றது. பேச்சு வளர்கின்றது, பிணக்கு முற்றுகிறது.... அன்பான வாழ்க்கையிலும் திடீரென்று அன்பு முறிகின்றது.

"சாவு என்பது வாழ்வுக்குத் தேவையானது. சாவும் வாழ்வும் சேர்ந்தால் வட்டம். இது இல்லையானால் அது இல்லை. இலை பழுத்து வாடி உதிர்ந்தால்தான் தளிர் பசுமையாகத் தோன்றுகின்றது. பழுப்பதும் துளிர்ப்பதும் போல்தான் சாவும் வாழ்வும்."

இப்டிச் சமுதாய நன்மைகருதி ஆக்க பூர்வமான கருத்துக்களை மு.வ. முன்வைத் துள்ளார்.

**(நன்றி - தினக்குரல்)**

■

# வரலாறு படைத்த பெருவிழா

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கி நிறுவகமும் இணைந்து பெருமையுடன் வழங்கிய இரா உதயணன் இலக்கிய விருது விழா-2018 மிகச் சிறப்பான பெருவிழாவாக வரலாறு படைத்தமையைப் பதிவு செய்ய வேண்டியுள்ளது. கொழும்புத் தமிழ்சங்க மண்டபத்தில் 17.03.2019 அன்று பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைப்பெற்ற விருது விழாவுடன் தம்புசிவா அவர்களின் பவளவிழா மலர் வெளியீடும், "தாயக ஒலி" சஞ்சிகையின் 40 ஆவது சிறப்பு மலர் அறிமுகம் மண்டபம் நிறைந்த பெருமக்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடந்தேறியுள்ளது. முதலில் விழாவுக்கு வருகை தந்தவர்கள் எல்லோருக்கும் மாலை நான்கு மணி தொடக்கம் சுவையான சிற்றூண்டிகளுடன் தேனீர் விருந்து வழங்கப்பட்டு அவர்களின் உற்சாகத்துடன் சரியாக 4.30 மணிக்கு இலக்கியப் பெருவிழா ஆரம்பமாகியது.

அமரர் திலகவதி விஜயரத்தினம் அரங்கில், மங்கல விளக்கேற்றலுடன் தொடங்கிய நிகழ்வு பதினொரு தம்பதியினரின் மங்களகரமான ஒளிப்பிரகாசத்துடன் பயணித்தது. சக்தி சுப்பஸ்ரார் புகழ் செல்வி வைஷாலி யேகராஜன் அவர்களின் தமிழ்வாழ்த்து இசையைத் தொடர்ந்து கொழும்பு இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் திரு. ஐயம்பிள்ளை இராசரத்தனம் அவர்கள் வரவேற்புரையை வழங்கினார். விழாக்குழுவின் உறுப்பினரும், கொழும்புத் தமிழச் சங்கத்தின் துணைச் செயலாளருமாகிய ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் சுருக்கமாகத் தொடக்கவுரையை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசி ரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் அவர்கள், உரையாற்றுகையில் "படைப்பாளிகளை விருது வழங்கிக் கௌரவப்பதில் பல அமைப்புகள் ஈடுபட்டுவந்தாலும், அத்தகைய முன்னெடுப்புக் கள் எத்தகைய நோக்கத்துடன் செயற்படு கின்றன? என்ற கேள்வியை முன்னிறுத்தி தமது உரையை ஆரம்பித்தார். உண்மையிலே தகுதி யுடையவர்களுடைய தகுதியான ஆக்கங்களைத் தகுதியான நடுவர்களின் விதந்துரைப்பின் அடிப் படையிலேயே கடந்த மூன்று வருடங்களாகத் தொடர்ச்சியாக இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் தெரிவு செய்து விருது வழங்கிவருவது ஆரோக்கியமான செயற்பாடாகும். இத்தகைய விருது விழாவைச் சிறப்புடன் நடாத்த முன்னின்று உழைக்கும் எழுத்தாளர் வவுனியூர் இரா உதயணின் வகிபாகம் பாராட்டுக்குரியது. தாம் ஒரு படைப்பிலக்கியவாதியாக இருந்து கொண்டு, ஏனைய எழுத்தாளர்களைக் கௌரவிக்க வேண் டும் எனும் நல் நோக்கம் கொண்டவராகச் செயற்பட்டு வருகின்றார். அந்த வகையில் முன்னெடுக்கப்படும் விருது வழங்கல் விழாவுடன், தம்பு சிவா அவர்களின் பவளவிழா மலர் வெளியீடும்,"தாயக ஒலி" யின் 40வது சிறப்புமலர் அறிமுகமும் முப்பரிமாணம் கொண்டிருப்பது விழாவின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்தி ருக்கிறது". என்று தலைமையுரையில் தெளிவு படுத்தினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து முதன்மை விருந்தினராக விழாவுக்கு வருகைதந்த சாகித்யரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் முதன்மை விருந்தினர் உரையை நிகழ்த்தினார். "எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களைஊக்குவிப்பதன்மூலம்மகிழ்ச்சியடைய வைப்பது என்பது உளவியல் ரீதியில் அவர்களை உற்சாகப்படுத்தும். மொழிசார்ந்த எழுத்து, அவனுடைய அறிவுடனான சொல்லாடல்கள், புதிய சொற்களை வெளிக்கொண்டுவர அவனுக்குத் தூண்டுகோலாக இருக்கும். அந்த வகையில் தமிழ் மொழியில் புதிய சொற்களின் உருவாக்கம் தவிர்க்க முடியாததொன்றாக அமைந்துவிடுகின்றது. ஆகவே தமிழில் புதிய சொல்லாக்கங்கள் உருவாக்கப்பட்டு அவை பாவனையில் வளர்ச்சிபெறும் போதுதான் மொழியின் தனித்துவம் புதிய பரிமாணம் கொள்ளும். இன்றைய இந்தப் பெறுமதிமிக்க நிகழ்ச்சியை முன்னின்று நடத்தும் வவுனியூர் இரா உதயணனுக்கும், தம்பு சிவாவுக்கும் ஏனையோருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்

கொள்கின்றேன்." என்று தமது உரையில் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து "தாயக ஒலி" யின் 40 வது சிறப்பிதழின் அறிமுகவுரையை திருமதி பவானி முகுந்தன் ஆற்றினார். "இன்றைய காலகட்டத்தில் பேசுபொருளாக இருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைப்பற்றி பேனா முனையிலே ஆசிரிய தலையங்கம் புதிய நோக்கோடு வரையப்பட்டுள்ளது.

'கேட்டதைச் சொல்ல வந்தோம்' என்ற பகுதியில் முல்லைத்தீவு பால் பதனிடும் தொழிற்சாலையைத் திறந்து வைத்து முதல மைச்சர் கௌரவ சீ.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய உரை இடம் பெற்றுள்ளது. வட பகுதியில் வெள்ளத்தால் ஏற்பட்ட அனர்த்தங்களைத் தேடலோனின் தரிசனத்தில் தரிசிக்க முடியும். மேலும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், பவளவிழா நாயகனுக்காக வாழ்த்துக்கள் உட்பட விருது பெற்ற மூவருக்கான வாழ்த்துக் களும் இடம்பெற்றுள்ளன. இப்படிப் பல பல்வகை அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு தனித்துவமான ஒரு ஏடாக, பல்நாட்டு வாசகர்களின் அபிமானத்திற்குரிய படைப்பாக் கங்களை தாங்கியதாகத் "தாயக ஒலி" வெளிவந்து கொண்டிருக்கிறது. பிரதம ஆசிரியர் தம்புசிவா வின் ஆற்றலுக்கு "தாயக ஒலி" கட்டியும் கூறி நிற்கிறது." என்று தெரிவித்தார்.

பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்கள் பவளவிழா மலரின் வெளியீட்டுரையை நிகழ்த்தி னார். "இந்த மலர் ஐந்து இதழ்களாக வரிசைப் படுத்தப்பட்டுள்ளது. முறையே பவளவிழா வாழ்த்துக்கள், தமிழ்த் தென்றல் தம்புசிவாவின் ஆக்கங்கள், திருமதி ராதா சிவசுப்பிரமணியத்தின் ஆக்கங்கள், மாதுமை சிவசுப்பிரமணியத்தின் ஆக்கங்கள், இணைப்புக்கள் என்று வகைப் படுத்தப்பட்டுள்ளது. தம்பு சிவா அவர்கள் தமது துணைவியார், மகள் ஆகியோரின், படைப்புக்களையும் மலரில் சேர்ந்திருப்பது பாராட்டுக்குரிய செயற்பாடாகும்.மேலும் குடும்பப் படங்கள் உட்படப் பலரின் படங்களும் மலரில் இடம்பிடித்துள்ளன. இடதுசாரிப் போக்கை கொண்ட தம்பு சிவா இளம் வயதிலிருந்தே மார்க்சியக் கருத்துகளுடனான ஊடாட்டத்துடன் ஒன்றித்து வாழ்பவர். ஐம்பது வருடகால இலக்கியப் பயணத்தில் தடம்பதித்துத் தொடர்ந்து எழுதிவரும் அகவை எழுபத்தைந்தில் பவளவிழா காணும் தம்பு சிவசுப்பிமணியம் அவர்கள் தொடர்ந்தும் இலக்கியப் பணியை மேற்கொண்டு, தொடர்ந்து வரும் பல விழாக்களைக் கண்டு நீண்ட காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்." என்று தமது ஆளுமை மிக்க உரையுடன் இவற்றையும் குறிப்பிட்டார். வெளியீட்டுரையைத் தொடர்ந்து முதற்பிரதி பெறும் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்களைக் கௌரவித்தச் சிறப்புச் செய்யும் வகையில் முதல் முதலாக பவளவிழா மலர் வவுனியூர் இரா உதயணன் அவர்களால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பெற்றது. பணத்திற்காகவே முதல் பிரதியை வாங்கித் தொடர்ந்து அழைத்துவரும் நூல் வெளியீட்டாளர்களுக்கு இந்த நடைமுறை புதிய அனுபவத்தை ஏற்படுத்தியிருக்கும் என நம்பலாம்.

கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் பவளவிழா நாயகன் தம்பு சிவாவை வாழ்த்தி கவிதையிலேயே வாழ்த்துரையை உரைத்து அந்த படிமத்தை தம்புசிவாவுக்கு வழங்கிச் சிறப்புச் செய்தார். அதைத் தொடர்ந்து வவுனியூர் இரா உதயணனும், உடுவை எஸ். தில்லை நடராசா அவர்களும் இணைந்து விழா ஏற்பாட்டாளர் என்ற வகையில் தம்பு சிவாவுக்கான கௌரவத்தை சிறப்பாகச் செய்தனர். மருத்து வர்களான தாஸிம் அகம்மது, ஸ்ரீ சஙகர் மற்றும் எஸ். தியாகராஜா, ஓய்வுநிலை அதிபர் த. முத்துக்குமாரசுவாமி, ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி உட்பட பலர் பொன்னாடை போர்த்து மாலை அணிவித்துக் கௌரவம் செய்த காட்சி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. அந்த நிகழ்வுகள் உடனடியாகவே முகப்புத்தகம் மூலம் உலகமெங்கும் உள்ள தமிழ் நெஞ்சங்களை சென்றடைந்துள்ளன என்ற பதிவையும் இங்கு குறிப்பிடுவது பொருந்தும். அதனைத் தொடர்ந்து விருது வழங்கும் விழா பேராசிரியர் சபா. ஜெயராசா, பேராசிரியர் வ. மகேஸ்வரன், வவுனியூர் இரா உதயணன் ஆகியோரின் முன்னிலையில் முக்கியமானவர்கள் புடை சூழ ஆரம்பமாகியது.

உயர் இலக்கிய விருதினை திருமிகு அருணா செல்லத்துரை தமது பல்வகைப்பட்ட இலக்கிய,

ஆய்வுப் பணிகளுக்காகப் பெற்றுக் கொண்டார். சிறந்த ஊடகவியலாளர் விருதினை திருமிகு பொ. மாணிக்கவாசகமும், இன நல்லுறவு இலக்கிய விருதினை திருமிகு உபாலி லீலரத்னவும் பெற்றுக் கொண்டனர். திருவாளர்கள் செ. குணரத்தினம், செ. அந்தினிஜீவா, சு. துரைசிங்கம், கலைஞர் கலைச்செல்வன் ஆகிய நால்வருக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப் பெற்றன. படைப்பிலக்கியங்களுக்கான விருதுகள் பின் வருவோருக்குத் திறமையின் அடிப்படையில் வழங்கி வைக்கப் பெற்றது. "யாவரும் கேளீர்" நாவலுக்கான விருது சிவ ஆரூரன் சார்பில் அவர் தந்தையார் பெற்றுக்கொண்டார். "அமேசன் காட்டில் அழகன் பூசாரி" என்னும் சிறுகதைத் தொகுதிக்கு கலைக்கோட்டன் அ. இருதயநாதனும், "சிறுவர் கதைகள்" என்னும் நூலுக்கு சிறுவர் இலக்கியத்துக்கான விருதினை முத்து இராதகிருஷ்ணனும் பெற்றுக் கொண்டனர். காவியத்துக்கானவிசேட விருதினை செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணனின் "விளைச்சல்" காவியம் பெற்றுக் கொண்டது. "தமிழ் வளர்ச்சி இலக்கிய விருது" என் செல்வராசவின் "நூல்த் தேட்டம்" நூலுக்கு வழங்கப்பட்டது. அயலகப் படைப்பிலக்கியத்திற்கான விருதினை இருவர் பெற்றுக் கொண்டுள்ளார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த அண்டனூர் சுராவின் "முத்தன் பள்ளம்" என்னும் நாவலும், இலண்டனைச் சேர்ந்த கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கத்தின் "இலங்கையில் தமிழர் இறைமை" என்னும் கட்டுரைத் தொகுதியும் விருதுகளைப் பெற்றுக் கொண்டன. "தாயக ஒலி" சஞ்சிகையின் சிறப்பு வாசகர் விருது திருமிகு க. சரவணமுத்துவுக்கு வழங்கப் பெற்றது.

ஏற்புரையை "தாயக ஒலி"யின் பிரதம ஆசிரியரும் பவளவிழா நாயகனுமாகிய தம்பு சிவா வழங்கினார். இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து ஆற்றி வரு கின்ற பணிகளை எல்லாம் எடுத்துரைத்து, பவளவிழா மலருக்கு வாழ்த்துக்களை அனுப்பி வைத்த பெருந்தகைகளுக்கு நன்றியையும் பகிர்ந்து கொண்டார். அவரது ஏற்புரையைத் தொடர்ந்து, இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவற்றின் நிறுவுனரும் தலைவரும், விழா ஏற்பாட்டாளருமாகிய திருமிகு. வவுனியூர் இரா உதயணன் நன்றியுரையை வழங்கினார்.

சிறப்பு நிகழ்ச்சியாக, திருமதி பவானி குகப்பிரியாவின் தியாகராஜர் கலைக்கோயில் மாணவிகள் வழங்கிய பரதநாட்டிய நிகழ்ச்சி சபையோரின் கரகோஷங்களின் மத்தியில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. நடனமாடிய செல்விகள் வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும் நடனத்தில் தமது அனுபவ முத்திரையைப் பதித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. நிகழ்ச்சித் தொகுப்பை யாழ். பல்கலைக்கழக மாணவி செல்வி அபிராமி மாணிக்கவாசகர் அற்புதமாக தொகுத்து வழங்கினார். நிறைவாக விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் இராப்போசன விருந்து வழங்கிச் சிறப்புச் செய்தனர் விழா ஏற்பாட்டளர்கள். வரலாறு காணாத ஒரு பெருவிழாவைக் கண்டுகளித்ததாக வருகைதந்தோர் பாராட்டியதையும் அவதானிக்க முடிந்தது.

***-தேடலோன்***



# சீரடிசாயி துதி

சாயிநாதா சாயிநாதா என் சங்கடம் தீரும் ஐயா
உன்னை அன்றி யாரும் இல்லை
சாயிநாதா சாயிநாதா என் சங்கடம் தீரும் ஐயா
உன்னாலே தான் முடியும் ஐயா
சாயிநாதா சாயிநாதா என் சங்கடம் தீரும் ஐயா
உன் அடியே சரணம் ஐயா
சாயிநாதா சாயிநாதா என் சங்கடம் தீரும் ஐயா

**- வைத்தமாநிதி-**
'தாயக ஒலி' முக்கிய ஆதரவாளர்

# மாணவ சமூகமே வாசிப்பை நேசியுங்கள்

- தெ.சுகிர்தன் - ஆசிரியர் -மானிப்பாய் இந்துக் கல்லூரி -

நவீன கல்விச் சிந்தனைகளில் பிரதான மான விடயம் யாதெனில் கல்வி ஒரு குறிப்பிட்ட வயதுடனோ அல்லது குறிப்பிட்ட நிறுவனத்துடனோ முடிவடைந்து விடுவதில்லை என்பதாகும்.

அறிவு வெள்ளம் பல்கிப் பெருகும் இன்றைய நாட்களில் புதிய அறிவத் தளங்களுடன் எம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள கல்வி அறிவைப் பெறும் முயற்சி வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் குறிக்கோளை அடைவதற்கு உறுணை யாக அமையும் வழிமுறை வாசிப்புப் பழக்கமாகும். வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்பட்டுள்ளது. அந்தவகையில் வாசிப்பு தொடர்பான ஒரு விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

மனிதனின் கண்டுபிடிப்புகளில் மிகச் சிறந்தது புத்தகங்களே என 20 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானியாக விளங்கிய அல்பேர்ட் ஐன்ஸ்டீன் குறிப்பிடுகிறார்.

புத்தகங்களுக்கும், நமக்குமான உறவு சிறு வயது பாடசாலைக் காலத்துடன் ஆரம்பிக்கின்ற போதிலும் அவற்றுக்கான உறவு பாடசாலைப் பருவத்தோடு மட்டும் முடிவடைந்து விடுவதில்லை. எம் ஆயுள் வரை தொடர்ந்து இடம்பெறுகின்ற ஒரு தொடர் செயற்பாடேயாகும். எனவே புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை மாணவர் மத்தியில் பாடசாலைப் பருவத்திலிருந்தே படிப்படியாக வளர்ந்தெடுப்பது பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டியுள்ளது.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று தமிழிலே ஒரு பழமொழி உண்டு. நாம் சிறு வயது முதல் பழகும் பழக்கமானது நாம் வளர்ந்து பெரியவரான பின்னர் எமது இறுதிக் காலம் வரையிலும் கூட நிலைத்திருக்கும் என்பதே அதுவாகும். அது போன்று மாணவர்களை சிறு வயது முதலே வாசிக்கும் பழக்கத்துக்கு வழிகாட்டுவோமேயானால் அவர்கள் தாமாகவே எதிர்காலத்தில் சுய வாசிப்பில் ஈடுபடுவார்கள். அவ்வாறானால் பாடசாலை மாணவர்கள் முழுமையாக வாசிப்பில் ஈடுபடுவதில்லையா? எனும் சந்தேகம் பலரிடையே ஏற்படக்கூடும் பாட சாலை மாணவர்கள் முழுமையாக வாசிப்பதில் ஈடுபடுகின்றார்கள் என்பது உண்மை. இன்று அந்த வாசிப்பானது பாட நூல்களுடனும், ஆசிரியர் கொடுக்கும் குறிப்புகளுடனும் மட்டுப் படுத்தப்பட்டதாகக் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி வீட்டிலும் வாசிப்பு செயற்பாடு இடம் பெறுகின்றது. அதுவும் பாடப் புத்தகத்துடனும் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவன பாடக் குறிப்புகளுடனும் மட்டும் முடிவடைந்து விடுகின்றது. இதை மாணவர் கற்றலுடன் நெருங்கிய தொடர்புடைய கட்டாய வாசிப்பு எனக் கருத முடியும். வாசிப்பு என்பது இதனைக் கருதுவதில்லை.

பாடசாலையில் கல்வி பயிலும் காலத்தில் மாணவர்களின் சமநிலையான ஆளுமை விருத்திக்கு பல்துறை சார்ந்த விடயங்களைக் கற்க வேண்டியுள்ளது. அவற்றுள் மிகவும் முக்கியமானது புத்தகங்கள், சஞ்சிகைகள், புதினத்தாள்களில் வெளிவரும் பல்தரப்பட்ட விடயங்களை வாசிக்கும் பழக்கத்தை தம்மிடையே ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதேயாகும். பாடசாலை செல்லும் காலத்தில் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்யாத பிள்ளை பிற்காலத்தில் விருத்தி செய்து கொள்வான் எனப் பெரிதும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அதற்கான போதிய சந்தர்ப்பம் வேறோர் இடத்தில் கிடைப்பது அரிதான விடயமாகும். ஒருவருக்கு வாசிப்பின் முக்கியத்துவம் பாடசாலை மட்டத்தில்



எடுத்துக்காட்டப்படுவதுடன் அது வாழ்க்கைக் காலம் முழுவதும் தொடர்ந்து இடம்பெறும் செயற்பாடாகவும் காணப்பட வேண்டும். இதனைப் பாடசாலை மட்டத்தில் வளர்த்தெடுப்பது ஆசிரியரின் முக்கிய பணிகளிலொன்றாகக் காணப்படுகின்றது.

உலகில் பல்வேறு துறைகளில் தமக்கென ஒரு தனியிடத்தை பதித்து மக்கள் முன் முன்னோடியாகத் திகழ்ந்த, திகழ்ந்து கொண்டிருக்கின்ற பல தலைவர்கள் புத்தக வாசிப்பு தங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய பல மாற்றங்களை வெளிப்படையாகவே உலக மக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.அது பற்றி மாணவர்கள் சிந்திக்க வேண்டும். அவர்களில் சிலரின் கருத்துகள் பின்வருமாறு.

ஹெகலின் சமூகவியல் சித்தாந்தக் குறிப்புகள் நூல் என் சிந்தையைத் தூண்டி பாதையமைத்தது.

**- கார்ள் மார்க்ஸ்**

மாக்சீம் கார்கியின் 'தாய்' என்ற நாவல் என்னை சிறுவனாய் இருக்கம் போதே சமூகவியல் போராளியாக்கியது.

**-பிடல் காஸ்ரோ**

யுக்லிடின் எலிமென்ட்ஸ் நூலை வாசித்து அதன் மகத்துவம் பற்றி அறிந்து கடுமையாக உழைத்தேன்.

**- ஆபிரஹாம் லிங்கன்**

மார்ட்டின் லூதரின் சுயசரிதை நூல் ஒன்று வாசித்ததால் போராளியானேன்

**- நெல்சன் மண்டேலா**

நியூட்டனின் பிரின்சிபியா வாசித்தேன் மீண்டும் பிறந்தேன்.

**- அல்பேர்ட் ஐன்ஸ்டீன்**

ஜீ.எஸ். கார் என்பவர் எழுதிய எலிமன்டரி ரீசல்ட்ஸ் இன் பியுர் மாத்ஸ் புத்தகம் வாசித்தேன் அன்று முதல் கணக்கே என் வாழ்வானது.

**- ராமானுஜன்**

வில்டுராண்டின் என்பவரது தத்துவ ஞானத்தின் கதை வாசித்தேன் எனது உலகை ஆழ்மனம் ஆட்கொண்டது.

**- சிக்மன் பிராய்ட்**

ஹென்ரிதோரோ எழுதிய தனி மனித அறம் என்ற நூல் தான் என் போராட்ட உத்திகளைத் தூண்டியது.

**- டாக்டர் அம்பேத்கார்**

இவ்வாறாக ஏதாவது ஒரு தொழிலில் அல்லது துறையில் வெற்றிகண்ட நூற்றுக்கணக்கான தலைவர்களிடம் காணப்படும் குணாதிசயங்கள் பலவற்றில் வாசிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகக் காணப்பட்டுள்ளது என்பதை மாணவர்கள் மறந்துவிடக்கூடாது.

வாசிப்பு நாட்டம் கொண்ட எதிர்கால சமூக மொன்றை உருவாக்கும் பொறுப்பு பாடசாலை மட்டத்திலிருந்து வழிகாட்டப்பட வேண்டிய விடயம் எனும் அடிப்படையில் வாசிப்பதன் முக்கியத்துவமும் பாடசாலை நூலகங்களின் முக்கியத்துவமும் மாணவர்களுக்கு ஆரம்ப பாடசாலைப் பருவம் முதல் தெளிவுப்படுத்தப்பட வேண்டும். வாரத்தில் ஆகக் குறைந்தது ஒரு பாட வேளையாவது மாணவர்கள் நூலகத்துக்குச் சென்று அங்கு பல்துறை சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள், செய்திகள் போன்றவற்றை வாசிப்பதற்கு அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். அதுமட்டுமல்லாது வகுப்பறை மட்டத்திலும் சிறுநூல்களை அமைத்துக்கொண்டு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த முனைய வேண்டும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது பிறந்த தினத்தில் பாடசாலை நூலகத்துக்கென ஒவ்வொரு நூலையாவது இலவசமாகக் கையளிப்பதன் மூலம் பாடசாலை நூலகத்திலுள்ள நூல்களின் எண்ணிக்கையை மேலும் பெருக்கிக் கொள்ள முடியும். இதனால் பல நூல்களை வாசிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாக்களின் போது மாணவர்களுக்கு பாடம் சார்ந்த பயிற்சிப் புத்தகங்களைப் பரிசாகக் கொடுப்பதை விடுத்து பல்துறைசார்ந்த அறிவியல் நூல்களை அவர்களக்குக் கையளிப்பதன் மூலமும் அவர்களை வாழ்வில் வெற்றி பெற்ற மனிதர்களாக்க முடியும்.

பாடசாலை மட்டத்தை விடுத்து மாணவர்கள் வசிக்கும் சூழலில் காணப்படும் பொதுநூலகத்தில் சிறு வயது முதலே அங்கத்தவராவதன் மூலம் வாழ்நாள் முழுவதும் ஒருவர் வாசிப்புப் பழக்கமுடையவராக தம்மை மாற்றிக்கொள்ள முடியும். அதுமட்டுமன்றி தற்காலத்தில் இணையத்தளங்களினூடாக ஏராளமான மின்னியல் நூல்களையும், சஞ்சிகைகளையும், புதினப் பத்திரி

கைகளையும் வீட்டிலிருந்தவாறே வாசித்துக் கொள்ள முடியும். அல்லது நாம் வாசிக்க வேண்டிய பகுதிகளை இலகுவில் இணையத் தளங்களினூடாக அடையாளம் கண்டு விட்டு நூலகத்தக்குச் சென்று வாசித்துவிட முடியும்.

இவை யாவற்றையும் விட பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காக வீட்டில் ஓர் குடும்ப நூலகத்தையே அமைத்துவிட முடியும். வீட்டை அலங்கரிக்க புத்தகங்களை விட அழகான பொருட்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்பது ஹென்றிவார்ட் பீச்சர் என்பவரது கருத்தாகும். இவரது கருத்தினடிப்பபடையில் புத்தகங்கள் ஓர் வீட்டை அறிவாலும், அழகாலும் அழகுபடுத்துகின்றதெனக் கூறலாம்.

**(நன்றி வீரகேசரி)**

**கேட்டதைச் சொல்ல வந்தோம்**

# பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து விழிப்பாக இருங்கள்!

**- மா. லக்குணம் - ஆசிரிய ஆலோசகர் -கல்முனை கல்வி வலயம் -**




பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆரம்ப வகுப்புக்களில் அனுமதிக்கப் படுகின்ற மாணவர்களுக்கு எழுத்துருவான கல்வி உடன் போதிக்கப்படுவதில்லை. மாறாக விளையாட்டு மூலம் நல்லொழுக்கப் பண்புகள் போதிக்கப் படுகின்றன. இதற்குப் பின்னரே அவர்களுக்கு எழுத்துருவான கல்வி போதிக்கப்படுகின்றது. இவ்வாறான கல்வியை நாமும் எமது சிறார்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காக மூன்று மாத காலம் தரம் ஒன்றில் அனுமதிக்கப் படும் புதிய மாணவர்களுக்கு விளையாட்டு மூலமாகக் கல்வியை வழங்குமாறு கல்வி அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை அவர்களின் பெற்றோர் நெருக்கடியான நிலைக்குத் தள்ளுகின்றனர். இதனால் மாணவர்கள் பலர் மன அழுத்தங்களுக்கு ஆளாகின்றார்கள். முப்பது வயதில் பெறவேண்டிய ஒன்றை பத்து வயதில் பெறவேண்டும் என்று திணிப்பது எந்த வகையில் நியாயமாகும்?

அண்மையில் வெளியான உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கும் போது நகர்ப்புறங்களிலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களை விடவும் கிராமப்புற மாணவர்களின் பெறுபேறுகள் உயர்வானதாக உள்ளன. இந்த வகையில் கல்வி கற்பதற்கு நகர்புறமோகம் தேவையில்லை. அமைதியான கிராமியச் சூழல் உகந்தது என்பது நிரூபணமாகியுள்ளது.

எமது பொற்றோர் தமது பிள்ளைச் செல்வங்களின் எதிர்காலம் குறித்து விழிப்போடு இருப்பதுடன் பல தியாகங்களைச் செய்வதற்குச் சித்தமாக இருக்க வேண்டும். சில பிள்ளைகள் விரும்பத்தகாத செயலில் குறிப்பாகப் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுகின்றனர். இதனையிட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் தொலைக்காட்சி தொடர் நாடகங்களை தமது பிள்ளைகள் கல்விகற்கும் வேளைகளில் பார்ப்பதனால் பெற்றோர் பிள்ளைகளுக்குத் துரோகம் செய்பவர்களாக மாறுகின்றனர். ஆகவே பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க அர்ப்பணிப்புடன் செயலாற்றுங்கள். ■

# இலட்சியம் காத்த இலட்சியநடிகர்

**தேடலோன்**



சினிமாவிலே நடிச்சு நான் பிரபலமாக இருந்தாலும் என் பெயரிலே 'நாடக மன்றம்' ஒன்றையும் நடத்திக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் என் நாடகத்தை இலங்கையில் நடத்தணுங்கிற ஆர்வத்துடன் வந்தது அங்குள்ள முஸ்லிம் கலாசார அமைப்பு ஒன்று. நிதி திரட்டணுங்கிற நோக்கத்தோட என்னை அவங்க அணுகினாங்க.

ஆனா, "இங்கிருந்து ஐம்பது ஆட்கள், நான்கு லாறி கொள்ளும் அளவுக்கு நாடகத்துக்குத் தேவையான பொருட்களை எடுத்துப்போய் வர்றதுக்கோ ஏகச் செலவாகுமே! எப்படிக் கட்டுப்படியாகும்?" என்னு சொல்லி அனுப்பி விட்டேன். ஆனாலும் அந்த அமைப்பினர், நான் அங்கே வந்தே ஆகனும்னு பிடிவாதமாக இருந்தாங்க.

அந்த சமயத்திலேதான் திருநெல்வேலியில் நான் ஒரு நாடகம் போடப்போயிருந்தேன். அங்கே சாத்தூரைச் சேர்ந்த வில்லிசைக் கலைஞர் பிச்சைக்குட்டி பாகவதர் வாசிக்கிற கச்சேரியைக் கேட்க நேர்ந்தது. மனசிலே 'சட்' னு ஒரு ஃப்ளாஷ்!

அவரை மேடையில் வாசிக்கச் சொல்லி அதைப் பதிவு பண்ணிக்கிட்டேன். கண்ணகி கதையை அவர் பாடின விதம் ரொம்ப பிடிச்சுப்போக... அந்த டீமை அப்படியே சென்னைக்கு வரச்சொல்லி, ஒருவார காலம் பயிற்சி எடுத்தேன். கண்ணகி கதையில் என் ரசனைக்கேற்ப சில மாற்றங்கள் பண்ணினேன். மெட்டை அப்படியே வெச்சுக்கிட்டு, சில இடங்களிலே புதிய பாடல்களை எழுதினேன். ஒரு மாதிரி தயாரான பிறகு அஞ்சு பேர் டீமோட இலங்கைக்குப் பயணமானேன். என்னை



ஒரு நடிகராக, அரசியல் பிரமுகராக, ஒரு எம்.எல்.ஏ-வாக மட்டுமே அறிஞ்சிருந்த இலங்கை மக்களுக்கு நான் வில்லிசை வாசிக்கிறதே புதிய விஷயமாக இருந்தது. ஏகக் கூட்டம். பொலீஸ் கெடுபிடியை மீறி, என் வில்லிசையை ரொம்ப ரசிச்சாங்க மக்கள்.

இலங்கையில் பன்னிரண்டு இடங்களில் கச்சேரி, யாழ்ப்பாண நகரத்தில் கச்சேரி பண்ணும் போது சுற்றிலும் இரும்புத்தகடு அடிச்சு, வேலி அமைச்சிருந்தாங்க... லேசா மழைத்தூறல் இருந்த நேரம் அது. 'திமீர்' னு கூட்டம் அதிகமாகி நெரிசல் ஏற்பட.... எங்கோ மின்கசிவாகி, தடுப்புவேலியில் மின்சாரம் பாய்ஞ்சுடுச்சு. நடந்த இந்த விபத்திலே ரெண்டு இளைஞர்கள் பலியானது எதிர்பாராத ஒரு சோகம்.

பதறிப்போன நான் அடுத்தநாள் போலீஸ் சொன்னதைக் கூட காதிலே போட்டுக்காம "வர்றது வரட்டும்" னு அந்த இரண்டு இளைஞர்கள் வீட்டுக்கும் போனேன். ஆறுதல் சொல்லிவிட்டு தலா அஞ்சாயிரம் ரூபா கொடுத்தேன். அதிலே ஒரு பையன் வீட்டுக்கே ஒரே வாரிசாம் . 'ஏம்மா... இந்தப் படுபாவி எஸ்.எஸ். ஆர் இங்கே வரலேன்னா, உங்க பையன் இறந்திருக்கவே மாட்டான்ல'னு தழுதழுப்போட கேட்டேன், ஆனா அந்தம்மா, "இல்லய்யா... நீங்க இங்க கச்சேரி பண்ணவாறப்ப என் புள்ளை அதைப் பார்க்க வந்து சாகணும்னு விதி இருந்தா அதை யாரால் தடுக்க முடியும்?" னு நான் நம்பாத விதியை மேற்கொள் காட்டிப் பேசினாங்க.... இனி நான் இருக்கேம்மா, உங்களது மகனா! னு சொன்னேன். அப்புறம் அந்தம்மா உயிரோடு இருந்தவரைக்கும் ஒரு மகனாக அப்பப்ப போய் வந்ததோடு, மாசா மாசம் லெட்டரும் பணமும் அனுப்பி, என் வாக்குறுதியைக் காப்பாத்தினேன் நான்"

**-இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன்**

# "தொடுதூரத்தில் விடிவானம்"

தம்புசிவா

கவிஞர்களும் கற்பனையாளர்களும் மட்டும் இல்லாமலிருந்தால் இவ்வுலகம் எப்போதோ சுடுகாடாகப் போயிருக்கும் என்று முன்பு ஒரு அறிஞன் சொன்னான். இது எந்தளவுக்கு உண்மையானது என்பதனை கவிதைக்குள் தோய்ந்து மூழ்கி எழுந்தவனுக்குத்தான் தெரியும். அதே போல் ஒரு கவிதைக்குள் ஒருவனை மூழ்கித் தோய வைத்துவிடும் பணியையும் செய்யவேண்டியவன் அந்தக் கவிஞனாகத்தான் இருக்கிறான். அப்படி ஒரு கவிஞனால் கவிதை யொன்றைப் படைக்க முடியுமாயின் அந்தக் கவிஞன் வெற்றி பெற்று விடுகிறான்.

ஒரு கவிஞனுக்கும் சராசரி மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் ஒரு கவிஞனால் மட்டுமே சமூகத்தையும் அதில் வாழ்கின்ற மக்களையும் அவர்களின் துன்பங்களையும் ஏன் அவர்களின் நெஞ்சங்களையும் கூட ஊடுருவிப் பார்க்க முடியும். அவர்கள் அவ்விதம் பார்ப்பவைகளை நெஞ்சாங்கூட்டுக்குள் உள்வாங்கி, உருப்போட்டு அடைகாத்து பின்னர் கவிதைகளாகப் பிரசவிப்பார்கள். அவர்கள் தம்மை கவிஞனாக வரித்துக் கொண்ட உடனேயே அவர்களிடம் மனிதநேயம் தானாகவே வந்து குடிபுகுந்துவிடும். சுப்ரமண்ய செல்வாவின் கவிதைகளில் மனிதநேயம் இயல்பாகவே இழையோடியிருப்பதைக் காணமுடியும். உதாரணத்திற்கு மூன்று கவிதைகளைத் தந்துள்ளோம்.

**உறவும் நட்பும்**

இல்லாதவற்றை இருப்பதாக்கி
கடுகுத் தவறை கடலளவாக்கி
கலைந்து போகும் உறவுகள்...


சின்னச் சின்னச் சிக்கல்களில்
சிதறிப்போகும் சிநேகங்கள்...

எத்தனை பிணக்குகள்
எத்தனை பிரிவுகள்....

உறவே நட்பே
ஒன்றுரைப்பேன்
நானும் நீயும்
நாளையே கூட
மரணித்துவிடலாம்
நம்மையும் மிஞ்சியா
நம் வெஞ்சினம்
வாழ்வது....?

காலம் நம்முன்னே
காணாமல் போகிறது
நாளையப் பொழுதுகள்
நம்வசம் இல்லை...

இன்றே விரைந்து வா
கைகுலுக்கி
கவலை மறப்போம்.





**காத்திரு**

உன்னை அடைதலுக்கான
என் காத்திருப்பு
யுகங்கள்பலகடந்ததென்பதனை
அறிவாயா
ஆதலினால் காத்திரு

**முதுமையிலும் இனிது காதல்**

வயதாகி தளர்வாகி
வரிவிழுந்த உடலாகினும்
வற்றாத பெருநதியாய்
வழிந்தோடும் பெருங்காதல்

தள்ளாடும் தளர் விரல்கள் - தன்
துணைபற்றிக் கொள்ளும்
சொல்லாத காதல் பல
சொல்லும்

முதுமையிலும் இனிது காதல்
சோர்ந்த இரு கரங்கள்
சொந்தமென சேர்ந்து கொள்ள
சோகமும் இங்கு சுகமாகும்

பெற்ற பிள்ளைகள்
பெருங்கடலுக்கு அப்பால்
உற்ற உறவுகள் - பாவம்
ஓயாத ஓட்டம்

நற்றாற்றில் படகினில்
நானும் நீயும்

கரைசேர்வோம் கலங்காதே
காதல் துடுப்பு - நம்
கைவசம் உண்டு

முதுமையிலும் இனிது காதல்.

- சுப்ரமண்ய செல்வா -

# எமது கலைகளை வளர்க்கச் செயலாற்றுவோம்

எமது கலை, கலாசாரம், பண்பாடு, மொழி என பல்வேறுப்பட்ட அடையாளங்களும் இன்று நாளுக்கு நாள் சிதைக்கப்படுத்துவதாக பெரும்பாலான இடங்களில் பேசப்படுகின்றது.

தென்னிந்திய சினிமா, சின்னத்திரை நாட கங்கள், போதை ஏற்றும் வஸ்துகள், கைத் தொலைபேசிப் பாவனை என பற்பல வடிவங்களில் எமது இன்றைய தலைமுறை மிகவேகமாக சிதைக்கப்படுவதாக சமூக நேயமுள்ளவர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

மொத்தத்தில் நாம் வாழும் சூழல் தனது சமூகக் கட்டுபாட்டுகளை இழந்து மிக வேகமாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை எம்மவர்கள் பலரும் புலம்பத் தொடங்கியுள்ளார்கள்.

நாங்கள் புலம்பிக் கொண்டிருப்பதால் இந்த ஆபத்தை தடுத்து நிறுத்த முடியுமா? வேறு யாராவது வந்து எமது இந்தச் சூழலை மாற்றுவார்களா?

கடந்த கால கட்டங்களில் எங்களிடம் உன்னதமான கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் இருந்தது உண்மையெனில் தற்போது அவற்றை தக்க வைக்க நாம் எடுக்கும் முயற்சிகள் போதுமானவையாக உள்ளதா? எம்மை அறியாமலே நாமும் சிதைவுகளுக்கு உடந்தையாக செயற்படுகின்றோமா? இவ்வாறு பல்வேறு வினாக்கள் எம்முன்னே விரிகின்றன.

ஒரு காலத்தில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொது அமைப்புக்கள், ஆலயங்கள் என திரும்பும் திசைகள் எங்கும் கலை, கலாசார விழுமியங்களை பறைசாற்றும் நிகழ்வுகள் போட்டா போட்டியாக இடம்பெற்ற



வண்ணம் இருந்ததை நாங்கள் மறந்து விட்டோமா? ஆண்டு தோறும் பல்கலைக்கழகங்கள் ஊடாக சங்கீதம், இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் என ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வெளிவந்த போதும் ஏன் எமது கலைப்படைப்புக்கள் அருகிச் செல்கின்றன.

இன்று கண்ணுக்கு முன்னே எமது கலை வடிவங்கள் அழிந்துகொண்டு போவதை நாம் பார்த்துக் கொண்டு சாகப் போகிறமோ?

தொலைக்காட்சி நிகழ்வுகள் மக்களை சீரழிப் பதாக கூறும் நாம் இதற்கு பதிலீடாக சரியானதும், எமது கலாசார பண்பாட்டின் அடித்தளத்தில் இருந்து கட்டியெழுப்பப்படுவதுமான கலை வடிவங்களை அரங்கேற்ற முயற்சிக்கிறோமா? எமது பிரதேசத்தில் ஆங்காங்கே நடைபெறும் ஒரு சில நிகழ்வுகளைக் கூட நம்மில் எத்தனை பேர் சென்று பார்த்து, கருத்துக் கூறி பங்களிப்புச் செய்து ஊக்குவிக்கின்றோம். எதுவுமே செய்ய லாயக்கற்றவர்களாக இருப்பது கண்ணை மூடிக் கொண்டு தவறுகளுக்கு துணை போவதாக இல்லையா?

**அட்டைப்பட விளக்கம்:**
வவுனியூர் இரா உதயணன் இலக்கிய விருது விழா – 2018, தம்பு சிவாவின் பவளவிழா மலர் வெளியீடு, மற்றும் கௌரவிப்புப் படங்களுடன், இலங்கை அரச நாடக விழா – 2019 கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் நடைபெற்றபோது விருது பெற்றவர்களுக்கு வவுனியூர் இரா உதயணன் அவர்கள் விருதுகள் வழங்குவதையும் அட்டையில் தரிசிக்கலாம்.

தென்னிலங்கையில் ரூபா 1000, 2000, 5000 என கட்டணம் செலுத்தி கலை நிகழ்ச்சிகளை பார்க்கிறார்கள். வர்த்தக நிறுவனங்கள் பல பாரிய நிதிபங்களிப்புச் செய்து கலைத் துறையை ஊக்குவிக்கின்றன. அங்கு கலை வளர்கின்றது. கலைஞன் வாழ்கின்றான். படைப்பாளி, பங்காளி, பார்வையாளர்கள் என அனைவரினதும் பங்களிப்பு இன்றி எமது கலை எப்படி வளரும். சமூகத்தில் உள்ள பெரிய மனிதர்களாக நாலுபேர் மதிக்க முன் வரிசையில் அமர்ந்திருந்து நீங்கள் கலை நிகழ்ச்சிகளை பார்ப்பது எப்போ?

யாரையும் குறை கூறுவதல்ல எமது நோக்கம். எல்லோரும் கைகோர்த்து “மீண்டும் தொடங்கும் மிடுக்கு” என எமது கலைப் பயணத்தை தொடருவோம் வாரீர். பூனைக்கு மணிகட்டுவது யார் என்ற கேள்விக்கு விடையாக முதற்கட்டமாக அனைத்துக் கலைகளையும் உள்ளடக்கி “கலை களின் சங்கமம்” எனும் மகுடத்தின் கீழ் மாதாந்தம் உங்கள் பிரதேசத்தில் கலை நிகழ்ச்சித்தொடர் ஒன்றைஅரங்கேற்றும் உறுதியான முடிவுடன் செயல்பாட்டில் இறங்கி கலை வளர்ச்சிக்கான பங்களிப்பை வழங்குகள். இதுவே எமது பணிவான கோரிக்கையாகும்.


கலை கண்ணுக்கு விருந்தாகும்
நோய்க்கு மருந்தாகும்
உன்னுக்குள் உரு ஏற்றும்
மண்ணுக்கு உரம் சேர்க்கும்
பண்பாட்டை பறை சாற்றும்
உன் வீட்டை மெருகேற்றும்
திசை எட்டும் களம் அமைப்போம்
தினம் புதிய கலை படைப்போம்.

கலை வளர்க்க கைகொடுப்போம்
நிலை உயர நிமிர்ந்தெழுவோம்

**‘சுதேசிய கலாமன்றம்’**
**இணுவில் - சுன்னாகம்.**

**கவிதை**

# விபுலானந்தர்



விபுலானந்தன் பெயர் சொல்ல
வீணா கானம் ஒலிக்கிறதே
முத்தமிழ் வித்தகர் என்றாலே
முக்கனிச் சாறு தித்திக் குதே

காலப் பழம் பெரும் ஊரான
காரைத்தீவில் பிறந்தாரே
காத்திரமான பணி செய்து
காத்தார் தமிழின் பெருமையினை

ஆசானாகி நின்றவராம்
ஆராய்ச்சியிலும் ஆழ்ந்தவராம்
பதிப்பாளராகி மதிப்புடனே
பத்திரிகை ஆசிரியர் ஆனராம்

தமிழ் முதல் பேராசிரியர் அவர்
தாய்நாடு தமிழ் நாடு தன்னிலே
தமிழை உலகோர் அறியச் செய்த
தனித்துவமான முத்தமிழ்ப் பேரறிஞர்

பன்மொழிப் புலமை பெற்றவராம்
பாமரர் பக்கம் நின்றவராம்
சாதிக் கொடுமையை வெறுத்தவராம்
சமரசம் காணத் துடித்தவராம்


கல்வி அதனைக் கற்பதற்காய்
கல்விக்கூடங்கள் அமைத்தாரே
கதியற்ற ஏழைச் சிறார்களுக்கு
கைகொடுத்துதவி நின்றாரே

தமிழர் வரலாறு படைத்தாரே
தமிழ் இசை யாழ் நூல் தந்தாரே
ஆங்கில நாடகம் கவிதையுடன்
அளப் பெரும் நூல்கள் தந்தாரே

தூய்மை யான பணி செய்ய
துறந்தார் துறவறம் வாழ்வினிலே
தொழுவோம் அவர் பாதம் போற்றிடுவோம்
தொடர்வோம் தொண்டினை அவர் போலே!

- சிவஞானம் மகேந்திரராஜா -
திருக்கோணமலை

# அண்ணா நீ வாழ்க



அண்ணா நீ வாழ்க
அருந்தமிழ் மக்கள்
கண்ணென ஒளிர்ந்த
'காஞ்சி' நீ வாழ்க
மண்ணுள்ள வரையும்
மறப்பாரோ தமிழர்?
பொன் உன் வாழ்க்கை
பூசிப்போம் நாங்கள்

கடலோரம் தன்னில்
கண்ணுறங்குகின்றாய்
நடந்து வரும் காற்று
நாளுமுனைத் தழுவும்
கடந்தாலும் ஆண்டு
காலமெலாம் நீ
படம் போல நெஞ்சில்
பதிந்திருப்பாயே!

தாழ்ந்த தமிழ்நாட்டைத்
தலை நிமிரச் செய்தாய்
சூழ்ந்த பேரிருளைச்
சூரியனாய்க் கலைத்தாய்
ஆழ்ந்த நல் அறிவால்
அறிஞனாய்த் திகழ்ந்தாய்
வாழ்ந்த முறையாலே
வரலாறு ஆனாய்!

அண்ணா உன் போல
அன்னை தமிழ் நாட்டில்
முன் ஒருவர் இல்லை
முழு நாடும் அறியும்
பின்னும் உனைப் போல
பிறக்கவில்லை யாரும்
இன்னும் உன் பெருமை
எத்தனையோ உண்டு!

ஊர் திருத்தம் ஒன்றே
உள்ளமதில் கொண்ட
சீர்திருத்தவாதி
சிந்தனையின் வடிவம்
பேர், பெருமை வேண்டா
பெருந்தன்மையாளர்
கார் இருளே இல்லாக்
ககனமென ஒளிர்ந்தாய்!

தந்தை அவர் பெரியார்
தந்த பேரறிஞர்
அந்த நாள் தமிழர்
'அகம் புறம்' எல்லாம்
சிந்தைதனில் வைத்தே
சிறந்த பணி செய்தாய்
விந்தையதில் இல்லை
வெற்றி நீ பெற்றாய்!

அடுக்குமொழி என்னும்
அழகுச் சொற் கூட்டம்
தொடுத்த தோர் ஆரம்
தோன்றிடவே செய்தாய்
கொடுந்தந்தத் தமிழைக்
குன்றிடா வண்ணம்
எடுத்தாளுகின்றோம்
இது உந்தன் கொடையே!

புராண, இதிகாசப்
புரட்டுக்களை ஒழிக்க
மரணம் வரை உழைத்தாய்
மனம் சோர்ந்ததில்லை
அருணன் நீ அந்த
ஆரியர்கள் சொன்ன
வருணமது தமிழர்
வாழ்வில் இருள் என்றாய்!



இனிய தமிழ் மொழியில்
இதயமதை இழந்தாய்
கனி அதனை உண்டு
கள் வெறி கொண்டாய்
பிணி எனத் தோன்றும்
பிற மொழி 'இந்தி'
அணியது வகுக்கும்
அதை நீ தகர்த்தாய்!



பகுத்தறிவே உனது
பாதை எனக் கொண்டாய்
வகுத்தந்த வழியில்
வழுவின்றி நடந்தாய்
சுகத்தை நீ அறியாய்
சுற்றமென நாட்டை
அகத்தில் நீ ஏற்றாய்
அண்ணா நீ வாழ்க!

-வாகரைவாணன்-




லூசியன் புஸ்பராஜ்

அலியான்ஸ் பிளாட்டிணம் விருது வழங்கல் விழா நியூஸ் பெஸ்ட் உடன் இணைந்து 29.03.2019 அன்று இரத்மலானை செயின்ஸ் கலையரங்கில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணாண்டோ உட்பட அமைச்சின் செயலாளர் மற்றும் சிங்கள சினிமா நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள், கப்பிற்றல் மகாராஜா நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், அலியான்ஸ் நிறுவன அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் என்று ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர். நவீனத்துவமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பான மேடையில், கண்கவர் நடன நிகழ்ச்சிகளும் விருது வழங்கல் நிகழ்வுடன் இடையிடையே அரங்கேற்றப்பட்டன.

2017, 2018 களில் இலங்கையிலும், உலகளவிலும் சாதனை படைத்துப் பெருமைப் பெற்ற விளையாட்டு வீரர்கள் 20 பேர் விருது வழங்கியும், பத்துப்பேர் பதக்கம் வழங்கியும் கௌரவிக்கப் பெற்றனர்.



இலங்கையின் சுழற்பந்து ஜாம்பவான் முத்தையா முரளிதரன் அவர்கள் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கிக் கௌரவிக்கப் பட்டார். இவருககான விருதினை அவருடைய தந்தையார் உயர்திரு. எஸ்.முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

உலக ஆண் அழகனாகத் தெரிவுசெய்யப்பட்டு இலங்கையின் பெயருக்கு மகுடம் வைத்த லூசியன் புஸ்பராஜ் அவர்கள் பிளாட்டினம் விருது விழாவில் ஜனரஞ்சக வீரர் விருதைப் பெற்றுக் கொண்டார்.

'தனியார் நிறுவனம் இலங்கையின் விளையாட்டு வீரர்களைக் கௌரவித்து விருது வழங்குவது உண்மையிலேயே பெருமைக் கொள்ளக்கூடிய நிகழ்ச்சியாகும். அந்த நிறுவனத்திற்கு எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்" என்று இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் தமது உரையில் தெரிவித்தார்.

இந்த விழுது வழங்கும் விழாவை 'சிரச' தொலைக்காட்சி நிறுவனம் நேரடியாக ஒளிபரப்பியமையால், பலரும் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றுக் கொண்டனர்.

**- தேடலோன் -**

## நன்றி நவில்கின்றோம்

ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறைக்குப் பெரும் பங்காற்றி ஐம்பது வருட வரலாறு கண்ட எழுத்துலகச் சிற்பியும் இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளருமாகிய சொல்லின் செல்வர், கலாபூசணம், தமிழ்மணி, தமிழ்த்தென்றல், தமிழ்த்திறலோன் தம்பு சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா) அகவை எழுபத்தைந்தில் தடம்பதித்து பவளவிழா கண்டுள்ள வேளையில் அவருடைய எழுத்துலக வரலாற்றுப் பதிவுகளை கட்டுரையாக தமது சஞ்சிகைகளில் எழுதி வெளியிட்டும் வாழ்த்துத் தெரிவித்தும் சிறப்புச் செய்த 'ஜீவநதி' யின் ஆசிரியர் திருமிகு க.பரணீதரனுக்கும், 'தென்றல்' ஆசிரியர் திருமிகு க.கிருபாகரனுக்கும், 'சிவபூமி' வெளியீட்டாளருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை தம்பு சிவாவின் 75வது பிறந்த தினத்தன்று வீரகேசரி, தினக்குரல், தினகரன், பத்திரிகைகளில் அவரைப் பற்றிய விபரக்கோவையைப் பிரசுரித்த பத்திரிகை ஆசிரியர்களுக்கும் எமது மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நன்றி

**- இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம் -**

**- இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் -**

# சிறுமி காசினி சிவேந்திரனின் உலக சாதனை

செல்வி காசினி சிவேந்திரன் லண்டன் ஹேய்ஸ் நகரில் உள்ள புறுக்சைல்ட் (Brookside) பள்ளியில் படிக்கும் மூன்றாம் வகுப்பு மாணவி. இவர் வளையத்தை இடையில் சுற்றும் விளையாட்டில் (Hoola Hooping) உலக சாதனை நிகழ்த்தி 'கின்னர்ஸ்' புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் நடுவர்கள் முன்னிலையில் மூன்று நிமிடத்தில் அறுநூற்று பதினேழு முறை சுழற்றி (617) உலக சாதனை நிலைநாட்டியுள்ளார்.

லண்டன் மேயர் அதி உத்தம சாலி கான் அவர்களும் லண்டன் 'பரோ' ஹிலிங்டன் மேயர் ஜோன்மோர்கன் அவர்களும், வித்தியாலய அதிபர் திரு.ஓபி அவர்களும், ஆசிரியர்களும் இவரது சாதனையை கௌரவித்து பாராட்டியுள்ளனர். ஹிலிங்டன் மேயர் ஜோன் மோர்கன் சால்வை அணிவித்து பாராட்டினார்.

லண்டன் ஹரோ மேயர் கரீமா மரிக்காரும் பாராட்டி சான்றிதழ் வழங்கியுள்ளார். மேற்படி மேயர் கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவி ஆவார். செல்வி.காசினி சிவேந்திரனின் தாயார் திருமதி ரூபா நிவேதா சிவேந்திரனும் கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவியாவார்.

இவரது பேத்தியார் அமரர் கலாபூசணம், சைவப்புலவர் திருமதி நவரட்னம்மா வெள்ளைச்சாமி கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பிரதி அதிபராகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.








GUINNESS WORLD RECORDS

CERTIFICATE

The most revolutions hula hooping in three minutes is 617 and was achieved by Kaashni Sivendran (UK) in Hayes, UK, on 6 July 2018.

OFFICIALLY AMAZING

வாழ்த்து



'கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியராகச் சாதனை படைத்து அகவை 75இல் பவளவிழாக் காணும் மூத்த முன்னணி எழுத்தாளர்

**திருமிகு. அந்தனி ஜீவாவை**

'தாயக ஒலி' வாழ்த்தி மகிழ்கிறது.

கவிதை

# வேற்றுமையில் ஒற்றுமை காண்பான்



**-உடப்பூர் வீரசொக்கன் -**

மக்களை ஏமாற்றும் அரசியலுக்கா
மாயமாய் உழைக்கின்றான்
ஏக்கம் நிறைந்த ஆசையில்
படாதுபடுகின்றான்

கொண்ட கொள்கை இல்லாது
பச்சோந்தியாக வாழ்கின்றான்
உண்ட வீட்டுக்கு இரண்டகச்
செயலால் தெருவில் நிற்கின்றான்

தீய செயலின் கொடுமையால்
கெட்டழிந்து நிற்கின்றான்
உயர்வைத் தேடி உத்தமனாக
வாழப்பாடுபடுகின்றான்

போட்டி பொறாமை எண்ணத்தால்
தன்னை அழிக்கின்றான்
தட்டிக் கேட்க ஆள் இல்லாததினால்
தன்னால் மாய்கின்றான்

காதல் வயப்பட்டு நின்றதினால்
தாயை வெறுக்கின்றான்
சாதனை என யெண்ணிமன
வேதனை கொள்கின்றான்

மக்கள் சேவகனாக நடித்து
பணமோசடி பண்ணுகின்றான்
தக்க சமயத்தில் செய்யும் தர்மத்தால்
சான்றோர் ஆகிவிட்டான்

சாதி சண்டை ஒழிந்திங்கு
சமாதானம் மலரவைப்பான்
நாதி இன்றி காணும் நம்மவரை
நானிலம் போற்ற வைப்பான்

நாட்டுப்பற்றுடன் நாம் வாழ
நாளும் பாடுபடுவான்
காட்டுத் தீயைப் போல் பரவும்
வதந்தி ஒழித்திட முன் நிற்பான்

துன்ப துயரங்கள் கொண்ட வாழ்வை
துரத்தி அடித்திடுவான்
பங்க மின்றிக் காணும் பாவையர்களை
கண்டு கழியிறக்கமுறுவான்

உழைப்பே உயர்வென எண்ணி
உறுதி கொண்டுழைப்பான்
பழைய பல்லவியைச் சொல்லும்
கூட்டத்தாரை வேரறுத்திடுவான்

இன பேதமில்லா சமுதாயத்தை
காணத் துடித்திடுவான்
கனம் பண்ணும் காளையரை
கண்டு கண்ணியமாவான்

போதிமாதவன் தந்த போதனையை
சாதனையாகப் போற்றுவான்
பாதியில் வந்த வேதனையால்
ஒற்றுமை காணத்துடிப்பான்.

சிறுகதை

# சிறகொடிந்த கிள்ளை



- ச.கணேசமூர்த்தி (சரவணன்) - கோவில் போரதீவு

புடிச்சா புடிதான்...

தான் புடிச்ச முயலுக்கு மூணுகால்... கதைக்கேலா ஒருவரும்...

உன்ர புடிவாதத்தாலதானே இப்பிடிக்கிடந்து உத்தரிக்கிறா....

சொல்லுக்கேட்டு நடந்துருந்தயெண்டா உன்ர அண்ணன்மார் உன்னை எப்பிடி வச்சிருப்பானுகள்!... கேட்டாயா....

இனியாவது என்ர சொல்லக் கேளு... அண்ணன் மார்ர சொல்லக் கேளு...

மூப்பன் முருகனில்லாம நீ ஆடுன ஆட்டம் போதும்.

இவன இன்னமின்னம் நீ என்னத்துக்காக நம்போணும்?

எனக்கெண்டா இனி அவன் உன்ன அங்க எடுப்பானெண்ட நம்பிக்கை கொஞ்சமும் இல்ல...

நல்லா யோசிச்சி சொல்லு...

அவன நம்பி இந்த நாலரவருசமா காத்திருந்ததும் பொறுத்திருந்ததும் போதாதா?

அழுதழுது அடம்புடிச்சிருந்து இனியும் பலனில்ல...

இண்டைக்குப் பின்னேரம் முடிவு சொல்லோணு மாம்... இல்லாட்டி நடக்கிறவேறயாம்...

மூத்தவன் சொல்லித்துப் போறான்...

மல்லிகா தொடர் பட்டோலையாக வாசித்துக் கொண்டே போனாள்.

தான் தாலிகட்டிய காலமிருந்து இவ்வாறான பல்லவியே பாடப்பட்டு வருவதை எண்ணிய ஆனந்தி தன்விதியை எண்ணி நொந்து கொண்டிருந்தாள். தன்னுடைய தாயும் சகோதரர்களும் தினம் தினம் தன்னை இவ்வாறு கொல்லாமல் கொல்வது அவளை வெந்த புண்ணில் வேல்பாச்சுவதாவே அமைந்தது.

*****

ஆம்....

கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் நடந்தேறிய அந்தத் திருமணம்தான் இற்றைவரை அவள் இவ்வாறு நச்சரிக்கப்படக் காரணமாயிருந்தது.

அவளுடன் பால்ய வயதுமுதல் ஒன்றாகப் படித்து வந்தவன் அவன். அந்த இடைநிலைக் கலவன் பாடசாலையில் தரம் பத்திலே கற்கும்போது ஆரம்பமானது அவனுடனான அந்தக் காதல்.

அவன் அவளுக்குச் சொந்த மச்சான்.

அவர்களது அந்தக் காதல் பாடசாலையில் ரகசியமாகவும் கோவில் குளங்களில் பரகசியமாகவும் பரவிப் படர்ந்து கொண்டிருந்தது. அது காலப்போக்கில் மல்லிகா குடும்பத்தாருக்கும் தெரிய வந்தது. பதனோராம் தர பகிரங்க பரீட்சையை எழுதவேண்டிய காலத்தை இருவரும் நெருங்கியிருந்த நேரமது.

எனினும் பரீட்சையை எதிர்கொள்ளவுள்ள மாணவர்களாக அவர்களின் நிலை தெரிய வில்லை.

அப்போது ஒருநாள்...

மல்லிகா...

தாய் கூப்பிட்டாள்

என்னம்மா?

அவள் தாயினருகே சென்றாள்.

தங்கனேசத்துர மகன நீ விரும்பிறயாமெண்டு எல்லாரும் கதைக்காங்க... அது உண்மையா?

“..................”

குடும்பத்தில் நீ ஒரேயொரு பெண்பிள்ளை. அதனால் அளவுக்கு மீறிய செல்லந்தந்து உன்னை வளர்த்துப் போட்டோம்... என்னடி நான் கேக்குறன் நீ பேசாமலே நிக்கிறா? சற்றுக் காரமாகவே அக்கேள்வியையும் கேட்டாள் தாய்.

"............."

மௌனமே காத்தாள் ஆனந்தி.

நானும் கேக்கிறன்தான் நீயும் செவிடன் காதில ஊதுன சங்குபோல காதுல கேக்காம நிக்கிறன்ன பிள்ள...

ஓமெண்டா ஓமெண்டு சொல்லு... இல்லெண்டா இல்லெண்டு சொல்லு.

"..............."

சொல்லாட்டி நடக்கபோறது வேற...

இறுக்கமான முகத்துடன் அதிகாரத் தோரணையில் குமுறினாள் மல்லிகா.

உலகத்துல ஆருமே செய்யாதத்த நான் செஞ்சமாதிரி கிடந்து ஏன் குரைக்கிறயள்... நான் ஆனந்தன காதலிக்கிறது உண்மைதான்... காட்டமாகவே சொல்லிவிட்டு தனதறைக்குள் ஓடிச் சென்று கதவைச் சாத்தினாள் ஆனந்தி.

மனச்சங்கடத்துடன் செய்வதறியாது திகைத்து நின்ற மல்லிகா... தம்பியும் வேலைக்குப் போய்த்தான்... மற்றவனும் இல்ல... இப்ப என்ன செய்யுறது? இந்தக் காலப் பிள்ளயள ஒண்டுக்கும் நம்பேலாமக் கிடக்கு.... என்னவும் ஏதும் செஞ்சித்தா எல்லாமே போச்சி மனதினுள் நினைத்தபடியே... அவசர அவசரமாகச் சென்று கதவினைத் தட்டினாளவள்.

தொற பிள்ள கதவ. தொற... தொற... மீண்டும் மீண்டும் தட்டினாள்.

நம்மட வெல்வெருட்டு நல்லா வேல செய்யுது...

அம்மா நல்லாப் பயந்து போய்த்தாவு போல கிடக்கு... மனதில் நினைத்தவளாய் தன் முகத்தை இறுக்கமாக்கிக் கொண்டு கதவைத் திறந்தாள் ஆனந்தி.

தாயின் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வடிந்து பெருக்கெடுத்ததை அவள் கண்டாள். அவளது மனம் தாயை நினைத்து அனலிடைப்பட்ட மெழுகாக உருகியது. எனினும் அவளதை வெளிக்காட்டவில்லை. நீறுபூத்த நெருப்பாகவே அது அடங்கி இருந்தது.

புள்ள நானுண்ட தாய்... என்ன நம்பு... நான் சொல்றதக் கேளு பிள்ள...

கதவிலே தனது வலது காலை பின்னோக்கி ஊன்றியபடி தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு நின்றாள் ஆனந்தி.

பிள்ளை நீயெனக்கு கல்லுல நெல்லு முளைச்ச மாதிரிக் கிடைச்சவள். அந்த கதிரமலக் கந்தன் தந்த பிச்ச.

நீயில்லாம நாங்க வாழேலா.

அவசரப்பட்டு கெட்ட முடிவுகள எடுத்துப் போட்டுறாத...

நீ நல்லா இரிக்கோணுமெண்டுதான் நாங்க ஆசப்படுறம்.

இன்னும் ரெண்டேரெண்டு மாசந்தான் கிடக்கு ஓயெல் சோதுனக்கி. நல்லாப்படி....

பாசுபண்ணுனா மூத்தவன் உனக்கு நல்ல தொழிலொண்ட எடுத்துத் தருவான்.

அதுக்குப்புறகு ரெண்டு வருசத்தால நம்மட அன்னகேசரிர மகன் ராசா மாஸ்ரர பிள்ளைக்கு கல்யாணம் பண்ணி கொடுக்கலாமெண்டு உன் மூத்தண்ணன் சொல்லிரிக்கான் தெரியுமா...?

அன்னகேசரிர மகனயா?

எனக்கா?

அவனவேணுமெண்டா நீ முடி...! எனக்கவன் வேணாம்... வேணாம்... பல்குழல் பீரங்கியாக வெடித்தாள்.... வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது.

அப்ப என்ன செய்யப்போறா..... டீ...... நீ.....

தாய் குமுறினாள்.

நான் முடிக்கிறெண்டா ஆனந்தனத்தான் முடிப்பன்.

இல்லெண்டா சாகுவன்.

நீங்க நினைக்கிறவன நான் கட்ட மாட்டன்.

என்ர கல்யாணத்த தீர்மானிக்க நீங்க ஆரு...? உங்களுக்கென்ன உரிம இருக்கு?

என்ர வாழ்க்கையைத் தீர்மானிக்க எனக்கு உரிமை இல்லயா?

சும்மா போங்க.... எனக்கு ஆத்துரத்தக் கிளப்பாதங்க.... பொரிவாணமாய் பொரிந்து தள்ளினாள்.

இறுதியில் அவளது பிடிவாதமே அன்று வெற்றி பெற்றிருந்தது.

*****

இவளது தந்தை பரசுராமன் இவளுக்கு சிறுவயதாய் இருக்கும்போது சிறுநீரகங்களின் செயலிழப்பால் இறந்து போக இரு ஆண்பிள்ளை களையும் கடைக்குட்டியான ஆனந்தியையும் வளர்த்தவள் மல்லிகா.

பரசுராமனின் மரணத்தையொட்டி அவன் பேரில் கிடைத்த பண்டுக் காசை வங்கியிலிட்டதால் கிடைக்கும் வட்டியைக் கொண்டு பிள்ளைகளைப் பாதுகாத்துப் பராமரித்து வளர்த்து வந்தவளே மல்லிகா.

உணவு, உடை, மருந்து மாத்திரைகள், படிப்பு மற்றும் பிற தேவைகள் எல்லாவற்றையும் மிகவும் சிக்கனத்துடன் வாயைக் கட்டி மனத்தைக் கட்டி சமாளித்தே வந்தவள் அவள்.

இவ்வாறான நிலையிலேயே கடந்த நான்கரை வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் திருச்சிராப்பள்ளியிலுள்ள ஜெயா நகரிலே உள்ள முருகன் கோவிலில் வைத்து பதிவுத் திருமணம் நிகழ்ந்திருந்தது ஆனந்திக்கு.

பிடிவாதகாரியான அவளின் விருப்பின்படி அப்போது தொழில்வாய்ப்புக்காகச் சென்றிருந்த ஆனந்தன் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டு அத்திருமணம் நடந்தேறியிருந்தது.

ஒருவாரகாலம் புதுமணத் தம்பதியராய் தென்னிந்தியத் திருத்தலங்கள் மற்றும் சுற்றுலா மையங்கள் என உல்லாசப் பறவைகளாய் பறந்து சுற்றி இன்பம் நுகர்ந்த பின் ஆனந்தி தாய் சகோதரங்களுடன் இலங்கைக்கு திரும்பி வர ஆனந்தன் மீண்டும் பிரித்தானியாவுக்கு பறந்தான்.

சொற்ப காலத்துக்குள்ளேயே அவளை பிரித்தானியாவுக்கு வரவழைப்பதாக கூறிச் சென்ற ஆனந்தனால் இன்னுமுந்தான் அவளை அங்கு எடுக்க முடியாத நிலை சங்கிலியாய் நீண்டுகொண்டே போனது.

இவ்வாறான நிலையிலேயே அன்று காலை யிலும் அவர்களின் வீட்டிலே கொந்தளிப்பொன்று ஏற்பட்டு பின் நீறுபூத்த நெருப்பாய் தற்காலிக அமைதி குடிகொண்டிருந்தது.

இதை இன்னுமின்னும் பொறுத்திருப்பது அறுபத்தெட்டு வயதை எட்டும் மல்லிகாவுக்கும்...

தங்கையை ஆனந்தனிடம் அனுப்பி வைத்த பின்னர் தான் திருமணம் முடித்துக் கொள்ளலாம் என்ற எதிர்பார்க்கையிலிருக்கும் ஆனந்தியின் மூத்தண்ணனுக்கும் "பொறுமைக்கும் எல்லை உண்டு" என்ற நிலையினை எய்த வைத்திருந்தது.

அவர்களனைவரும் அவளை அன்னகேசரியின் மகனை மறுமணம் புரியுமாறு வற்புறுத்தத் தொடங்கினர்.

"அயலூர் அழகனை விட உள்ளூர் முடவன் சிறப்பானவன்"

"தூரத்துத் தண்ணி ஆபத்துக்குதவாது" என்ற முதுமொழிகளை தன் தாய்க்கு நினைவூட்டிய அவளண்ணன் சுலக்ஷன் தான் வேலைக்காகப் புறப்படும் போது...

"இன்டைக்குப் பின்னேரம் முடிவு சொல்லோ ணுமாம் எண்டு நோனாட்ட சொல்லுங்கம்மா" என தன் தாய்க்கு கண்டிப்புடன் கூடிய உத்தரவு ஒன்றை பிறப்பித்துச் சென்றிருந்தான்.

அதுவே தாய்க்கும் மகளுக்குமான வாக்கு வாதமாய் இன்று வெடித்திருந்தது.

சோகமேகம் உள்ளத்தை ஆக்கிரமிப்புச் செய்திருந்த நிலையில்...

மதியவேளைக்கான சமையல் வேலைகளைக் கவனிக்கச் சென்றாள் மல்லிகா.

தன் விதியை எண்ணி கலக்கமுற்றவளாக கன்னத்தில் இடது கையை முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள் ஆனந்தி.

அவளதுதொலைபேசி அப்போதுசிணுங்கியது. அவ்வழைப்பை வேண்டா வெறுப்பாக எடுத்த அவளுக்கு "பட்ட காலிலே பட்டு கெட்ட குடியே கெடுவதாய்" அவளுறவினனொருவனின் அச் செய்தி அமைந்தது.

ஆம்....

"ஆனந்தன் பிரித்தானிய வெள்ளைத் தோலொன்றை மணந்து விட்டான்" என்பதே அச்செய்தி.

உலகம் மாறிச்சுழல ஆரம்பித்தது ஆனந்திக்கு.....

# பயங்கரவாதத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்

21-04-2019 அன்று உயிர்த்த ஞாயிறு ஆராதனைகளில் பங்கு கொண்ட அப்பாவி விசுவாசிகளை இலக்குவைத்து கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், நீர்கொழும்பு புனித செபஸ்தியன் தேவாலயம், மட்டக்களப்பு சியோன் தேவாலயம் ஆகிய மூன்று தேவாலயங்களில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன், அன்றைய தினம் கொழும்பிலுள்ள மூன்று உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களில் (கிங்ஸ்பெரி, சங்கரில்லா, சினமன்கிரான்ட்) மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களையும், தெஹிவளை, தெமட்டக்கொடை,



ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்ட குண்வெடிப்புச் சம்பவங்களையும் மிலேச்சகரமான பயங்கரவாதத் தாக்குதல்களாக முழு உலகமுமே அறிந்துள்ளது. இத்தாக்குதல்களினால் மொத்தமாக 253 உயிர்கள் பலியாகியுள்ளதாகவும், 500 க்குமேல் காயப்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகங்கள் மூலமாக அறிந்து அதனால் மிகுந்த வேதனை யடைந்துள்ளோம். 38 வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மரண மடைந்துள்ளதாகவும் சிலர் காயப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அறிய முடிந்துள்ளது. இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களினால் மொத்தமாக 45 சிறுவர்கள் மரணமடைந்துள்ளதாக ஐ.நா யுனிசேவ் நிறுவனம் அறியத்தந்துள்ளது. இலங்கை மக்கள் அனைவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ள இச்சம்பவத்தை எல்லா மத குருமார்களும் வன்மையாகக் கண்டித்ததுடன் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார்கள். மனிதாபிமானமற்ற வேதனைதரும் பிற்போக்குத்தனமான இந்தப் பயங்கரவாத சம்பவத்தினால் உயிர்நீத்த உறவுகளின் துயரத்தில் பங்கு கொள்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.




# இலங்கையில் கடும்வறட்சி

கொழும்புப்பல்கலைக்கழகப்பேராசிரியர் சந்திரா ஜெயரத்ன அவர்கள், கடந்த 140 வருடகாலத்தில் இலங்கை இப்படியான கடும் வறட்சியை எதிர்நோக்கவில்லை என்ற அறிவித்தலை முன்வைத்துள்ளார். கடும்வறட்சி காரணமாக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்ட நிலையில், ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. பொதுவாக விவசாயிகள், மீன்பிடியாளர்கள்(மீனவர்கள்) பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வறட்சி காரணமாகக் குளங்கள், நீரோடைகள் யாவும் வற்றி விட்டன. உணவு குடிநீர் இன்றிக் கால்நடைகள் செத்துமடிகின்றன. குடிநீர்த் தட்டுப்பாடு காரணமாக மக்கள் சொல்லணாத் துன்பங்களை அனுபவித்த வண்ணம் உள்ளனர். காலநிலை மாற்றம் இலங்கையை பலவகையிலும் ஆட்டிப்படைக்கிறது. ஒன்று கடும் வெள்ளப் பெருக்கு மற்றது தாங்க முடியாத கடும் வறட்சி. இத்தகைய அசாதாரண நிலை தொடர்கதையாக எம்மக்களை வாட்டிவதைத்து வருவது வரலாறாகிவிட்டது.

## நாய்களுக்குச் சரணாலயம்







இலங்கையில் முதல் முதலாக நாய்கள் சரணாலயம் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினரால் இயக்கச்சியில் நிறுவப்பட்டுள்ளது. கட்டாக் காலிகளாகக் கவனிப்பாரற்றுத் திரியும் நாய்களுக்கான பாதுகாப்பையும், ஆரோக்கியத்தையும் பேணும் வகையில் இந்த நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளமை பெரும் வரவேற்பைப் பெற்ற சம்பவமாக அமைந்துள்ளது. 'உயிர்களின் மேல் கருணை' என்பது மறைந்துவிட்ட இக்காலகட்டத்தில், வாய்பேசா ஜீவன்களுக்காகச் சரணாலயம் அமைப்பதென்பது உண்மையிலேயே போற்றுவதற்குரிய செயற்பாடாகும். இந்த அற்புதமான நல்ல கைங்கரியத்தை மேற்கொள்ளும் சிவபூமி அறக்கட்டளை ஸ்தாபகர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் பணி பாராட்டுக்குரியது; சிறப்புமிக்கது.

## மேதினம்




உலகமெங்கும் பரந்துவாழும் தொழிலாளர்கள் இத்தினத்தைத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடிவருகின்றார்கள். பல நாடுகளும், இத்தினத்தை முக்கிய தினமாகப் பிரகடனப்படுத்திச் சில செயற்பாடுகளை முன்னெடுத்தும் வருகின்றன. தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் என்று எல்லாத்துறையினரும் மேதினத்தை வருடாவருடம் அனுஷ்டித்து வருவதைக் காணமுடிந்துள்ளது. எப்படியிருந்த போதிலும் ஆண்டாண்டு காலமாகத் தொழிளாலர் வர்க்கம் முகலாளித்துவ வர்க்கத்தினால் சுரண்டப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிந்துள்ளது. வேலைக்கேற்ற ஊதியம், இருப்பிடம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதில் இன்றும் பல சவால்களைத் தொழிலாளர்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள். தொழிலாளர்களின் எதிர் காலம் கேள்விக்குறியாகவே உள்ளது. எனவே அவர்களின் வாழ்வு அமைதியுடனும், நம்பிக்கையுடனும் அமைய, இந்நன்னாளில் நாம் ஒவ்வொருவரும் திடசங்கற்பத்துடன் எம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றோம்.

# பாலேந்திராவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது





பல தசாப்த காலமாக நாடகத்துறைக்கு அரும்பெரும் பணியாற்றிய நாடக நடிகரும், நெறியாளரும், நாடகத் தயாரிப்பாளருமாகிய மூத்த ஈழத்து நாடகக் கலைஞர் க.பாலேந்திரா லண்டன் மாநகரில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப் பெற்றார். கிழக்கு லண்டன் ரெட் பிரிட்ஜ் நகர மண்டபத்தில் நடைபெற்ற எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் 20ஆவது நிறைவுக் கலைவிழாவில் ரெட் பிரிட்ஜ் நகரமேயர் கவுன்சிலர் திருமதி டெபி கவுர் தயிரா அவர்களிடமிருந்து க. பாலேந்திரா விருதினைப் பெற்றுக் கொண்டார். சாதனையாளரை 'தாயக ஒலி'யும் வாழ்த்தி மகிழ்கிறது.

**நகைச்சுவை கதை**

## "இலங்கையன் இலேசுப்பட்டவனில்லை!"

ஒரு அமெரிக்கன், ஒரு ரஷ்யன், ஒரு ஸ்ரீலங்கன் மூன்று பேரும் ஒரு விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.



விமானம் உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. வெளியே கையை விட்ட அமெரிக்கன் சொன்னான் "நாங்கள் மிகவும் உயரத்தில் பறக்கிறோம்! கிட்டத்தட்ட வானத்தை தொட்டு விட்டோம்" என்றான்.

மற்ற இருவரும் : " எப்படிச் சொல்கிறீர்கள்?"

அமெரிக்கன் : பெரிய பெரிய மிகவும் உயரமான கட்டிடங்கள் கையில் படுகின்றன; இது நிச்சயம் அமெரிக்காதான்!"

உடனே ரஷ்யன் தனது கையை வெளியில் விட்டு விட்டு சொன்னான்.

"நாங்கள் இப்போது நிச்சயமாக ரஷ்யாவிற்கு உயரமாகப் பறக்கிறோம் என்றான்"

மற்ற இருவரும் : "எப்படிச் சொல்கிறீர்கள்?"

ரஷ்யன் : விமானங்கள், ராக்கட் எல்லாம் கையில் படுகின்றன" என்றான்.

விடுவானா ஸ்ரீ லங்கன்????

விட்டான் கையை விமானத்திற்கு வெளியே! உடனே சொன்னான்!

" நூற்றுக்கு நூறு வீதம் நிச்சயமாகச் சொல்கிறேன்; நாங்கள் ஸ்ரீலங்கா மீதுதான் பறக்கிறோம்!" என்றான்.

மற்ற இருவரும் : "எப்படிச் அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?"

ஸ்ரீலங்கன் : "எனது கையிலிருந்த வாட்ச்சையும், தங்கச் செயினையும் யாரோ திருடிவிட்டார்கள்.

- **"இனுவை இரகு"** -

தொகுப்பு: ந. பார்த்தீபன்
வவுனியா

## வாழ்க்கை

நான் பெயரற்றவன்
மலைகளில் உலாவரும் மென்காற்றைப் போல்
தங்கும் இடமற்றவன்.
அலைந்து திரியும் நீர் போன்றவன்.
மாயமான தெய்வங்களுக்கு உள்ளது போல்
வழிபாட்டு நிலையமற்றவன்.
உயரமான கோவில்களின்
நிழல் படியாதவன்.
புனித நூல்கள் எதுவுமேயற்றவன்.
மரபுகளால் பதனிடப்படாதவன்
உயர் பலிபீடங்களிலோ, நறுமணத்தூபத்திலோ
பதட்டாரவாரச் சடங்குகளிலோ
ஆரவாரிக்கும் விழாக்களிலோ
இருப்பு இல்லாதவன்
செதுக்கி உருவாக்கப்பட்ட சிலையிலும் இல்லாதவன்.
உயர்ந்த தோத்திரப் பாடல்களின்
இன்னிசை ஓசையிலுமில்லாதவன்.
கொள்கைகளில் கட்டுப்படாதவன்.
கீழான நம்பிக்கைகளால் சீரழிக்கப்படாதவன்
சமயக் கட்டுப்பாட்டிற்குள் சிறைபிடிக்கப்படாதவன்
சமய குருமாரைப் பணிந்து
துயரமடையாதவன்.
சமயத் தத்துவப் பொறியில் சிக்காதவன்.
மாறுபட்ட மதப்பிரிவுகளின் மாஆற்றல் மிகு
ஆதிக்கத்தில் அகப்பாடதவன்
உயர்வு, தாழ்வு அற்றவன்
தொழுவோனும். தொழப்படுவோனும் யானே
யான் சுதந்திரமானவன்
விரிகடலை நாடிச் செல்லும்
அழகில் ஆற்றின் கீதமே என் கானமாகும்
பல இடங்களில் தடையற்று
அலைந்து, அலைந்து திரியும்
யானே "வாழ்க்கை"

**-தத்துவஞானி.ஜே. கிருஷ்ணமூர்த்தி -**

"புல்டோசரைக் கொண்டு
பூஞ்சோலையைக் கசக்கி
மயானத்துக்கல்லவா
மதில் கட்டுகிறார்கள்."

**-யாரோ ஒரு புதுக்கவிஞன் -**

## உங்கள் குழந்தைகள்


உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகளே அல்ல
உண்மையில் அவர்கள்
ஜீவனின் ஆதி அந்தமற்ற
சுயதேடல் வேட்கையின் புத்திரர்கள்
அவர்கள் உங்கள் மூலமாக வருகிறார்கள்.
உங்களிடமிருந்து அல்ல.
அவர்கள் உங்களுடனேயே இருந்தாலும்
உங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல.
நீங்கள் அவர்களுக்கு உங்கள் அன்பை கொடுக்கலாம்.
ஆனால், உங்களது எண்ணங்களை
அவர்கள் மீது சுமத்தலாகாது.
ஏனெனில், அவர்கள், தங்களுக்கே உரித்தான
எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள்.
அவர்களது சரீரங்களை நீங்கள் வீடுகளுக்குள்
வைத்துப் பராமரிக்கலாம் - ஆனால்
அவர்களது ஆத்மாக்களை உங்களால்
பராமரிக்க முடியாது.
ஏனெனில், அவர்களது ஆத்மாக்கள் வசிப்பதோ
வருங்காலத்தின் இல்லங்களில்
உங்களது கனவுகளில் கூட உங்களால்
அந்த உறைவிடங்களுக்குச் சென்று பார்க்க முடியாது.
அவர்களைப் போல இருப்பதற்கு
நீங்கள் முயற்சி செய்யலாம்.
ஆனால், உங்களைப் போலவே அவர்களை
வளர்த்தெடுக்க விரும்ப வேண்டாம்.
ஏனெனில், வாழ்க்கை என்பது
பின்னோக்கிய பயணமும் இல்லை.
தேங்கிய நிலையும் இல்லை.

**-கவிஞர் கலீல் சிப்ரான்-**

## மனிதன்

வானத்து இடிமுழக்கத்தையும்
வையம் புரக்கும் சூரியனையும்
கானகத்துத் தீயையும்
கடல் ஏவும் புயற்காற்றையும்
கடவுளாக்கித் தொழுவான்
கைக்கு அடங்குகிற உயிரினங்களைக்
காலில் போட்டு மிதிப்பான்
காடுகொன்று
நாடு ஆக்கும் முயற்சியில்
இயற்கையின் மீது பகைமை கொண்டு
படையெடுப்பையே நடத்திக்கொண்டிருப்பான்

**- கவிஞர் வைகறை -**




# உணர்வுகள் கொன்று விடு (தொலை தூரத்து வெளிச்சம்)

**நூல் : உணர்வுகள் கொன்று விடு (சிறுகதைகள்)**
**ஆசிரியர் : நிவேதா உதயராயன்**

பேராசிரியர் செ.யோகராசா

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டு தனது பதின்மவயதிலே ஜேர்மனிக்கும் பதினெட்டு ஆண்டுகளின் பின்னர் பிரித்தானியாவிற்கும் புலம்பெயர்ந்து பதினைந்து ஆண்டுகளாக அங்கு வாழும் திருமதி நிவேதா உதயராயனின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான 'உணர்வுகள் கொன்று விடு' அண்மையில் நூலுருப்பெற்றுள்ளது.

புலம்பெயர் எழுத்தாளரென்ற விதத்திலே ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த, மூத்த தலைமுறை சார்ந்த சிறுகதை எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், அடுத்த தலைமுறை சார்ந்த சுமதிரூபன், தமிழ்நதி முதலானோரைத் தொடர்ந்து வந்த அடுத்த தலைமுறை எழுத் தாளராக இத்தொகுதிக்குரிய நிவேதா உதய ராயன் அவர்களைக் கருதலாம்.

முன்னைய தலைமுறையினருக்கும் இவருக்கு மிடையேயான "கால வேறுபாடு" காரணமாக புலம்பெயர் நாட்டிற்குரிய முற்பட்ட காலப் பிரச்சினைகளோடு புதிய பிரச்சினைகள் சில வற்றையும் இவர் எழுதியிருக்கிறார். நிவேதாவின் 14 சிறுகதைகளுள் 11 சிறுகதைகள் புலம்பெயர் நாட்டிற்குரியவனாக அமைய, 02 சிறுகதைகள் ஈழத்தில் நிகழ்கின்றனவாகவுள்ளன. ஈழம் சார்ந்து நிகழ்கின்ற சிறுகதைகளிலும் புதியதும் பழையதும் உள்ளன என்பது கவனிக்கத்தக்கது. "கால மென்பது கறங்குபோற் சுழல மேலதுகீழாய் கீழதுமேலாய் மாறுவதற்கேற்ப, புலம்பெயர் நாட்டுத் தமிழ் மக்களது வாழ்வியற் கோலங்களும் மாற்றமடைந்து வருகின்றன என்பதற்குச் சான்றாக இத்தொகுப்பிலுள்ள பெரும்பலான கதைகளுள்ளன. இத்தகைய சிறுகதைகளில் ஒன்றான "உணர்வுகள் கொன்றுவிடு" அமைந்துள்ளது. முகப்புத்தகம் ஏற்படுத்தப்போகின்ற பண்பாட்டு அதிர்ச்சியின் அறுவடையாக இச்சிறுகதை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கோவி லூர் செல்வராஜன் எழுதிய சிறுகதையொன்று புலம்பெயர் நாட்டுக் குடும்பவாழ்க்கைச் சூழலில் பெற்றோர் இருவரும் வேலை செய்வது காரணமாக, தனிமை நிலைமையில் பொழுது போக்காக தொலைக்காட்சி பார்க்கின்ற தமிழ்ச் சிறுவன் ஒருநாள் ஆபாசப்படமொன்றைப் பார்ப்பதாக முடிவடையும்!

தமிழ்ப் பண்பாட்டுச் சீரழிவின் ஆரம்ப மொன்றை அது குறித்து நிற்பது போலவே இன்னொருவகைப் பண்பாட்டுச் சீரழிவை இச்சிறுகதை இனங்காட்டுவது குறிப்பிடத்தக்கது. அ.முத்துலிங்கம் எழுதிய அமெரிக்காக்காரி எதிர்காலப் பண்பாட்டு ரீதியில் இன்னொரு அதிர்ச்சிதர, நிவேதாவின் இச்சிறுகதை மற்றொரு கோணத்தில் அதைச் செய்துள்ளது.

புலம்பெயர் எழுத்தாளர்கள் எழுதத் தயங்கு கின்ற மேற்கூறியவாறான பிரச்சனை போன்றே இத்தொகுப்பிலுள்ள "வரம் வேண்டினேன்", "முடிவாகிப்போனது" , "இஞ்சினியர்", "வாழ்வு வதையாகி", "உறவுகள்", "ரயில் பயணம்" என்பனவும் போசாப் பொருளை பேசுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சில சிறுகதைகள், உதாரணமாக "வேப்பங் காய்கள், ஆசை மனதளவு, விதியின் சதி" முதலியன முன்னர் பேசியபொருள் பேசினாலும் எடுத்துரைப்பு முறைமை காரணமாக கவனத்துக் குரியனவாகின்றன. இறுதியாகக் குறிப்பிட்ட சிறுகதைகளின் பேசுபொருள்கள் பற்றி விரிவஞ்சி எதுவும் கூறவில்லை. வாசகர்கள் அவற்றை ஆழமாக வாசித்து அறிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

ஈழத்தமிழரது வாழ்க்கைபற்றி எழுதியுள்ள சிறுகதைகளில் ஒரு சிறுகதை குறிப்பாக, சமகால வாழ்க்கை (அலங்) கோலங்களை வரைய முற்பட்டுள்ளது என்ற விதத்தில் முக்கியமான அவதானிப்புக்குரியது. "எப்போதும் இரவு" என்ற அச்சிறுகதை போருக்குப் பிற்பட்ட காலத்து தமிழ்ப் பெண்களது வாழ்க்கையைப் பேச முற்ப்பட்டுள்ளது. குறியீட்டுப் பாங்கிலான தலைப்புக் கொண்ட இச்சிறுகதையும் அதிர்ச்சி தரும் ஒன்றே. போசாப்பொருளே. சிறுகதையில் பேசப்படுகின்ற பிரச்னைக்கு மாற்றுவழி காணமுடியாத நிலையில் ஜீரணித்தே ஆகவேண்டிய கசப்பான உண்மையே.

புலம்பெயர் தமிழ்ப் பெண்களின் நிலையை "உணர்வுகள் கொன்றுவிடு" ஒரு விதத்தில் வெளிப்படுத்துவது போன்று இச்சிறுகதை ஈழத்துத் தமிழ்ப் பெண்களின் பரிதாபகரமான நிலையை இன்னொரு கோணத்திலே வெளிப்படுத்தி வாசகரைச் சிந்திக்க வைத்துள்ளது என்பது மிகைக் கூற்றன்று! மேலும் பெரும்பாலான சிறுகதைகள் ஓஹென்றி பாணியில் எதிர்பாராத முடிவுகளைக் கொண்டிருப்பினும் இவை தவிர்க்கவியலாத இயல்பான முடிவுகளே என்பதையும் மனங்கொள்வது அவசியமாகின்றது.

என் பார்வைக்கு இறுதியாகக் கிடைத்த மனம் என்னும் மாயம், விடுதலை ஆகிய இரு சிறுகதைகள் பற்றியும் ஒரு சிறு குறிப்பு கூற வேண்டும் புலம்பெயர் வாழ்க்கைச் சூழலில், தாய் பிள்ளைகளுக்கு இடையிலான, கணவன் மனைவிக்கு இடையிலான, உறவு கள் கேள்விக்குள்ளாவதை - தவிர்ப்புக் குள்ளாவதை - அந்தரிப்புக்குள்ளாவதை - அவசர முடிவுக்குள்ளாவதை மோசமான முறையில் சித்தரிப்பதில் அவை வெற்றி கண்டுள்ளன என்பேன்.

ஆக, பதினான்கு சிறுகதைகள் கொண்ட இத் தொகுப்பில் இரு சிறுகதைகள் நீங்கலாக ஏனைய அனைத்தும் எதிர்காலத்தில் முக்கிய மான கவனிப்பைப் பெறவுள்ள எழுத்தாள ரொருவரை இனங்காட்டச் செய்துள்ளது என்பது மனநிறைவளிக்கின்றது; எனினும் நிதானமான மேலதிக வாசிப்பும் பெண்ணிலைவாத நோக்குப்பற்றிய தேடலும் இவரது எதிர்காலத்துக்கு அவசியமானவை என்பதையும் கூறியே ஆகவேண்டும்!

## தாயக ஒலியின் அஞ்சலி



சட்டத்தரணி சோ.தேவராஜாவின் அன்பு மனைவியும், தேசிய கலை இலக்கியப் பேரவை, கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினரும், எழுத்தாளரும், நாடக நடிகையும், நாடக நெறியாளருமாகிய திருமதி கலாலக்ஷ்மி அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும், கலை இலக்கிய நண்பர்களுக்கும் 'தாயக ஒலி' அன்னாரின் மறைவையொட்டிய தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.



கல்வியமைச்சின் ஓய்வுநிலை கல்விப் பணிப் பாளரும், தமிழ் அறிஞரும், தமது பதவிக் காலத்தில் தமிழ் மொழித் தினப் போட்டிகளுக்குப் பொறுப்பாக இருந்து தமிழ்மொழி மாணவர்களின் ஆற்றலுக்கு அங்கீகாரம் வழங்கும் நேர்மையான செயற்பாட்டாளராகவும் பணியாற்றிய தமிழ்ப் பற்றாளர் மேன்மைமிகு ஜீ.பி.அல்ப்றெட் அவர்களின் திடீர் மறைவு தமிழ் நெஞ்சங்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டது. அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும் உறவினர் நண்பர்களுக்கும் தாயக ஒலி தனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நிகழ்த்திய 'தமிழோடிசை பாடல்' நிகழ்வின் இரண்டாம் நாள் அரங்குக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிதிச்செயலாளர் தம்பு சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமைதாங்கி ஆற்றிய உரை.


எமது நாட்டு இசைக் கலைஞர்கள் பலர் இந்தியாவுக்குச் சென்று இசையைக் கற்று இலங்கைக்கு வந்து தாம் அங்கு கற்ற தெலுங்கு, சமஸ்கிருத மொழி உருப்படிகளையே பாடியும் கற்பித்தும் வருகின்றார்கள். அவர்கள் எமது தாய்மொழியாம் தமிழ்மொழியில் இசைக் கச்சேரிகளை நடத்த (ஒரு சிலரைத் தவிர) விரும்புவதில்லை. தமிழ் இசையை வளர்க்க வேண்டும் என்று எவருமே எண்ணிப் பாக்காத நிலையில் இலங்கையில் புதிய அத்தியாயத்தை தொடக்கி அதை ஒரு மக்கள் இயக்கமாக கடந்த ஆறு வருடமாக தமிழ் இசை விழாக்கள் மூலம் முன்னெடுத்து வருகின்றோம். மேலும் மாதாமாதம் இராக அளிக்கை என்ற நிகழ்ச்சியையும் கடந்த ஆறு வருடங்களாக நடத்தி வருகின்றோம். அந்த வகையில் இலங்கையில் எந்த நிறுவனமுமே துணிந்து செய்ய முடியாத தமிழ் இசைப் பணியை கொழும்புத் தமிழ்சங்கமே முன்னெடுத்து வரு கின்றது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியத் துணைக் கண்டத்தை நோக்கு வோமானால், அரசியல், வரலாறு, சமூக, பண்பாட்டு ரீதியில் தமிழிசையின் முக்கியத்துவம் குறித்தும் அதற்கான அவசியப்பாடு குறித்தும் ஆய்வாளர்கள் மத்தியில் கருத்தாடல்கள் வலுவாக மேற்கிளம்பி வலுசேர்க்கும் வகையில் 'தமிழிசை இயக்கம்' உருப்பெற்றது. இசைக் கச்சேரி மேடையில் தண்டபாணி தேசிகர் தமிழ் உருப்படிகளைப் பாடிய காரணத்தால் அவமதிக்கப்பட்ட வரலாறும் உண்டு. அண்ணா மலைப் பல்கலைக் கழகம் தமிழிசை இயக்கத்தின் மையமாக இருந்து செயற்பட்டது. இங்கு கல்வி பயின்ற சீர்காழி கோவிந்தராசனும் நாதஸ்வர மேதை டி.என்.இராசரத்தினம் பிள்ளையும் தமிழிசைக்கு முழு ஆதரவை வழங்கினர். பொதுமக்கள் மத்தியில் தமிழிசையின் முக்கியத் துவத்தை முன்னெடுத்துச் சென்றவர்களில் நகைச்சுவை நடிகர் என்.எஸ். கிருஷ்ணன் முக்கியமானவர்.

தஞ்சையைச் சேர்ந்த இசையறிஞர் அபிரகாம் பண்டிதர் அவர்கள் 1917 இல் வெளியிட்ட 'கருணாமிருத சாகரம்' என்னும் நூலில், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் உள்ள இசைத் தமிழாகிய சங்கீதத்தை தென்நாட்டிலிருந்தே மற்றவர்கள் கொண்டு போனார்கள் என்பது பற்றியும் வடபாஷைக் காரரும் தமிழ்நாட்டிலிருந்தே இசைத்தமிழைக் கொண்டு போயிருக்க வேண்டும் என்றும் கடந்த 200 ஆண்டுகளுக்குள்ளாகத்தான் ஆரியர் தமிழிசைக்கு 'கர்நாடக சங்கீதம்' என்று பெயர் சூட்டினர் என்ற தகவலைத் தந்துள்ளார். தமிழிசையிலிருந்துதான் கர்நாடக இசை தோற்றம் பெற்றதான வரலாறு உண்மை நிகழ்வாகும்.

தற்போதைய மும்மூர்த்திகளுக்கு முன் னோடிகளாக வாழ்ந்த சீர்காழி முத்துத் தாண்டவர், சீர்காழி அருணாசலக் கவிராயர், மாரிமுத்துப்பாபிள்ளை ஆகியோரின் கீர்த்தனங் களும் பதங்களும் அக்காலத்தில் மிகவும் பிரபலம் பெற்றிருந்தன. இவர்கள் தமிழிலேயே கீர்த்தனைகளை இயற்றி தமிழிசையை வளர்த் தனர்.

"இந்தியாவில் தமிழகம் மிகவும் தொன்மை யான பண்பாடுகளை, கலாசாரங் களைக் கொண்டிருக்கின்ற சிறந்த பகுதியாகும். ஆகவே இசையும் நம்முடைய பண்பாட்டுக்கு அடிப்படையாக, நமது சுவாசத்தின் சிறப்பு மிக்க பகுதியாக அமைந்திருக்கின்றது. எனவே நமது இசை நம்முடைய கலாசாரத்தை, பண்பாட்டை உலகத்திற்கு உணர்த்துகின்ற வகையில்



அமையவேண்டுமானால் அது நம்முடைய தாய்மொழியிலேயே பாடப்பட வேண்டும் என்பதுதான் உலகம் ஒத்துக்கொண்டிருக்கிற நியதியாகும்" என்று இராம வீரப்பன் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழிசை மாநாட்டை முதன்முதலில் 1941 ஆம் ஆண்டு செட்டி நாட்டரசர் அண்ணாமலையார் நடத்தினார். அந்த மாநாட்டில் " தமிழ் நாட்டில் நடக்கும் இசை அரங்குகளில் தமிழ்ப் பாடல்கள் முதன்மை பெற வேண்டும். கச்சேரியின் ஆரம் பமும் மங்களமும் தமிழ்ப் பாட்டுக்களாக இருக்க வேண்டும். பொதுவாக கச்சேரியின் பெரும்பகுதி தமிழ்ப் பாடல்களாகவே இருக்கவேண்டும்" என்று வலியுறுத்திப் பேசினார்.

"தியாகராஜ ஐயரின் தாய்ப் பாஷை தெலுங்கு ஆனதால் அவர் அதில் பாடினார். நாமும் நமது தாய் மொழியில் பாடினால் தான் நம் ஆத்மாவுக்குத் திருப்தி கிடைக்கும். கடவுளுக்கும் காது கேட்கும்" என்று மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூறியுள்ளார்கள். ஆர்.கே.சண்முகம் செட்டியார், கல்கி, விபுலானந்த அடிகள், டி.கே. சிதம்பரநாத முதலியார், பெரியார், அறிஞர் அண்ணாத்துரை போன்ற பலரும் இக்கருத்தையே வற்புறுத்தி வந்துள்ளனர். அதிலும் தமிழில் பாடவேண்டுமென்பது ஏதோ தமிழிசை இயக்கம் தோற்றுவித்ததற்குப் பிறகுதான் இக்கருத்தை வலியுறுத்துகின்றனர் என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே 1916 ஆம் ஆண்டிலேயே மகாகவி பாரதியார் தமிழ் இசை இயக்கத்தைத் தோற்றுவித்தார் என்பது வரலாறு.

பாரதியார் கூறியதை சற்று நோக்குவோம். " தயவுசெய்து சபா பொறுப்பாளர்களும், இசை வித்துவான்களும் தமிழ் நாட்டில் தமிழ்மொழியில் பாடி நம்முடைய சமுதாயத்திற்கு நீங்கள் உரியவர்கள் என்பதை உணர்த்துங்கள். ஏனெனில் உங்களில் மிகப் பெரும்பாலோர் வீட்டில் பேசுவது தமிழ்தான். தெலுங்கோ, சமஸ்கிருதமோ அல்ல. நீங்கள் தமிழ்நாட்டுக்காரர்கள் - தமிழர்கள் தானே! தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் தமிழிலே பாடுவதற்குத் தயக்கம் காட்ட வேண்டாம். தமிழ்மக்கள் விரும்புவதும் தமிழிசைதான். இந்த இசை நம்முடைய செல்வம். எனவே தமிழை, தமிழிசையை, தமிழர்களின் இசையை போற்றுவோம், வளர்ப்போம், வணங்குவோம்" என்று பாரதியார் தமிழிசையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழ் இசை இன்று நேற்று உருவாக்கப் பட்டதல்ல தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும் தமிழ் இசைக் காலத்தினை தீர்மானித்ததுடன் அதற்குப் பின்னரான சைவ சித்தாந்த அடிப் படையான பக்தி இலக்கியங்களும் பண்ணிசை என்றொரு தமிழிசை வடிவத்தையும் கொடுத் தன. நாயன்மார்களின் தேவாரங்களும் ஆழ்வார் களின் திவ்வியப் பிரபந்தங்களும் இந்தப் பண்ணிசைக்குள் வருகின்றன. தேவாரம்தான் கீர்த்தனைகளைத் தோற்றுவித்தது. அப்பரின் திருத்தாண்டவம் அதற்கோர் உதாரணம். தமிழிசையின் மூலவேர் எது என்று தெரியாது சிலர் அங்கலாய்த்து நிற்கின்றார்கள்.

தமிழிசையை மறந்துபோன தமிழனுக்கும், அவன் இசைக்கும் மறுவாழ்வைத் தந்த பெருமை தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவர்களையே சாரும். பிற்காலத்து தமிழிசை எழுச்சிக்கு பாபநாசம் சிவன் இவர் 76 இராகங்களின் சொந்தக்காரர் என்பதும் மற்றும் அருணாசலக் கவிராஜர், கோபாலக்கிருஷ்ண பாரதியார், ஊத்துக்காடு வெங்கட சுப்பையர், இன்றைய இசைஞானி இளையராசா என்போர் எழுச்சிபெற வழிசமைத்த முன்னோடிகள். தமிழிசைக்கு மறுவாழ்வு ஈந்தவர் ஆபிரகாம் பண்டிதரேயாவார்.

தமிழிசை மரபு இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையுடையது. சங்ககாலம் தொடங்கிச் செழிப்புற்று நிற்கிறது. எனவே நம்நாட்டில் நடைபெறும் இசைக் கச்சேரிகளில் தமிழ் பாடல்களே இடம்பெற வேண்டும். கோபால

கிருஷ்ண பாரதி, முத்துத்தாண்டவர், அருணாச்சலக் கவிராயர், பாபாநாசம் சிவன் ஆகியோரின் பாடல்களும் தேவாரம் திருப்புகழ் ஆகியனவும் கச்சேரிகளில் நிறைய இடம்பெற வேண்டும். அதிக அளவில் பாமர மக்கள் விரும்புமாறு இசை நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும். எமது இசைக் கலைஞர்கள் தமிழிசையே பாடவேண்டும் என வற்புறுத்தப்பட வேண்டும். பெற்றோரும் தமது பிள்ளைகளுக்குத் தமிழிசைப் பாடல்களை ஆசிரியர் கற்பிக்க நிர்ப்பந்திக்க வேண்டும். கொழும்புத் தமிழ்ச் சங்கமும் தமிழிசையை வளர்ப்பதற்காக தன்னாலான சேவையை வழங்கி வருகின்றது.


இலங்கையைப் பொறுத்தளவிலும் எமது இசைக் கலைஞர்கள் தமிழிசைக்கு முக்கியத் துவம் கொடுத்து வருகின்றார்கள். இணுவில் வீரமணி ஐயர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றித் தந்துள்ளார். தமிழிசையை வளர்க்கும் எமது கலைஞர்களின் சேவை தொடர வேண்டுமென வேண்டுகின்றேன்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழிசை! வளர்க சங்கத்தின் பணி! என்று கூறி எனது தலைமையுரையை நிறைவு செய்து கொள்கின்றேன்.

**கவிதை**

## துலங்குமின்; துலக்குமின்

ஆருயிர் நண்பனே...
ஆத்மாவின் என் ராகமே...
"ஆசிரிய நியமனம்
அதிகஷ்ரப் பிரதேசம்
வாகரை - மாங்கேணி"... ஓ
முதல் நியமனம், முதற்பள்ளி பற்றி
நேற்றிரவு நீண்டநேரம்
முகம் சுருட்டி கண்ணீர் சிந்தி
தொலைபேசியில் எனக்குத்
தொல்லை தந்தாய் - நீ
பரிதாபப்படுவேன் நானும் என்னும்
உன் பழக்க தோசத்தாலே...
அடேய் - நண்பா
கொடுத்து வைத்தவன்டா - நீ
இறைவனால் சொர்க்கத்தை நோக்கி
அடி எடுத்து வைத்தவண்டா
அந்தப் பாடசாலைக்கு வருகின்ற செல்வங்கள்
அனைத்துமே சொக்கத் தங்கங்களே...!
என்னைப் பார்...!
நகரப் பாடசாலை இங்கே
கிராமியப் பாடலை இன்னும் கிடைக்காத
அபாக்கியசாலியாக...
அப்பாவி மாணவர்களுக்குக் கற்பிக்க
கொடுத்து வைக்காத பெரும்பாவியாக...
நகரத்தில் நாற்பது செல்வங்களை
படிப்பித்துப் படி ஏற்றி வைப்பதைவிட
பதவி ஏற்றிருக்கும் உன் கிராமத்தில்
நான்கு பேரையாவது படிப்பித்து
படியேற்றி வைப்பதுவே



தகதகக்கும் தங்கப் பணியடா - இதுவே
மங்காப் பணியடா - முகம் சுருட்டாதே இனி
மார்பு தட்டி மேலெழுச்சி உறடா
"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்..."
உலக நாதனின் - இந்த உலக நீதிப் பாடலின் வழியில்
தினமும் தேடிப் படியடா - ஆம்
கற்றுக் கற்றே துலங்குமின்
கற்றுக் கற்றே மாணவர்களைத் துலக்குமின்



**-கன்னிமுத்து வெல்லபதியான்-**
**(சரவணமுத்து நவேந்திரன்)**
பாண்டிருப்பு - கல்முனை

கட்டுரை

# தன்னிலை பேணி தமிழ் மணம் காப்போம்

-மு. கோவிந்தராசா - பிரதி அதிபர்
கலைமகள் மகா வித்தியாலயம் - வெல்லாவெளி



வளர்ந்து வரும் உலகமயமாக்கல் பேரலையில் சிக்காது தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு முற்போக்குச் சிந்தனையும் செயற்றிறனும் கொண்டு எமது இளந்தலைமுறையினர் பல்வேறு சோதனைகளையும் தாண்டி சாதனை படைத்து வரும் இக்காலத்தில் மறைமுகமாக எமது பண்பாட்டு விழுமியங்களையும் நாகரீகத்தையும் கலாசார பாரம்பரியங்களையும், பழந்தமிழ் கலைகளையும் பறிக்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இது பழம்பெறும் வரலாறு கொண்ட தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் இழுக்காகும்.

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"**

என்கிறார் திருவள்ளுவர். அதாவது ஒரு பிறப்பிலே ஒருவன் தனது பொறிகளை அடக்கி ஆள்வானாயின், அது அவனுக்கு ஏழு பிறப்பிலும் நன்மை தரும் என்பது பொருளுடமை. நாம் இப்பிறப்பிலே அனுபிக்கின்ற சுகபோகங்களுக்கும் துக்ககரணங்களுக்கும் எமது முயற்சி மாத்திரம் காரணமாகிவிடாது.

"முயற்சி காற்பங்கு ஊழ்வினை முக்காற் பங்கு" என்கிறார் கண்ணதாசன். எமது தாய் தந்தையர் அவர்களது தாய் தந்தையர் செய்த செய்திருக்கின்ற பாவபுண்ணிய வினைப்பயன்களின் பெறுபேற்றினையே நாம் தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். என்பது எமது இளந்தலைமுறையினர் உணரத் தலைப்பட வேண்டும்.

நாகரிகம் என்கின்ற மாயவலையில் சிக்குண்டு எமது கலைத்துவத்தையும் தனித்துவத்தையும் பண்பாட்டையும் விழுமியத்தையும் குழிதோண்டிப் புதைப்பது உசிதமாகாது.

செம்மொழியாம் தமிழ்மொழியை செவ்வனே உச்சரிப்பதற்கும் கூச்சமின்றி பௌவியமாகப் பேசுவதற்கும் அதன் சாரமறிந்து அதன்வழி தடம்பதித்து வாழ்வதற்கும் முனைப்புக் காட்ட வேண்டும். எமது மொழியை நாம் மதித்தால்தான் பிறமொழியார் அதனை கண்ணியப்படுத்துவர். மேலும் மேலைத்தேய கலாசார வலையில் சிக்குண்டவர்களாக எமது ஆடை, அணிகலன்கள், சமயாசாரங்கள், வழக்காறுகள், மரபுகள் என்பவற்றை மறந்தோ, மறைத்தோ நடவாது அதனை நாம் ஒவ்வொருவரும் முனைப்போடு பின்பற்றிச் செயற்பட முனைய வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒரு ஆலமரமானது பருத்து வளரும்போது அதன் விழுதுகள் தாய்மரத்தை அச்சாணியாகக் கொண்டு தாங்கித்தரித்து அதற்கு பலம் சேர்க்கின்றன. இதனால் அம்மரம் மேன்மேலும் பலம் பெறுகின்றது. இதுபோல் எமது முதிசங்களால் இளந்தலைமுறையினரிடையே கடத்தப்படும் எமது மரபுரிமைப் பொக்கிசங்களை ஏற்று அதன் தடம் பற்றி நடந்து அடுத்த தலைமுறையினருக்கும் அதனைக் கடத்துகின்ற கைங்கரியத்தை ஆற்றக்கூடிய விற்பன்னர்களாக எம்மொழி வழி பிறந்த ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண வேண்டும்.

மேற்கத்தேயத்தவர்களை தன்வசப்படுத்திய உத்தம சித்தர் சுவாமி விவேகானந்தர் அவர்கள் இந்த உலகத்தை வெற்றி கொள்வதற்கும், அதனை மாற்றிக் காண்பிப்பதற்கும் வெறும் நூறு இளைஞர்களை மாத்திரமே கோரி நின்றார். அவரது சிந்தனையில் பின்வரும் கூற்று வலிமை பொருந்தியது.

"உங்கள் ஒவ்வொருவரிலும் உலகத்தையே அசைக்கும் அளவுக்கு வலிமை உள்ளது" எனக் கூறுவதன் மூலம் இளைஞர்கள் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கைக் கீற்றொளி வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கொப்ப நாம் எமது மொழியையும் கலாசார விழுமியங்ளையும் கட்டிக்காத்து அதன்வழி நடந்து, அச்சுவட்டை பின்பற்ற எமது அடுத்த தலைமுறையினரை வலுப்படுத்த வேண்டும். நாம் நமக்காக மாத்திரம்

வாழாது பிறருக்காக வாழும் பரந்த சிந்தனை கொண்ட பண்பாளர்களாக உருவாக வேண்டும். இதனையே வசூப மாணிக்கனாரின் பின்வரும் கவிவரிசை சுட்டுகின்றது.

**"நல் ஆவின் பால் முழுதும் கன்றுக்கில்லை**
**நறு மலரின் மணம் முழுதும் சோலைக்கில்லை**
**நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்திற்கில்லை**
**நிறைகின்ற நீர் முழுதும் குளத்திற்கில்லை**
**பழுக்கின்ற கனிமுழுதும் மரத்திற்கில்லை**
**பணி நரம்பின் இசை முழுதும் யாழுக்கமில்லை**
**எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்**
**என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும், வேண்டும்"**

இதற்கொப்ப நாமும் எமது சுயநலப்போக்கை கைவிட்டு எமது பண்பாட்டின் பொதுமையைப் பறைசாற்றக் கூடியவர்களாக அதனை இற்றைப் படுத்துபவர்களாக, பிரகாசிக்கச் செய்பவர்களாக, ஊடுகடத்துபவர்களாகச் செயற்படும்போது எமது இனமும் மொழியும் பண்பாடும் பேணி பாது காக்கப்படும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். இல்லையாயின் அது எம்மொழிக்கு மாத்திரமன்றி எமது தாய்க்கே செய்கின்ற கொடிய துரோகமாக அமைந்துவிடும். அது எதிர்காலச் சந்ததியினர் எதிர்காலத்தில் எம்மையும், நமது இறந்த காலத்தையும் நினைத்து ஏங்கக் கூடிய கானல் நீராக அவர்களை மாற்றிவிடும். அந்த வேளையில் அவர்கள் எம்மீது பின்வருமாறு குற்றம் சாட்டவும் முனைவர்.

**"என்னை தொப்பிள் கொடி தூக்கிப் போட்டது.**
**குப்பைத்தொட்டி தாங்கிக் கொண்டது**
**எச்சில் இலை சோறு போட்டது.**
**இலையின் நாய் பங்கு கேட்டது**
**கோடிப்பையே பாயாக, கொசுக்கள் கூடித் தாலாட்ட**
**கூனிக் குறுகிக் கிடக்கின்றேன்.**
**குப்பைத் தாயின் மடியினிலே**
**என் பச்சை இரத்தம் காயுமுன்னே**
**என்னை பிச்சை இட்ட தாயுமெங்கே,**
**உச்சி வெயில் வேளையிலும்**
**தாய் உறவைத் தேடி அலைகின்றேன்."**

எனவே தமிழர்களாகிய நாம் எமது பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணி தமிழுக்கும், தமிழனுக்கும் தரணி எங்கும் பெருமை சேர்க்கக் கைகோர்ப்போம்.

"வாழ்க தமிழ் வாழ்க தமிழ்"

**கவிதை**

## சொல்வீரா?

வந்தோம் சில நாட்கள்
வாழும் ஒரு நோக்கோடு!
இந்தப் புவி இருப்பு
எளிதல்ல - கடினம்தான்!

நீர் கூட - நிலம் குறைவு
நிலமீதும் மலை - பாலை!
வேர் ஊன்று 'குமரி' யினை
வீரமுடன் காதலித்தோம்!

நீர் விழுங்க - மாந்தரொடு
நிலம்போக - மிஞ்சியவர்,
பார் எங்கும் பரந்தனராம்,
பல உலகும் நமதுலகாம்!

தப்பிய ஈழத்திட்டும்
தமிழ் அழிந்து போனதடா!
இப்பொழுது நாம் அடிமை
இல்லை யெனச் சொல்வீரா?

'தாமரைத் தீவான்'
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

## அளியுங்கள்!

தமியேன் நின்றேன் தமிழோடே,
தமிழ் நின்றிடுமாம் உம்மோடே!
அமுதுக் கிலையே குறைபாடே,
அதை நீர் உண்டே மகிழ்வீரே!

செவிக் குணவிடுவீர் பெரிதாக,
சிறிதுண விடுவீர் வயிற்றுக்கும்!
அவியுணவாலா வாழ்வெல்லாம்,
ஐம்புலப் பலவித உணவன்றோ?

படித்தேன் நூல்கள் பலப்பலவாய்,
பாவாணர் நூல் முதலிடமாம்!
முடித்தேன் இனி முடியா நிலையே,
முடித்து மகிழ்விர் முத்தமிழை!

தமிழ்ப் பேராழியில் நீந்துங்கள்,
தமிழ்க்கடல் தன்னைக் கடவுங்கள்!
அமுதாய் மதித்தே அருந்துங்கள்,
அருந்திடுவோர்க்கும் அளியுங்கள்!

நூல் அறிமுகம்

# தமிழ்த் தென்றலின் பவளவிழா மலர்– ஒரு பார்வை






பவளவிழா மலர் கிடைத்தது
படித்துப் பார்த்தேன்
பார்த்தால் பரவசம், படித்தால் அதிரசம்

தமிழ்த் தென்றல் வீசியது - விழாமலர் மலர்ந்து
அட்டைப்படமே புன்னகையுடன் வரவேற்றது-
வசீகரித்தது - பொய்யல்ல நிஜம்

வெள்ள உள்ளம் - கள்ளம் இல்ல
ஆடையும் வெள்ளை - அகமும் வெள்ளை
அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது.

மலர்ச்சியை உதிர்த்த மனமும் வேண்டும்
ஐயா! அப்பது உங்களிடம் நிரம்ப உண்டு
மிக்க மகிழ்ச்சி.

அட்டையைப் புரட்டினால்
அழகுக் கோலம் "வா" என்கிறது
வண்ணக் கோலம் எமை வசீகரிக்கின்றது
கண்கொள்ளாக் காட்சி - கண்ணுக்கும் விருந்து

பாரிய மலர் இது - பவளவிழா மலர்
ஆனால் - இதற்கு இதழ்களோ ஐந்தே தான்
ஆனால்-

அவை சொரியும் விடங்கள்!
ஐந்து கோடி! ஐயம் இல்ல!
ஐந்தில் தான் எத்தன விஷேடம்!

புலன்கள் ஐந்து - பொறிகள் ஐந்து
பூதங்கள் ஐந்து - புவிநிலங்கள் ஐந்து
(குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை)
ஆயுதம் ஐந்து - (பஞ்சாயுதம்)

ஐயா,
பட்டங்கள், பரிசுகள், பாராட்டுக்கள்
விருதுகள் - உந்தனுக்கு ஏராளம்!
இதை யான் சொல்லவில்லை -
விழா மலர் சொல்கிறது இதையிட்டு
பொறாமை கொள்ளவில்லை யான்
பெருமையடைகின்றேன்

கருத்தாழம் மிக்க கட்டுரைகள் ஏராளம்!
எழுதிவிட்டால் மாத்திரம் போதாது,
அவற்றைச் சேகரித்து எமக்கன்பளிப்பாய்
நல்கினீரே இதனை என்ன வென்று பாராட்டுவது!
"யான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்"- அப்படியா?

நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்
அதற்கு உதாரணம் தங்கள் குடும்பம்
எவருமே மறுக்கமாட்டார்கள்
உங்கள் குடும்பத்தவர்
எங்கள் மத்தியில் - அசத்திவிட்டீர்கள்!
படங்களுடன் - நன்றி

இன்னொரு விஷயம்
இன்று சில பெற்றார் இடும் பெயர்கள்
தம் குழந்தைச் செல்வங்கட்கு
உச்சரிக்கக் கஷ்டம் - நாக்கே கடிபட்டுவிடும்
ஆனால் இங்கு
மாதுமையும், மாதங்கியும்,
நறுமுகையும் தாமரையும் அடாடா!
அசத்தி விட்டீர்கள்!
இலக்கிய வளம் சொட்டுகின்றது!

இதற்குக் காரணம்?
"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"
"சரியா"

**நன்றி**
**அன்புடன் சகோதரி**
**"ஆனந்தி"**

பரிசு பெற்ற கவிதை

கிழக்கு மாகாண கலை கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் 2017ம் ஆண்டில் நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தருக்கான மரபுக்கவிதைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற கவிதை



# மரபும் மாற்றமும்

கருவறைக் காழ்ப்பினில் - கொண்ட
காலத்தின் கோப்பினில்
அசைவுற்ற முண்டமாய் - உடற்
சதையுற்ற பிண்டமாய்
வீழ்ந்திட்ட தரணியில் - யாவும்
வாழ்ந்திடக் குதித்ததே - அதன்பெயர்
மாந்தராம் அவை ஆறறிவு மனிதராம்

கற்கொண்ட குகையதாம் - அது
காவல்தரு உறையுளாம் அதில்
நிம்மதி காண் உறக்கமாம் - நீதம்
சங்கதிகளும் புதியனவாம் - இன்று
தட்டடுக்கு மாளிகையாம் - வெறும்
தரைதாண்டிய வீடுகளாம்
பொன்வேய்ந்த பஞ்சணையில் - கணம்
கண்ணயர முடியல்லையாம்.

இயற்கையன்னை கரம் கொடுத்த
இலைகுழையான தாவரத்தில்
மரக்கறியும் உணவுகளும் - மனம்
மகிழும்வரை பசிதீர்த்ததுவே - இன்று
மருந்துண்ட தாவரமும் - மாந்தர்
விருந்துக்கு மாமிசமும்
வருத்தம் தரும் ஆகாரமே
ஏழை வாழ்வு இப்போ குறுகியதே

உப்பிலாக் கஞ்சியாயினும் பாமரதை
உண்பர் அறுசுவைபோல்
தப்பிய கந்தையாயினும் - கொள்வர்
தரங்கொள் பட்டாடையென்றே - இன்றோ
ஆயிரம் உணவுண்டாம் - அதில்
ஆலகால விஷமும்முண்டாம்
ஆடைகள் பலவிதமாம் - ஆனால்
அங்கங்கள் மறைப்பனவன்றே

பலவகை உறவுகளாம் - அவை
புதுவித உணர்வுகளாம் - அன்றோ
சொந்தங்கள் கூடியாங்கே
சுவைபட மகிழ்வுற்றதுமே - இன்றோ
பல்வகை உறவும் உண்டாம் - ஆனால்
பக்கத்திலிருப்பும் புரியாதிங்கு
தூரத்துத் தண்ணீர்போல் அவை
ஆபத்திற்கும் உதவாததாயிற்றே

அன்றோ அன்னையின் ஆராரோ தாலாட்டும்
அத்தை மாமனின் அன்புக் கையூட்டும்
பத்துவகை சொந்தங்களின்
பாசங்களின் ஊடல்களுமாம் - இன்று
யாராரோ நசையைக் கேட்டு
நலிவுறும் நிலையும் உண்டாம்
ஊரார் போல் உறவைக்கொள்ள
பேருக்கோர் உறவாய் உண்டாம்

கவலைகொள் நேரமதிலே - தாயின்
கனிவான தழுவல் கண்டோம்
தொலைதூரம் செல்லவும் துணையாய்
பிதாவின் பிணைப்பும் கொண்டோம் - இன்று
கவலைகொள் நேரமதிலும்
கைபேசியதுதான் கன்னந்தழுவும்
தொலைதூரம் செல்லவேண்டினும்
தொழிநுட்ப கருவியதாம் காவல் கொள்ளும்

உயிரொன்று மாய்ந்தால் அன்று
உறவுகளின் மரண ஓலம் - அவர்
மறைவுறும் வரையில் துயரம்
மாந்தரின் மனவாறுதல்கள் - இன்று
உயிரது போனால் இங்கே
ஒருவரும் இல்லை கேட்க
மயிரது விழுந்தது போல
மாந்தரிங்கே பாசாங்குரைப்பர்.

மரபிலே பண்பாடு கண்டோம் - நாம்
மரபிலே கலாசாரமும் கண்டோம் - நாம்
மரபிலே மனித மாண்பும் கண்டோம் - நாம்
மரபிலே குலம் தழைக்கவும் கொண்டோம்
சால்பூண்றிய தூணாண மரபில்
வேரூன்றிய விருட்சமான எமக்கு
மாற்றமே மரபாய் வேண்டாம் - எங்கள்
மரபே மாறாமல் வேண்டும்.

கவிஞர்/ எழுத்தாளர்
அருளானந்தம் சுதர்சன்
வீரமுனை

# 'தாயக ஒலி' பொங்கல் சிறப்பிதழ் பற்றி வாசகர்கள் தொலைபேசி மூலமாகவும், நேரடியாகச் சந்தித்துத் தெரிவித்த கருத்துக்களை இங்கே தருகின்றோம்.



திருகோணமலையில் வசிக்கும் மூத்த எழுத்தாளர், கவிஞர் திரு. ஷெல்லிதாசன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு....."தாயகஒலியின் அட்டைப்படம் மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டிருப்பது இதழுக்கு மெருகூட்டுகிறது. பேனாமுனையிலிருந்து ஆசிரியரின் தலையங்கம் நடப்புவிடயங்களை மிகவும் நேர்த்தியாகச் சொல்லிநிற்கிறது. மேலும் விடயதானங்கள் யாவும் படித்துப் பயன் பெறக்கூடிய வகையில் கோத்துத் தரப்பட்டுள்ளது. உண்மையிலேயே எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் 'தாயக ஒலி' ஆசிரியரின் இதழியல் அனுபவம் வேரூன்றியுள்ளது."

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய அதிபர் கவிஞர் ச. கணேசமூர்த்தி அவர்கள் தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தி "இப்படியான ஒரு அற்புதமான சஞ்சிகையை இலங்கையில் நான் காணவில்லை. விடயதானங்களைப் பொறுத்தளவில் மிகவும் அற்புதம். மேலும் தாயக ஒலியைத் தொடர்ந்து வாசித்து முழுமையாக முடிக்கும் வரை வைப்பதற்கு மனம் வரவில்லை. அவ்வளவுக்கு அதற்குள் இருக்கும் கருத்துக் குவியல்கள் எல்லாமே எல்லோருக்கும் பயன் தரக்கூடிய அம்சங்களாக பிரதிபலிக்கின்றன. வாழ்துக்கள்."

பிரபல மூத்த ஊடகவியலாளர் பாலசிங்கம் அவர்கள் தமது துணைவியாருடன் கொள்ளுப்பிட்டியிலிருந்து எனது வீட்டுக்கு வருகைதந்து, மேசையில் வைத்து பாவிக்கக்கூடிய பாட் மற்றும் டயறி ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கிவிட்டு.... இருவரும் "தாயக ஒலியில் விடயதானங்களைச் சுருக்கமாகத் தருவது மிகவும் பாராட்டுக்குரியது. அவசரமான உலகத்தில் வாசகர் வாசிக்கக்கூடிய சங்கதிகளைத் தொகுத்துத் தந்திருப்பது உண்மையிலேயே சஞ்சிகைக்குப் பெருமை சேர்க்கும். உங்கள் பணிதொடர வேண்டும் எமது வாழ்த்துக்கள்" என்று தெரிவித்துச் சென்றுள்ளனர்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த திரு.லிங்கம் அவர்கள் தொலைபேசியிலும் நேரடியாக சந்தித்து... "பேனாமுனையில் தெரிவிக்கப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில் மக்கள் எதிர்கொள்ளும் அவலங்கள், மிகவும் நேர்த்தியாக முன்வைக்கப்பட்டுள்ளது. சுருக்கமாக, கனதியான விடயமாக அது அமைந்திருந்தது. ஏனைய விடயதானங்கள் அத்தனையுமே சமுதாயத்திற்குத் தேவையான பயனுள்ள ஆக்கங்களாக வெளிவந்திருக்கின்றன. உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய சஞ்சிகை 'தாயக ஒலி' என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. தொடர் வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்கள்."

"அட்டைப்படம் உழவர் திருநாளின் பெருமைக்குச் சான்றுபகருகின்றது. உங்கள் அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடாகக் கொண்டு வரப்பட்ட ஆக்கங்கள் ஆழக்கடலில் மூழ்கி எடுக்கப்பட்ட முத்துக்களே. எல்லாமே நிறைவான விடயங்கள். வாழ்த்துக்கள் உங்கள் பணி தொடரட்டும்." என்று தெஹிவளையைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்திருந்தார் .

வெள்ளவத்தையைச் சேர்ந்த திரு.கே. சரவணமுத்து அவர்கள் நேரடியாகச் சந்தித்து "அட்டைப்படம், ஆசிரியர் தலையங்கம், கட்டுரைகள் மற்றும் ஏனைய விடயங்கள் யாவும் மிகவும் நேர்த்தியாக அமைந்துள்ளன. 48 பக்கத்தில் பலதரப்பட்ட விடயங்களையும் தரிசிக்க வைத்துள்ளீர்கள் பாராட்டுக்கள்" என்று கூறியுள்ளர்.

இவர்கள் மட்டுமல்ல இன்னும் பலர் பொங்கல் சிறப்பிதழைப் பற்றித் தெரிவித்துள்ளார்கள். அத்தனை நல்லுள்ளங்களுக்கும் 'தாயக ஒலி' தனது நன்றியை முன்வைக்கிறது.

-ஆசிரியர்

கட்டுரை

# கவியரசு கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களின் ஊற்றுக் கண்கள்



அகளங்கன்

தமிழ்த் திரையிசைப் பாடல்களில் தனக்க கெனத் தனிச் சிறப்புப் பெற்றவர் கவியரசு கண்ணதாசன். கவியரசின் திரையிசைப் பாடல்களின் சிறப்பைப் பலரும் பலவாறாகப் புகழ்கிறார்கள். பழந்தமிழ் இலக்கியப் பயிற்சிதான் கவியரசின் கவித்துவத்துக்கு மெருகூட்டியது என்பது மறுக்க முடியாத உண்மை.

திரை இசைக்குப் பாட்டெழுதும் வாய்ப்பு கவியரசருக்கு அவ்வளவு இலகுவாகக் கிடைக்க வில்லை. ஓரிரு பாடல்களைப் படங்களுக்கு எழுதத் தொடங்கி தனது தன்னம்பிக்கையாலும், திறமையாலும், விடாமுயற்சியாலும் முன்னேறி கொடிகட்டிப் பறந்து கோலோச்சியவர் கவியரசர்.

1948 இல் 'கன்னியின் காதலி' என்ற திரைப்படத்திற்கு திரு.எஸ்.எம். சுப்பையா நாயுடு வின் இசையில் கவியரசர் எழுதிய 'கலங்காதிரு மனமே' என்ற பாடல் தான் கவியரசின் முதல் திரையிசைப் பாடல், இப்பாடலில் பாத்திரத்தின் உணர்வை அவர் பாடலாக எழுதியிருந்தாலும், அவர் உள்ளத்து ஏக்கமும், உணர்வும் மிக அற்புதமாக வெளிப்பட்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

**கலங்காதிரு மனமே - நீ**
**கலங்காதிரு மனமே - உன்**
**கனவெல்லாம் நனவாகும்**
**ஒரு தினமே,**
**கடினப் படாமல் ஏதும்**
**கைக்கு வராது**
**கஷ்டப்படுவார் தம்மை**
**கை நழுவாது**
**அடுத்தடுத்து முயன்றால்**
**ஆகாததேது! ஆகாததேது!**

தனக்குத் தானே ஆறுதல் சொல்லி உற்சாகமூட்டி, நம்பிக்கையூட்டி இப்பாடலை எழுதினார் கவியரசர். முயன்றால்தான் முன்னே றலாம். முயற்சி குறைந்தபட்சம் "மெய்வருத்தக் கூலி" யையாவது தரும் என்ற நம்பிக்கையில் அடுத்தடுத்து முயன்று முன்னேறத் தனது மனத்திற்குத் தானே தெம்பூட்டினார் கவியரசர்.

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் .

(குறள் 619)

என்ற திருக்குறள் கவியரசரது முதற் பாடலிலேயே உட்பொருளாய் அமைந்தி ருப்பதைக் காணலாம். கவியரசரின் முதல்த் திரையிசைப் பாடலின் ஊற்றுக்கண்ணாக விளங்கியது. இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த திருக்குறள் என்பது மனங்கொள்ளாத் தக்கது.

பாரதிதாசன், அவரது தாசன் சுரதா, போன்றவர்கள் பாட்டெழுதிய காலம் அது. உடுமலை நாராயணக்கவி, கம்பதாசன், கே.டி.சந்தானம், தஞ்சை இராமையா தாஸ், மருதகாசி, கு.மா. பாலசுப்பிரமணியம் முத லானவர்கள் அற்புதமான பாடல்களைப் புனைந்து கொடுத்துக் கொண்டிருந்த காலம் அது, அக்காலத்தில் தான் கண்ணதாசன் திரை இசைக்குப் பாட்டெழுதப் போராடினார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஒருபுறம் தனது கருத்துச் செறிவான பாடல்களால், பாட்டுக் கோட்டை கட்டிக் கொண்டிருந்த காலத்தில், கண்ணதாசனுக்குக் கைகொடுத்தது, அவரது பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியே என்பது தெட்டத் தெளிவானது.

தாலாட்டுப் பாடல்களை இயற்றுவதில் தன்னிகரிலாக் கவிஞனாகக் கவியரசர் போற்றப் பட்ட காலம் ஒன்று உண்டு. "ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ" என்ற பாகப் பிரிவினை படப்பாடலும், "மலர்ந்தும் மலராத பாதி மலர்போல...." என்ற பாசமலர் படப்பாடலும், சிங்காரப் புன்னகை கண்ணாரக் கண்டாலே" என்ற மகாதேவி படப்பாடலும் எனப் பல பாடல்கள் கவியரசைத் "தாலாட்டுக் கவிஞன்" எனப் புகழ வைத்தன.

"மாலையிட்ட மங்கை" என்ற திரைப் படத்துக்குக் கதை, திரைக்கதை வசனம் எழுதி தன் ஆசை தீர அற்புதமான பதினேழு பாடல்களையும் எழுதி, தானே தயாரித்து வெளியிட்டார் கவியரசர்.

'மாலையிட்ட மங்கை' திரைப்படம் வரை கவியரசரின் திரையிசைப் பாடற் பயணம் கரடுமுரடான பாதைப் பயணமாகவே இருந்தது.

மாலையிட்ட மங்கை திரைப்படத்தில் கவியரசரின் கவித்துவத்தில் "செந்தமிழ்த் தேன் மொழியாள்" "எங்கள் திராவிடப் பொன்னாடே", "நானன்றி யார் வருவார்", "மழைகூட ஒரு நாளில் தேனாகலாம்". "திங்கள் முடி சூடுமலை தென்றல் விளையாடு மலை" முதலான பாடல்கள் தித்திக்கும் தேன்பாகச் செவிகளில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

**மழைகூட ஒரு நாளில் தேனாகலாம்**
**மணல்கூட சில நாளில் பொன்னாகலாம்**
**ஆனாலும் அவையாவும் நீயாகுமா?**
**அம்மாவென் றழைக்கின்ற சேயாகுமா?**

என்ற "மாலையிட்ட மங்கை படப் பாடல், மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் இராம மூர்த்தி இரட்டையர்களின் அற்புதமான இசையில் பெரும் புகழ் பெற்றது. இப்பாடலை சொல்லின் செல்வர். ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் வெகுவாக இரசித்துப் பாராட்டியதோடு கவியரசரின் எதிர்காலம் சிறப்பானது. தமிழ்க் கவிதை உலகுக்கு பெருவளம் சேர்க்கும் என்று நம்பிக்கையோடு தான் தொகுத்த 'தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்ற நூலின் இறுதியில் இப்பாடலையும் இணைத்துக் கவியரசருக்கும் சிறப்புச் செய்தார்.

இப்பாடல் கண்டி பேராதனைப் பல்கலைக்கழக கலைமணி வெளிவாரிப் பட்டப் படிப்பு இறுதித் தேர்வு பாடவினாத்தாளில் (இறுதித் தேர்வு - B.A) கவிதைத் திறனாய்வுக்குரிய வினாவாக கேட்கப்பட்டிருந்தது என்பது இப்பாடலுக்கும் கவியரசர் கண்ணதாசனுக்கும் அங்கீகாரம் அளிப்பதாக அமைந்தது.

தாலாட்டுக் கவிஞன் என்ற முத்திரையோடு முன்னேறிய கவியரசர் பின்பு 'காதற் கவிஞன்' எனப் போற்றப்பட்டார். 'நான் பேச நினைப்பதெல்லாம்" ,"பொன்னை விரும்பும் பூமியிலே", "பொன் என்பேன் சிறு பூ என்பேன்", "உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல","ஓராயிரம் பார்வையிலே.." முதலான பல பாடல்கள் கவியரசரைக் காதற் கவிஞன் எனப் போற்றச் செய்தன.

அடுத்த கட்ட வளர்ச்சியாக கவியரசர் தத்துவக் கவிஞனாகக் கோலோச்சினார். "பூச்சியத் துக்குள்ளே ஒரு ராச்சியத்தை ஆண்டுக் கொண்டு "ஆசையே அலை போலே", "ஒண்ணுமே புரியல்லே உலகத்திலே", "பிறக்கும் போதும் அழுகின்றாய்..." ,"மயக்கமா கலக்கமா...","சட்டி சுட்டதடா கைவிட்டதடா", "போனால் போகட்டும் போடா","ஆட்டுவித்தால் ஆரொருவர்", "எந்த ஊர் என்றவனே.." முதலான பல பாடல்கள் கவியரசரைத் தத்துவக் கவிஞனாக்கின.

## பாரதியும் வள்ளுவரும்

திரைஇசைப் பாடல்கள் எழுதுவதற்கு வாய்ப்புக் கிடைக்காமல், மூத்த புகழ் பூத்த கவிஞர்களான உடுமலை நாராயணக்கவி போன்றோரால் உதாசீனப் படுத்தப்பட்டு, அவமானப் படுத்தப்பட்டு, மனமொடிந்திருந்த காலத்தில் கவியரசரின் மூத்த சகோதரர் ஏ.எல். சீனிவாசன் 'அம்பிகாபதி' படத்தைத் தயாரித்தார்.

இப்படம் ஏற்கனவே தியகராஜ பாகவதர் நடித்து, இளங்கோவனின் வசன வளத்தாலும், பாடற்சிறப்பாலும் பெரும் வெற்றி பெற்றிருந்தது.

மீண்டும் இப்படத்தைத் தயாரிக்கும்போது, முன்னையதைவிடச் சிறப்பானதாக இப்படம் அமைய வேண்டும் என்று முயன்று சிவாஜி கணேசன் பானுமதி ஆகியோரை அம்பிகாபதி, அமராவதியாக நடிக்க வைத்துத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள்.

கவியரசர் தன் தமையனார் ஏ.எல். சீனிவாசனி டம் இப்படத்தில் பாட்டெழுத வாய்ப்புக் கேட்டுக் கிடைக்காததால் மிகவும் மனமொடிந்திருந்தார்.

"உனக்கெல்லாம் பாட்டெழுத வருமா" என்று உதாசீனப்படுத்தப்பட்ட கவியரசர் மனம் வருந்தி இருந்த நேரத்தில் அவரது நண்பர்கள் சிலர் ஏ.எல். சீனிவாசனிடம் கதைத்த போது ஒரே ஒரு காதற்பாடல் எழுதச் சம்மதித்தார்.

தொடரும்.....

# இளைஞர்களை எச்சரிக்கிறது! சுவீடன் ஆய்வு:





செல்போன் பாவிப்பதால் இளைஞர்களுக்கு மன அழுத்தம் அதிகரிக்கும் என்கிறது அந்த ஆய்வு. செல்போன் பயன்படுத்துவதால் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் மன அழுத்தம் அதிகரிப்பதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இதனால் அவர் களின் கல்வி பாதிக்கப்படுவதுடன், தூக்க மின்மை, பொறுப்பற்ற மனப்போக்கு போன்ற பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

சுவீடன் நாட்டில் 14 வயது முதல் 20 வயதுக்குட்பட்ட 21 மாணவர்களிடம் செல்போன் களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் அதிகநேரம் செல்போனைப் பயன்படுத்தும் 20 மாணவர்கள் மன அழுத்தம், ஆழ்ந்த தூக்கமின்மை, தவறான மனப்போக்கு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இவர்களால் படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்த முடியாததுடன், முக்கிய விடயங்களில் கூட பொறுப்பில்லாமல் செயற்படும் மனப் போக்கும் இவர்களிடம் காணப்படுவது வேதனை தரும் விடயமாகும்.

புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்று போதைக்கு அடிமையாதல் போல சில இளை ஞர்கள் செல்போன்களைப் பயன் படுத்துவதற்கும் அடிமையாகியுள்ளனர். இதே நிலை தொடர்ந்தால் அவர்களது உடல் நிலையையும் இது பாதிக்கும் என்பதும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. எனவே செல்போனை அதி கம் பயன்படுத்துவதால் ஏற்ப டும் தீமைகள் குறித்து இளைஞர்களிடையே பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவுத்துள்ளனர்.

கர்ப்பிணிகளுக்கும் பாதிப்புண்டு. கர்ப்பமாக இருக்கும் பெண்கள் அதிக அளவில் செல்போன் பயன்படுத்தினால் கருவில் இருக்கும் குழந்தை களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று கண்ட றியப்பட்டுள்ளது. மேலும் 7 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் செல்போன்களை அடிக்கடி பயன் படுத்துவதால் அவர்களது உடல்நிலை பாதிக்கப்படும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர்.

சிமாட்போன் பாவனையில் அடிமையாகி யிருக்கும் எமது சமுதாயம், ஆதாளபாதாளத்தில் விழுந்து கரைசேர முடியாது தவிர்ப்பதைப் பார்க்கும்போது "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என்று அந்த கவிஞன் சொன்னது எவ்வளவு பொருந்தும். போதையிலும் மிகமோசமான அடிமைத்தனத்தையும், பொருளாதார சமூக கலாசார பண்பாட்டுப் சீரழிவுகளையும், உள உடல்ரீதியான பாதிப்புக்களையும் ஏற்படுத்தி யிருக்கும் இந்தச் சாதனம் மாணவர்களை ஆட்டிப்படைத்து அவர்களின் கல்வி முன் னேற்றத்திற்குத் தடையாய் இருப்பதும் கண்டறி யப்பட்டுள்ளது.

சிந்தனைக்கு விருந்து

# தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல்

ந.மு.மோகன்

**"ஒற்றையாகத் தோற்றமளிக்கும் ஒரு சமூக நிகழ்வை இரண்டாகப் பகுத்து அவ்விரண்டு பக்கங்களுக்கிடையிலான உறவுகளைப் பயிலு வதே இயங்கியல்" என்று லெனின் வரைய றுப்பார்.**

தமிழ் அடையாள அரசியல் என்பது ஒற்றைப் படையான, ஒருபடித்தான கருத்தாக்கம் அல்ல, அதனுள் பல்வேறுபட்ட போக்குகள் புதைந்தும் வெளிப்பட்டும் கிடக்கின்றன. அதனுள் பல சமூக வர்க்கங்கள், சாதிகள் ஆகியவற்றின் நலன்களும் மதங்கள் மற்றும் மொழி வழிக் கருத்தியல்களும்

திணிந்து கிடக்கின்றன. ஆதிக்க அரசியலும் விடுதலை அரசியலும் குமைந்து கிடக்கின்றன.

ஆறுமுகநாவலர் ஈழப்பின்னணியில் துவக்கிய ஆகமச் சைவ மீட்டுருவாக்கம், தமிழ்ச் சைவப் பாடசாலைகள் நிறுவியமை, அச்சுயந்திரத்தை நிறுவி தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள், கண்டனப் பிரசுரங்கள் போன்றவற்றை வெளியிட்டமை கிறிஸ்தவ பாதிரிமார்களின் மதப் பிரசாரங்கள், திண்ணைப் பள்ளிக்கூடங்களின் பங்களிப்புக்கள், சுவாமி விபுலானந்தர் இசை ஆராச்சி மூலம் தமிழரின் இசைமரபை நிலை நிறுத்தியதுமல்லாமல், தமிழ்ப் பள்ளிக்கூடங்களை நிறுவி ஏழைமக்களின் கல்விக்கு வித்திட்டமை, சேர்.பொன்.இராமநாதன், கிண்டுபோட் இராசரத்தினம் ஆகியோரின் சைவத் தமிழ்க் கல்விக்கான பங்களிப்புக்கள், தமிழ் நாட்டில் திராவிட மொழிக்கான முன்னெடுப்புக்கள், தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம் என்பவற்றின் பிரதிபலிப்புக்களும் அன்னியரிடமிருந்து கற்றுக்கொண்டு, இறக்குமதி செய்யப் பட்ட இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, புதுக்கவிதை என்பவற்றின் வளர்ச்சியும் ஈழத் தமிழர் போராட்டங்கள், யாழ்ப்பாணத்தில் வெகுஜன இயக்கப் போராட்டங்களும், என நீண்ட ஒரு வரலாற்று வரிசையினை இத்தலைப்பின் கீழ் நோக்கலாம். மேலும் இங்கே குறிப்பிடப்படாத வேறு அம்சங்களும் இருந்திருக்கின்றன.

மேற்குறித்த போக்குகளில் சில, தமிழ் அடையாள அரசியலை மேட்டுக்குடி சார்ந்ததாக உருவாக்க முயன்றுள்ளன. இன்னும் சில, அதனை அடித்தள மக்களை நோக்கி இட்டு வந்திருக்கின்றன. வர்க்க உணர்வுகள் காலத்துக்குக் காலம் தலை தூக்கி வந்தமையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

அத்தகைய ஒரு முறையியலின் படி மேலே வரிசைப்படுத்திய இயக்கங்களும் போக்குகளும் ஒருவகைப் பண்பாட்டு அரசியலை முன்னிலைப்படுத்தியுள்ளன. இனம், மொழி, சமயம் போன்ற அடையாளங்களின் வழிப்பட்டவையாக இவை உள்ளன. மொழிவரலாறு, தமிழர் வரலாறு, என்பவற்றின் பால் அக்கறை கொள்வது, எமது நாட்டுப்புறகலை இலக்கிய வாழ்மொழிவழக்காறுகள் அழிந்துவிடாது புத்தாக்கம் செய்வது, எமக்கான தனித்துவ பண்பாட்டு கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பது, போன்ற இன்னோரன்ன விடயங்கள் பால் அக்கறை காட்டுவதும் அவசியமாகிறது.

"இதுதான் தமிழ் அடையாளம், இவர்கள்தான் அதனைச் சரியாகப் புரிந்துகொணடவர்கள்" என்று நம்மால் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. நாம் தொடர்ந்து அடுத்தடுத்து தேடிக்கொண்டிருக்கும் சமூக விடுதலை வடிவங்களின் ஒரு குறியீடாகக் கூட அது இருக்கலாம். இதுவரையில் நாம் அறிந்த ஒன்றாக இல்லாமல், நாம் அடைய விரும்பும் கனவு தேசமாகக்கூட இருக்கலாம். நாம் அதனைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். அதற்காக உண்மையாகப் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதே எல்லாவற்றையும் விட முக்கியமானது.


## வாசகப் பெருமக்களுக்கு அன்பான வேண்டுகோள்

### 'தாயக ஒலி' சந்தா விபரம்


ஒரு வருடச் சந்தா : ரூபா *1000* (அஞ்சல் செலவுடன்)

வெளிநாடு : $30(U.S), £20(U.K)

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

***சந்தாப் பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு உதவுங்கள்.***

***சந்தா அனுப்ப வேண்டிய***
**வங்கிக் கணக்கு விபரம்**
T.Sivasupramaniam
A/C No : 8100086490
Commercial Bank
Wellawatte, Sri Lanka




# Easan & Co.

## Chartered Management Accountants

**SPECIALIST IN ARRANGING COMMERCIAL LOANS**

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting

**S. Eswaranathan ACMA**
**(Easan)**

196, Merton High Street
South Wimbledon,
London SW19 1AX

Tel : 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 078 0122 7017

18 ஆவது ஆண்டில்...

# செல்வராஜா

## கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

உங்கள் எண்ணம் போல் நகைகளையும் புடவைகளையும்
தெரிவு செய்து கொள்ளுங்கள்

**பொன்னுருக்கலுக்கான வசதிகள்
செய்து தரப்படுவதுடன் தாலிக் கொடிகள்
அனைத்தும் தங்கத்தின் விலைக்கே
செய்து தரப்படும்**



**கூறைப் புடவைகள்
பட்டுப் புடவைகள்
மற்றும் சீக்கூன் அனைத்தும்
30% விலைக்கழிவில் !**

எமது 17 ஆவது ஆண்டு நிறைவை
முன்னிட்டு சித்திரைப் புத்தாண்டு,
தீபாவளி ஆகிய பண்டிகைக்
காலத்தில் விஷேட விலைக்கழிவு
வழங்கப்படும்.

# SELVARAJA

## Gold House & Textiles

**Exclusive Designer Jewellery & Sarees**

***You are the best
For you we are the best***

**162B, Mitcham Road, London SW17 9NJ
Tel: 020 8767 3795 | 07825 005 269**


Western Jewellers
Jewellers & Gem Merchants
வகை வகையான வடிவங்களில்
தரமான தங்க நகைகளை
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள் உங்கள்
வெஸ்டன் ஜுவல்லர்ஸ்க்கு
First Tamil Jewellery Shop in UK
Specialise in 22ct. Gold, White Gold, Platinum & Diamond Jewellery
TOOTING BRANCH
230, UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW
UNITED KINGDOM
TEL: 020 8767 3445
WEMBLEY BRANCH
5, PLAZA PARADE
EALING ROAD, WEMBLEY
HA0 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909
SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS SILK EMPORIUM SAREES
SILK EMPORIUM
122, Upper Tooting Road,
London SW 17 7EN, United Kingdom,
Tel: 020 8672 1900
Opening Hours : Monday-Saturday (10.30 am. 6.30 pm.) Sunday (11.30 am. - 6.30 pm.)

Luckyland

# BISCUIT MANUFACTURERS




**NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA**

**TEL: +94 081 2420574, 2420217 FAX : +94 081 2420740**

**E-mail: luckyland@sltnet.lk**